பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை (21.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:025

# புலிகள் அதிரடித் தாக்குதல்
# இரணைமடு முன்னரங்கு மீட்பு!

## 40 படையினர் பலியானதாக அறிவிப்பு

கிளிநொச்சி, டிசெம்பர் 21

முறிகண்டி - இரணைமடு முன்னரங்கப் பகுதியில் படையினர் கைப்பற்றிய இரண்டு கிலோ மீற்றர் தூரத்தை அதிரடித் தாக்குதல் ஒன்றின் மூலம் தாம் மீட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் நேற்று அறிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் 40 படையினர் கொல்லப்பட்டதாகவும், பத்துச் சடலங்களைத் தாம் மீட்டதாகவும் அவர்கள் அறிவித்திருப்பதாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

முறிகண்டியிலுள்ள இரணைமடுப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட அதிரடித்தாக்குதல் மூலம் இந்த முன்னரங்கு மீட்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை சிறிலங்காப் படையினரால் கைப்பற்றப்பட்ட முன்னரணே விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலினால் படையினர் பலத்த இழப்புக்களுடன் அவர்கள் கைப்பற்றி இருந்த அரண் பகுதியை கைவிட்டு ஓடினர்.

இதன்பின்னர் அந்த இரண்டு கிலோமீற்றர் நீளமுள்ள முன்னரண் பகுதி விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது.

இந்தப் பகுதியில் இருந்து படையினரின் சடலங்களும் படையப் பொருள்களும்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய உழவு இயந்திரம்

முல்லைத்தீவு, டிசெ.21

முல்லைத்தீவு, குமுழமுனையில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிறிலங்காப் படையின் உழவு இயந்திரம் ஒன்று சிக்கியது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தில் சிறிலங்காப் படையினரை ஏற்றிச் சென்ற உழவுஇயந்திரம் கண்ணி வெடியில் சிக்கியது.இதில் சென்ற படை யினருக்கு இழப்பு ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டது(அ)

## புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிவந்த கப்பலை தாக்கி அழித்ததாக கடற்படை தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.21

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை ஆயுதங்களை ஏற்றிவந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றினை கடற்படையினர் தாக்கி அழித்திருப்பதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் குறைந்தது இருபது கடற்புலிகள் கொல்லப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்தது.

கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது உதவி புரிவதற்காக வந்த விடுதலைப் புலிகளின் நான்கு வேகப் படகுகளையும் கடற்படையினர் தாக்கி அழித்திருப்பதாக கடற்படைப் பேச்சாளர் கொமடோர் மகேஸ் கருணாரத்னா கூறினார்.

கடற்படையினரின் கரையோரக் காவல் பணியினர் சுற்றுக் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, முல்லைத்தீவில் இருந்து சுமார் எழுபது கடல் மைல் தொலைவில் உள்ள இந்த சிறிய கப்பலை அவதானித்து அதனை நெருங்கிச் சென்ற போது கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியபடி கப்பல் வேகமாக தப்பியோட

(20 ஆம் பக்கம் பார்க்க)

## பரா வெளிச்சத்துடன் விமானத் தாக்குதல்கள்

முல்லைத்தீவு, டிசெ.21

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மற்றும் வாடிகள் மீது விமானப்படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு கரையோரப் பகுதி மீது

(20 ஆம் பக்கம் பார்க்க)

### மன்மோகன், சோனியா கொடும்பாவி எரிப்பை ஆட்சேபித்து
## காங்கிரஸ் ஆதரவாளர் நடத்திய மறியல் போராட்டத்தில் தங்கபாலு மற்றும் தலைவர்கள் பொலீஸாரால் கைது!

சென்னை, டிசெ.21

மன்மோகன், சோனியா, தங்கபாலு ஆகியோரது கொடும்பாவிகள் சென்னையில் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளிலும் காங்கிரஸார் வீதி மறியல் போராட்டங்களை நடத்தினர். அதன் போது தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு உட்பட நூறுக்கும் மேற்பட்ட காங்கிரஸார் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப்புலிகளை ஆதரித்தும் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரைக் கொச்சப்படுத்தியும் பேசியதாக பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் டி.எஸ். மணி திரைப்பட இயக்குநர் சீமான் ஆகியோர் வெள்ளியன்று கைது செய்யப்பட்டனர்.

இதைக் கண்டித்து மன்மோகன், சோனியா தங்கபாலு ஆகியோரின் கொடும்பாவிகளை பெரியார் தி.க.வினர் சென்னை ராயப்பேட்டை மணிக்கூண்டு அருகே நேற்று எரித்தனர். அதனைக் கண்டித்து காங்கிரஸார் அண்ணா சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அதனை அடுத்து காங்கிரஸாருக்கும் பெரியார் தி.க.வினருக்கும் இடையே மோதல் ஏற்படும் சூழல் உருவானது. இத

(20 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா உட்பட ஏழு நாடுகள் இலங்கை இராணுவத்துக்கு உதவுவது அம்பலம்
### கூட்டமைப்பு எம்.பி.கண்டனம்

கொழும்பு, டிசெ.21

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உட்பட பல வெளிநாடுகள் இலங்கை இராணுவத்துக்கு உதவி வருவதும்-

இனிமேல் உதவுவதற்குத் தயாராக இருக்கின்றன என்பதும்-

அந்த நாடுகளின் தூதரகங்களைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் வன்னிப் படை முகாங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள இலங்கை படை அதிகாரிகளுடன் ஆராய்ந்திருப்பதன் மூலம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது ஆகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்த மூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் எனக் கூறிக்கொண்டு இலங்கை அரசு தமிழ் இன அழிப்பை செய்து வருகின்றது. பல் குழல் பீரங்கி, கொத்தணிக் குண்டு, வான் வழித்தாக்குதல் என பல்வேறு தாக்குதல் உத்திகளை அரசு பயன்படுத்திவருகின்றது. இராணுவம் தமிழ் மக்கள் மீது இன அழிப்பை இன்று செய்து வருவதன் பின்னணியில் வெளிநாடுகள் இருந்து வருகின்றன. என பல தடவைகள் நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். அதன் உண்மை நிலைமை தற்பொழுது நிரூபணமாகியுள்ளது .

(20 ஆம் பக்கம் பார்க்க)

## நிதி நிர்வாகம் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் நாடாளுமன்றுக்கு மட்டுமே
### வேறு எந்த அமைப்புக்கும் இல்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, டிசெ.21

எமது நாட்டில் நிதி நிர்வாகம் தொடர்பான அனைத்து முடிவுகளையும் நாடாளுமன்றமே மேற்கொள்கிறது. வேறு எந்த அமைப்புகளுக்கும் அந்த அதிகாரம் கிடையாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன.

ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இது குறித்து மேலும் கூறியதாவது:

நிதி நிர்வாகம் தொடர்பான அனைத்து முடிவுகளையும் நாடாளுமன்றம் தான் மேற்கொள்ளும். ஸ்ரீலங்காவின் இதர அமைப்புக்களுக்கு அதற்கான அதிகாரம்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக தமிழ் மாணவன் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தல்

கொழும்பு, டிசெ. 21

பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொரளைப் பகுதியில் வைத்து வெள்ளை வ்ானில் வந்த இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த [illegible] (வயது 23) என்ற மாணவன் கடந்த வெள்ளியன்று பொரளையில் உள்ள கடவுச் சீட்டு அலுவலகத்துக்குச் சென்ற வேளை, பொலிஸ் சீருடையிலும், சிவில் உடையிலும் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டார் எனக் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மாணவனது உறவினர்கள் பிரதி அமைச்சர் இராதகிருஷ்ணனிடம் முறையிட்டுள்ளனர். (அ-2-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDWARD MAKES RED OINTMENT

## றெட் ஒயின்மென்ற்

நீர்ச்சிரங்கு, புண், புரை, பருக்கள், கட்டு, படுவன், அக்கி, கிரந்தி அவியல், தலை அவியல், சொறி, தீச்சுட்ட புண், வெட்டுக்காயம், உரோஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்கவல்லது.

**றெட் ஒயின்மென்ற் எனக் கேட்டு வாங்குங்கள்**
**எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்**

டாக்டர் கபிரியேல் எட்வேர் (L.A.M.P., R.I.M.P.)
வைத்தியாச்சாரி, வைத்தியபூபதி, கலாயோதி
63, குருசோ வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 021 222 8171
(80786) edward makes@hotmail.com



## நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

அதிரடி விலைக்கழிவுகளுடன்
உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express

5% தொடக்கம் 20% வரையான விசேட கழிவு

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

## திருமுருகன் கொம் நெற்

289, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227636



## மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

மெய்கண்டான் கலண்டர்
கரிகணன் கலண்டர்
சீவம் டயறிகள்
மனேஜ்மென்ட் டயறி (சாதாரணம், பேஸ்)
மனேஜ்மென்ட் லொக் டயறி
டெஸ்க் டயறி (சாதாரணம்)
டெஸ்க் டயறி பேஸ்
சிலிம் டயறி
விளம்பரக்கலண்டர்

**பேப்பர் ஹவுஸ்,**
300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(வி/556177)


## பால் கொள்வனவு வீழ்ச்சி

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தையடுத்து யாழ்.மாவட்ட கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நாளாந்த பால் கொள்வனவு வீழ்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் நாளாந்தம் ஒரு லட்சம் லீற்றர் பால் சகல கிளைகளூடாகவும் கொள்வனவு செய்யப்பட்டு வந்தது எனவும் தற்போது 80 ஆயிரம் தொடக்கம் 90 ஆயிரம் லீற்றராக அது குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-72)


## வாழ்த்துகின்றேன்

இன்று நடைபெறவுள்ள G.I.T (A/L 2009) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவச் செல்வங்கள் சிறந்த பெறுபேறுகளை அடைய வேண்டுமென வாழ்த்துவதுடன், இறைவனது கிருபை உங்களுக்கு கிடைக்க வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

மேலும் கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து உதவிய இயக்குநர்கள், நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு நன்றிகள் உரித்தாகட்டும்.

**Mr.S.S.SELVA**
(கணனி ஆசிரியர்)



## மணமகன் தேவை

1973 ஆம் ஆண்டு, பூரம் நட்சத்திரம் கொண்ட B.Com ஆசிரியைக்கு தகுதியான மணமகன் தேவை.
தொடர்பு:-பஞ்சாட்சரம்
021 459 1106, 060 221 6378



## விற்பனைக்கு

நாற்பத்தைந்து நாள்கள் நிரம்பிய தடுப்பூசி ஏற்றப்பட்ட அல்சேஷன் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக் குண்டு
தொடர்பு:-R.ருபன்
இல:-06, கடுக்காயடி வீதி,
நல்லூர்.



## Spoken English & Grammar

அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்
O/L எடுத்த மாணவர்களுக்கான விசேட வகுப்பு
காலம்:- 2 மாதம் (தினசரி 2hrs Class)
ஆரம்பம்:- 24.12.2008
By: Mr.B.Ruban (A/L English Teacher & BBA)
திரு ரிபூசன் சென்ரர், கோண்டாவில் (8a.m)
JTI, 45.Clock Rd, Jaffna (10a.m)
திலக் கல்வி நிலையம், இணுவில் (3 p.m)
(80983) தொ.பே: 0779785749



## கோழிக்குஞ்சு விநியோகம்

Pirima சிகப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் Bahira புறொயிலர் குஞ்சுகள் 22.12.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ராஜீவ், நாவலி வீதி, ஆனைக்கோட்டை
★மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★சிற்றிபாம் றேடர்ஸ், கல்வியங்காடு.
★ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.





## வெளிநாடுகளில் உயர்கல்வி

பெலாரூஸ் (Belarus), போலந்து (Poland), ரஷ்யா (Russia), உக்ரைன் (Ukraine), மலேஷியா (Malaysia), சிங்கப்பூர் (Singapore)

- MBBS/ MD ஆங்கிலம் (6 வருடங்கள்)
- சகல துறை கற்கை நெறிகள் (மாணவரின் விருப்பு, நிதி நிலைமைக்கேற்ப கற்கை நெறி தெரிவுகள்)
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.
- 100% விசா உத்தரவாதம், வங்கிநிலுவைகள், ஸ்பொன்சர் தேவையில்லை.
- விடுமுறை Seminar போன்றவற்றிற்கு Germany, Poland போன்ற நாடுகளுக்கு சென்று வர ஏற்பாடுகள்.

**OVERSEAS STUDENT PROGRAMME**
இல.02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777250555, 021 222 9042


## சுகாதார அலுவலர் நாளை சிரமதானம்

சாவகச்சேரி வைத்தியசாலையில் நாளைதிங்கட்கிழமை சிரமதானப்பணியொன்று நடைபெற உள்ளது.

வைத்தியசாலை மற்றும் சுகாதாரப் பணிமனை அலுவலர்களுடன் சாவகச்சேரி நகரசபைப் பணியாளர்களும் இச் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

ஆர்வமுள்ளபொது மக்களும் இச் சிரமதானப் பணியில் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## பாலசுந்தரம் சோமசுந்தரம்

தூதாவளை, கரணவாய், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமாகிய பா.சோமசுந்தரம் 17.12.2008 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பாலசுந்தரம் (அமரர்) - இலட்சுமி தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரனும் அழகம்மாவின் அன்புக் கணவரும் கிருபாகரன் (கனடா), பிரபாகரன் (லண்டன்), சுதாஜினி (சுவிஸ்), விஜிகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தம்மா, கலைஞானசுந்தரம், அமரர் அருளம்மா ஆகியோரின் சகோதரரும் இராமலிங்கத்தின் உடன்பிறவா சகோதரரும் சந்தனம், நாகலிங்கம் (லிங்கம்ஸ்), சிவபாதசுந்தரம், நாகராசா (சின் பொன் - வவுனியா), தங்கராசா, கணபதிப்பிள்ளை, நடராசா, புஸ்பலீலா ஆகியோரின் மைத்துனரும், சுரேஸ்தரன் (சுவிஸ்) கல்பனா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சஜானா, சஜித், கலின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று 11 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.நாகலிங்கம் (மைத்துனர்).
077 6008213
தூதாவளை, கரணவாய், கரவெட்டி.

## வேலுப்பிள்ளை கதிரேசு

சராசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கதிரேசு நேற்று (20.12.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை, சின்னத்தம்பி, சின்னம்மா, மாணிக்கம், பறுவதபத்தினி ஆகியோரின் சகோதரரும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் வேலாயுதம், தேவராணி காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசந்தி, ஜெயந்தி, பாஸ்கரன், சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகுலபாலன், கணேசலிங்கம், உருத்திரகுமார் ஆகியோரின் மாமனாரும் கோகுலவாசன், மதுரந்தி, கோகுலறூபன், ரதீபன், கனுஷ்ரிகா, திருஷ்டிகா, சோகிதன், மதுமதன், தர்மிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோபாலகிருஷ்ணன் (மருமகன்).
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

## திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம்

இளைப்பாறிய ஆசிரியை (சிவம் வாத்தியார், குப்பிழான்)



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம் நேற்று(20.12.2008)சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா கனகரத்தினத்தின் (உதவி வைத்திய அதிகாரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சிவகங்கை தம்பதியரின் அன்பு மகளும் சுப்பையா - தெய்வானைப்பிள்ளை தம்பியரின் அன்பு மருமகளும் கருணாகரன், மனோகரன், சிவாஜினி, காலஞ்சென்ற ஞானகலாகரன் மற்றும் சிவஞான பிரகாசினி (தேயா) ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி க.ஜெனி, திருமதி ம.அன்புமலர் ஆகியோரின் அருமை மாமியும் காலஞ்சென்ற திருமதி கனகாம்பிகை நல்லையா மற்றும் கலாநிதி துரைசாமி, திருமதி மகேஸ்வரி சிவசம்புநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் மனோஜா, ஞானகலாதரன், வனஜா, ஸ்ரெப்னி, ஜெஹன், ஜெனிபர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நோஆ, மானசா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று(21.12.2008)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12 1/3, அருத்துசா லேன்,
கொழும்பு - 6,
தொ.பே.: 011 2360615

தகவல்:
க.மனோகரன் (மகன்).


கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....
மாபெரும் பரிசுகளுடன்
கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு
**சிறிலங்கா இன்சூரன்ஸ்**
*MAK Cost Cutter Super Market*
உடன் இணைந்து நடத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
**18.12.2008 முதல் 18.01.2009 வரை**
*You are Safer with the Leader*
என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை
பொங்கல் வரை
உங்களின் காலவாதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்
விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிர்ஷ்டப் பங்குலாபம்
வருடாந்த ... வரையான பரிசில்கள்
(நிபந்தனைகளிற்குட்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத பலவகை அனுபவங்களைத் தந்த பொல்லாத புயலும் பொங்கிவந்த வெள்ளமும்

மழை எப்போது பெய்யும்! மண் எப்போது செழிக்கும் என்று மக்கள் காத்திருந்த காலம் மலையேறிப் போய்விட்டது. இன்று சிறுமழை பெய்தாலே பயந்துபோய் மரக்கிளைகளை வெட்டுவதும், அத்தியவசியப் பொருள்களை வாங்கிக் குவிப்பதும், தம் சொந்தங்களை எல்லாம் ஏதாவது பாதிப்பா? என்று விசாரிப்பதும் சாதாரணமாகி விட்டது. இந்த அளவுக்கு மக்கள் மனதில் ஆழமான, மாறாத வடுவை ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கின்றன 'நிஷா' புயலும், பெருமழையும். இந்த இரண்டினதும் கூட்டிணைவால் ஏற்பட்ட அனர்த்த அனுபவங்கள் சில இங்கே விவரிக்கப் படுகின்றன.

### "அனர்த்தங்களின் பாதிப்புக்களைக் குறைக்க தொலைநோக்கும் செய்நேர்த்தியும் தேவை"

**பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்**

அன்றைக்குப் பெய்த பெருமழை, ஏழை, பணக்காரன் என்ற பேதமில்லாமல் எல்லோருக்கும் ஏதோ ஒரு விதத்தில் பாதிப்பை ஏற்படுத்திவிட்டே சென்றிருக்கின்றது. இயற்கைக்கு முன்னால் எதுவுமே ஈடுகொடுக்க முடியாது என்பதை மிகத் தெளிவாக மழை உணர்த்தியிருக்கிறது. இதற்கு உதாரணமாக மழை பெய்த நாள்களில் எனக்கு நிகழ்ந்த சம்பவங்களையே சொல்லலாம்



என்னிடம் எல்லாவித வசதிகளும் உண்டு. மின்சாரத்தைப் பெறுவதற்கு சாதாரண மின்னிணைப்புத் தவிர சூரிய மின்கலம், பற்றறி என்பன கூட உண்டு. ஆனால் மழை பெய்தபோது இலங்கை மின்சார சபையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. போதிய வெளிச்சமின்மையால் சூரியக்கலங்களும் கையை விரித்துவிட்டன. இவ்வளவு ஏன்? வாங்கி வைத்திருந்த பற்றறிகள்கூட செயலற்றுப்போய் விட்டன. வானொலி மூலம் செய்திகளைக் கேட்கவோ, வெளிச்சத்துக்காக மின்குமிழ்களை ஒளிரச்செய்யவோ முடியாது போய்விட்டது.

ஒன்றுக்கு மூன்று தொலைபேசிகள் இருந்தும் அந்த அவசரநேரத்தில் அவையும் தொழிற்படாது முரண்டு பிடித்தன. நான் எவ்வளவோ முயன்றும் மழைநீர், தூவானம் என்பவற்றால் மோட்டார் சைக்கிளும், காரும் இயங்குவதற்கான அறிகுறியையே காட்டவில்லை. இதனால் வீட்டிலும் இருக்க முடியாது. வெளியிலும் செல்ல முடியாத ஒரு திரிசங்கு சொர்க்க நிலைதான் ஏற்பட்டது.

வெளியே சென்றால்தான் உணவுக்கு ஏதாவது செய்யமுடியும். வீட்டிலும் அன்றைக்கென்று மண்ணெண்ணையும் இல்லை. சமையல் வாயுவும் (Gas) மிகச் சொற்பமே கையிருப்பில் இருந்தது. அத்தோடு எனக்கு சமைக்கத் தெரியாதென்பது இன்னொரு விடயம்.

கந்தர்மடத்தில் உள்ள அக்கா வீட்டில்தான் நான் சாப்பிடச் செல்வதுண்டு. ஆனால் அவர்களின் வீடு சற்றுப்பள்ளமான பிரதேசத்தில் இருந்ததால் அவர்களின் வீட்டுக்குள்ளும் வெள்ளம் புகுந்து, அவர்களும் வேறெங்கோ சென்றுவிட்டார்கள். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, வெள்ளத்தில் நீந்தியபடி சென்றாலும் பிரயோசனம் ஏதுமில்லை.

**"இரண்டு நிமிட 'நூடில்ஸ்'தான் எனது பசியைப் போக்கியது"**

இந்தநேரத்தில் கடவுள்போல மழை பெய்த நாள்களில் எனது பசியைத் தணித்தது இரண்டு நிமிட 'நூடில்ஸ்'தான். கொஞ்ச நஞ்சமிருந்த சமையல் வாயுவின் உதவியுடன் இரண்டு நாள்களும் எனது உணவுத் தேவையை அந்த இரண்டு நிமிட நூடில்ஸ்தான் நிவர்த்தி செய்தது. அந்த நேரத்தில் இந்த நூடில்ஸைக் கண்டு பிடித்தவனுக்கு 'நோபல்' பரிசே கொடுத்துவிடலாம் போல தோன்றியது.

மழை ஓய்ந்து வெளியே வந்து பார்த்தபோது ஏற்பட்டிருந்த சேதம் இதுநாள்வரை நான் பார்த்திராதது. எத்தனையோ வருடங்கள் பழமை வாய்ந்த பெருமரங்கள் எல்லாம் சாய்ந்தும், மின்கம்பிகள் அறுந்தும், மதில்கள், குடிசைகள் எல்லாம் இழந்தும் குடாநாடே தலைகீழாய் மாறிப்போனதுபோல இருந்தது. மின்சாரம், தொலைபேசி, எரிபொருள், உணவு விநியோகம் என்பன முற்றாகத் தடைப்பட்டிருந்தன. இதனால் மக்களின் இயல்புநிலை முற்றாக ஸ்தம்பித்துப் போயிருந்தது. அப்படியானால் வருடம் முழுதும் பெருமழை வீழ்ச்சியுள்ள முதலாம் உலக நாடுகளெல்லாம் எப்படி அபிவிருத்தியை நோக்கி முன்னேறுகின்றன? அந்த நாடுகளிலெல்லாம் முற்கூட்டிய திட்டமிடலுடன் அதேசமயம் ஒருவித செய்நேர்த்தித் தன்மை கொண்டதாகவே கட்டுமானங்களும், மின்சாரம், தொலைபேசி போன்ற வேலைத் திட்டங்களும் அமைந்துள்ளன. ஆனால் இங்கோ ஏதோ செய்து முடித்துவிட்டால் மட்டும் போதும் என்ற அவசரத்தனத்தோடு, செய்நேர்த்தியற்ற தன்மையோடுதான் எல்லாமே செய்யப்படுகின்றன. யாழ்.நகரப்பகுதியில் உள்ள கட்டடங்கள், மின்னிணைப்புகள், தொலைபேசி வயர்கள் என்பன அமைக்கப்பட்டிருக்கும் சீரற்ற தன்மையே இதற்குச் சிறந்த உதாரணம்.

இனியாவது இவற்றைத் தவிர்த்து, எவ்வித அனர்த்தங்களையும் தாங்கக் கூடியளவு, தொலைநோக்குத் தன்மையும், செய்நேர்த்தியும் உள்ளதான வகையில் நமது வேலைத்திட்டங்கள் அமைவது அவசியம்.

### "மண்ணெண்ணைத் தாங்கிக்குள் மழைநீர் புகுந்து தந்த சோதனை"

**கே.தேவகுருநாதன்**

*(உரிமையாளர், எரிபொருள்நிரப்பு நிலையம், கல்வியங்காடு)*

மழை "கொட்டோ கொட்டென்று" பொழிந்து கொண்டிருந்தது. இரண்டு நாள்களாகத் தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டேயிருந்ததால், வீதி எங்கும் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. முன்னொரு போதும் இவ்வாறான மடை திறந்ததுபோல பெய்த மழையை எங்கள் மக்கள் கண்டதில்லை. அதனால் எல்லோரும் ஏதோ ஒருவிதத்தில் கஷ்டப்பட நேர்ந்தது. இரண்டு நாள்களாகக் கடைகள் எதுவும் திறக்கவில்லை. மின்சாரக் கம்பிகள் மீது மரங்கள் வீழ்ந்ததாலும், பல பகுதிகள் மின்கம்பங்கள் புயலுக்கும், மழைக்கும் ஈடுகொடுக்க முடியாதவைகளாய் சாய்ந்ததாலும் யாழ்ப்பாணம் எங்கும் மின்சார விநியோகமும் அறவே இல்லை. இவற்றால் தமது அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்குக்கூட மக்கள் பெரும் கஷ்டப்பட்டார்கள்.

இந்த நேரத்தில் மக்களுக்கு உதவி செய்யாவிட்டால் வேறெப்போது செய்வது? அதனால் பெருமழையையும் பொருட்படுத்தாது-ஏதோ எம்மால் இயன்ற வகையில் மக்கள் படுகின்ற கஷ்டத்தின் ஒரு பகுதியையாவது

**மண்ணெண்ணைக்குள் மழைநீர் புகுந்த கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையம்**



போக்குவோம் என்ற எண்ணத்துடன் எமது எரிபொருள் நிலையத்தைத் திறந்து-எரிபொருள்களை விநியோகம் செய்ய முயன்றோம்.

அந்தக் கொட்டு மழையிலும் நாங்கள் எரிபொருள் நிலையத்தைத் திறக்கப்போகும் செய்தி தீயைப்போல பரவி, ஏராளமானோர் எமது நிலையத்துக்கு முன்னால் கொள்கலன்களுடன் குழுமி விட்டனர். மக்கள் தொகை அதிகமாக இருந்ததால், எமது சேவையை விரைவு படுத்துவதற்காக, முதலில் பணத்தைப் பெற்று, அதற்குரிய பற்றுச்சீட்டை வழங்கினோம்.

பணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டுக்களுடன் எரிபொருளை நிரப்பும் கருவிக்கு முன்னால் நீண்ட வரிசையில் நனைந்தபடியே-மக்கள் காத்திருந்தனர். அதன் பின்னர் முதலில் மண்ணெண்ணெயை விநியோகிக்க முற்பட்டோம். அப்போது ஒருவர் 'சோடாப்' போத்தலொன்றில் மண்ணெண்ணையை வாங்கினார். அப்போது பார்த்தபோது போத்தலின் மேற்புறம் மட்டும் மண்ணெண்ணெய் நிற்க, அதற்குக் கீழே ஏறக்குறைய முக்கால்வாசிக்கு, வெள்ளை நுரையாய் தண்ணீர்தான் இருந்தது.

உடனேயே மண்ணெண்ணைத் தாங்கியைத் திறந்து பார்த்தபோது, அதிலிருந்த குழாய் ஒன்றின் வழியாக குபுகுபுவென்று மண்ணெண்ணெய் தாங்கியினுள் வெள் ளம் உட்புகுந்து கொண்டிருந்தது. உடனேயே குழாயை மேலதிகமாக நீர் உட்புகாதவாறு மூடிவிட்டு, மக்களிடம் நாம் வழங்கிய பற்றுச்சீட்டுக்களை மீளப்பெற்று, அவர வரின் பணத்தை அவர்களிடமே திருப்பிக் கொடுத்து விட்டோம்.

பிறகு அடுத்தநாள் நீரையும், மண்ணெண்ணெயையும் பிரித்தெடுத்த பிறகே எரிபொருளை விநியோகித்தோம். அப்படிப் பிரித்தபோது மண்ணெண்ணெயுள் 1400 லீற்றர் தண்ணீரும், பெற்றோலுக்குள் 800 லீற்றர் தண்ணீரும் உட்புகுந்திருந்தது தெரிய வந்தது. எங்களை நம்பி மண்ணெண்ணை கிடைக்கும் என்று காத்திருந்த மக்களெல்லாம் அன்றைக்கு ஏமாற்றத்துடன் சென்றதை எண்ணும்போது இப்போதும் எனக்கு வேதனையாகத்தான் இருக்கின்றது.

### "வாழ்நாள் முழுவதும் மறக்க இயலாத அனுபவத்தைத் தந்த மழையும், புயலும்"

**ம.காண்டீபன்**

*(யாழ்.பல்கலைக்கழக மாணவன்)*

'நிஷா' வின் தாக்கம் அதிகரித்திருந்த வேளையில் ஆனந்தகுமாரசுவாமி ஆண்கள் விடுதியில் ஏறக்குறைய 250 மாணவர்கள் வரை தங்கியிருந்தோம். வழமையாக மழைகாலங்களில் முன்னாலுள்ள விடுதியின் படிக்கட்டு வரை வெள்ளம் வரும். பிறகு வற்றிவிடும். அப்படித்தான் இம்முறையும் இருக்குமென்று நினைத்தோம். ஆனால் நடந்ததோ வேறு. மதம் பிடித்த யானைபோல சீறியடித்துக் கொண்டு விடுதிகளுக்குள் வெள்ளம் உட்புகத் தொடங்கியது. இதனை நாங்கள் எதிர்பார்த்திருக்காததால் பாடக் குறிப்புகள், புத்தகங்கள், உடுப்புகள் என்பவற்றில் அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு வெள்ளம் வராத கட்டடங்களுக்கு இடம் மாறவேண்டியிருந்தது. பின்பகுதியில் உள்ள ஒரேயொரு கட்டடத்தில் மட்டுமே வெள்ளம் உள்ளே வரவில்லை. 250 பேரும் அந்த ஒரு கட்டடத்திலேயே

**சந்திப்பும், படங்களும்: - ஔண்யன், லக்ஸ்மன் -**

தங்கியிருக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது. நாங்கள் போட்டிருந்த உடுப்புகள் எல்லாம் தெப்பலாக நனைந்து விட்டன. நாங்கள் கையிலே கொண்டுவந்த உடுப்புகளும், கொண்டுவரும் வழியில் எம்மோடு சேர்ந்து அவையும் மழையிலும் தூவானத்திலும் ஈரமாகி விட்டிருந்தன. இதனால் மாற்றுடுப்பு இல்லாமல் குளிரில் விறைத்தபடியே தான் இருக்க வேண்டி இருந்தது. சில காலங்களுக்கு முன்னர் ஆனந்தகுமாரசுவாமி விடுதியில் பெண்கள்தான் தங்கியிருந்தனர். விடுதியை விட்டு அவர்கள் செல்லும்போது தேவையற்ற ஆடைகளை விட்டுச் சென்றிருந்தனர். குளிரின் கொடுமையைத் தாங்கமுடியாத மாணவர்களின் அவ்வாறான பெண்களின் ஆடைகளை அணிந்து கொண்ட வேடிக்கையும் நிகழ்ந்தது.

உணவும் மாணவர்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. மாணவர்கள் பலரும் குறித்த சில வீடுகளில் 'ஓடருக்கு' உணவு எடுப்பது வழக்கம். ஆனால் மழை வெள்ளம் காரணமாக வெளியே செல்ல



முடியாத நிலை. அவ்வாறு சென்றாலும் உணவுப்பொருள்கள் இல்லாததால் பல வீடுகளில் சாப்பாடு செய்யவில்லை. இதனால் ஆரம்பத்தில் பல மாணவர்கள் பசியோடு இருக்க வேண்டியிருந்தது. எனினும் விடுதியில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் அவல நிலையை உணர்ந்து, நாச்சிமார்கோயில் ஆலய நிர்வாகத்தினர் 150 உணவுப் 'பார்சல்களைக்' கொண்டு வந்து தந்தார்கள். பசித்திருந்த எங்களுக்கு அந்தநேரத்தில் அந்த உணவுதான் தேவாமிர்த மாகத் தென்பட்டது. அதன்பின்னர் துணைவேந்தரின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒரு தொகைப் பணம் கிடைத்தது. அதன் மூலம் மாணவர்களுக்குத் தேவையான உணவை

**சொல்லாது வந்த மழையும் புயலும் விட்டுச் சென்ற அவலங்கள் 03**

நாங்களே சமைக்கத் தீர்மானித்தோம். ஆனால் எல்லாக்கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. என்றாலும் நாங்கள் மனந்தளராது, வெள்ளத்தோடு எதிர்நீச்சல் போட்டு அதனைக் கடந்து, எமக்குத் தெரிந்த சில கடைக்காரர்களுக்கு நிலைமை யைச் சொன்னோம். அவர்களும் எமது நிலைமையைப் புரிந்து கொண்டு,

**வெள்ளத்தில் மூழ்கி, மூடிக்கிடக்கும் கடைகள்**



எமக்காகத் தமது கடைகளைத் திறந்து தேவையான பொருள்களைத் தந்தார்கள். அவற்றினைக் கொண்டு பெண்கள் விடுதியில் தங்கியிருந்த மாணவிகளின் உதவியுடன் மாணவர்களுக்குத் தேவை யான உணவைச் சமைத்தோம்.

அதன்பிறகு பிஸ்கற்றும் பாலும்தான் இரவுணவு. பகல் முழுதும் மழையால் விறைத்துப்போன நாம் இரவாவது கொஞ்சம் நித்திரை கொண்டு இளைப்பாறலாம் என்றால் அதற்கும் இயலாததாக இருந்தது. ஏனெனில் வெள்ளம் உட்புகாத கட்டடத்திலும் யன்னல்கள், கிறில்கள் என்பவற்றின் வழியாக வந்த தூவானமும், புயலின் வேகத்தால் சிதறிய மழைத்துளிகளும் கட்டில்கள் எல்லாவற்றையும் ஈரமாக்கி விட்டிருந்தன. கட்டில் மெத்தைகளில் கை வைத்தால் நீர் சுரக்குமளவுக்கு ஈரம். வேறு வழியின்றி நித்திரையின் அவஸ்தையைத் தாங்க முடியாதவாறு ஈரக்கட்டில்களிலேயே தஞ்சமடைந்து, நித்திரை கொண்டோம். எங்கள் வாழ்நாள் முழுதும் மறக்கவியலாத அனுபவத்தை மூன்று நாள்களும் பெய்தமழை தந்துவிட்டுச் சென்றிருக்கின்றது.

### "எம்மைச் சூழ்ந்திருந்தது வெள்ளம்; ஆனால் தவித்தவாய்க்கு ஒரு வாய் தண்ணீரில்லை தாகம் தீர்க்க"

**கே.அன்ரனிதாஸ்** (யாழ்.பல்கலைக்கழகம்)



மழை வெள்ளத்தால் ஏற்பட்ட நேரடிப் பாதிப்பை விடவும் அதனால் உண்டான பின் விளைவுகளாலும் அதிகளவு தாக்கத்தை-குறிப்பாக விடுதியில் தங்கியிருந்த பல்கலைக் கழக மாணவர்கள் எதிர் கொண்டனர்.

வெள்ளத்தையும் பொருட் படுத்தாது

(19 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.21

நல்லூர் கைலாசநாதர் (நல்லூர் சிவன்) ஆலயத்தில் அறங்காவலர்களின் அனுசரணையுடன் நல்லூர் முருகன் அடியார் திருக்கூட்டத்தினரால் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் ஆரம்பமாகி மாலை வரை நடைபெறும். (204)


தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்
இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன்,
தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையமும் ஆங்கில கற்கை நிலையமும்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 114, டச்சு வீதி, சாவகச்சேரி.

6 வது ஆண்டில் சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தில்

I.Basic Computer Application
(Introduction to Computer ,Ms Word,Ms Excel,Ms PowerPoint) Rs 750.00 Only
II.Advanced Computer Application(for O/L, A/L Students)
(Introduction to Computer ,Introduction to ICT, Operating System,Microsoft Office ) Rs 1500.00 Only
III.Desktop Publishing
(Adobe Photoshop,Adobe Pagemaker,CorelDRAW ) Rs 1000.00 Only
IV.Internet & e-mail ( 10 Hrs) Rs 1000.00 Only
V.Hardware Technology Rs 2000.00 Only
புதிய பிரிவுகள் ஒவ்வோரு வாரமும் ஆரம்பம்
Online Classes
மேலதிக விபரங்களுக்கு நேரில்


## வலி.தென்மேற்கில் கிணறுகளை இறைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.21

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் கிணறுகளை இறைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

கிணறு இறைக்க வேண்டிய தேவையுள்ள பொதுமக்கள் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலி. தென்மேற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கேட்டுள்ளார். (1)

## ஏ.ஜேயின் 2 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 21

ஏ.ஜே.இன் நண்பர்களின் ஏற்பாட்டில் ஏ.ஜே.கனகரத்தினாவின் இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அஞ்சலி உரையினை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் நிகழ்த்துவார். ஏ.ஜே பற்றி கலாநிதி சுரேஸ்கனகராஜா தொகுத்த 'AJ.The Rooted Cosmopolitan' எனும் நூல் பற்றிய அறிமுகத்தினை திருமதி சாந்தி விக்கினராஜா நிகழ்த்துவார்.

'சுதேச நாட்டியமும் கல்லடி வேலனும்' எனும் தலைப்பில் வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சோ. கிருஷ்ணகுமார் நினைவுரை நிகழ்த்துவார்.

ஏ.ஜேயின் அபிமானிகள், நண்பர்கள், ஆர்வலர்கள் ஆகியோரை வருகைதரும்படி நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 22.04.1949

ஆண்டவன் அடியில் 21.11.2008

### அமரர் வேலுப்பிள்ளை சிவநாதன்

பண்பின் உறைவிடமாய் அன்பின் அடையாளமாய்
வாழ்ந்த அண்ணலே! தங்கள் நினைவலைகள்
நிழற்படச் சுருள்களாய் மனத்திரையில் நிற்கிறதே!
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம் மலரவன் பொற்பாதங்களை.

இன்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய மாவடி, கொடிகாமம். (80951)

என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி சிவமணி விசாகரத்தினவேல்

திதி: தசமி (21.12.2008)

தோற்றம் 27*04*1947 மறைவு 12*01*1999

ஆண்டுகள் பத்து ஆனதுவோ- அம்மா
உனைவிட்டு நீங்கள் பிரிந்து சென்று
ஆண்டுகள் நூறு ஆனாலும்- ஆறாதம்மா
எம் துயரங்கள்- இனி
எப் பிறப்பில் காண்போமோ?
உங்கள் பாசமிகு திருவுருவை
மீண்டும் வந்து பிறந்திடம்மா!
எங்கள் துயரம் தன்னைப் போக்கிடவே.

மூளாய் மேற்கு, சுழிபுரம். (80964)

என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்: குடும்பத்தினர்.


# COMTEC

COMMUNITY AND TECHNICAL EDUCATION CENTRE

சமூக தொழில்நுட்பக் கல்வி நிலையம்

பயிற்சி நெறிகள்:

எமது நிறுவனத்தில் பின்வரும் பயிற்சி நெறிகள் 12.01.2009 அன்று ஆரம்பமாகவுள்ளன.

01. அலுமினியம் பொருத்துதல் தொழில்நுட்பம் (06 மாதங்கள்)
02. மரவேலை தொழில்நுட்பம் (06 மாதங்கள்)
03. வானொலி, தொலைக்காட்சி சீர்செய்தல் (01 வருடம்)
04. வீட்டு மின்சுற்று இணைப்பும் மின்னியந்திரங்கள் மீளமுறுக்குதல் (01 வருடம்)
05. மோட்டார் வாகன பொறியியல் (01 வருடம்)
(ஓட்டோ, மோட்டார் சைக்கிள் உட்படப் பெற்றோல் டீசல் இயந்திரங்கள்)
06. தையல் பயிற்சி வகுப்புகள்
07. கணனி வன்பொருள், மென்பொருள் வகுப்புகள் (Hardware & Ms Office)

வயதெல்லை: 16 - 30 வரை

அதி நவீன பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு முழுநேர பயிற்சி வழங்கப்படுகின்றது. பயிற்சி நெறிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களில் பெயர், முகவரி, கல்வித் தகைமை தெரிவு செய்யும் பயிற்சி நெறி போன்ற விவரங்களை குறிப்பிட்டு இயக்குநர், கொம்ரெக், சுழிபுரம் எனும் முகவரிக்கு 01 ஜனவரி 2009 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

பயிற்சி முடிவில் சர்வதேச தராதரமுடைய சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அரச அங்கீகாரம் பெற்ற NAITA பரீட்சை எழுதுவதற்கான செதிகள் செய்துகொடுக்கப்படும்.

(80901) இயக்குநர், கொம்ரெக்.


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை சோமசுந்தரம்



யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட 'சின்னத்தங்கம் அக்கா' என்று செல்லமாக அழைக்கப்பட்டு வந்தவரான திருமதி கமலாம்பிகை சோமசுந்தரம் 15.12.2008 திங்கட்கிழமை லண்டனில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற நல்லூர் வர்த்தகர் வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் சிங்காரவடிவு (முன்னாள் பெற்றோல் விற்பனை முகவர், கல்வியங்காடு, லண்டன்), தவலோகநாயகி (அமெரிக்கா), விமலாதேவி (அமெரிக்கா), விஜயகுமாரி (லண்டன்), இந்துமதி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும் தமயந்தி (லண்டன்), காலஞ்சென்ற மகாதேவா (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) மற்றும் பாலேந்திரா (முன்னாள் உரிமையாளர், இராதா மெசின் கொம்பனி, யாழ்ப்பாணம், அமெரிக்கா), ராஜரட்ணம் (முன்னாள் உதவி பொறியியலாளர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம், லண்டன்), கைலாயநாதன் (முன்னாள் நிதி முகாமையாளர், இலங்கை சீனி கூட்டுத்தாபனம், அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும் லண்டனைச் சேர்ந்த ஆரணி, சஞ்சீவ்குமார், ஜனகன், வதனி, ஜனார்த்தன், சோபியா, அமெரிக்காவைச் சேர்ந்த வரேந்திரா- மிண்டி, தவேந்திரா- ஜெனித்தா, சுப்பிரபிரதீபன், ரவிவர்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லண்டனைச் சேர்ந்த இனாரா, சகானா, ஜஷன், அமெரிக்காவைச் சேர்ந்த ஜெயக்குமார், அம்பிகா, இஷானி, கவித்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மேற்கு லண்டன் மோட்லேக் மயானத்தில் இன்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இந்து முறைப்படி தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: R. விஜயகுமாரன் (மருமகன்- யாழ்ப்பாணம்),
சிங்காரவடிவு (மகள்),
விஜி ராஜரட்ணம் (மகள்). } லண்டன்

லண்டன் தொ.பே.இல.: 07956158569 ,02085684765 (80967)

## மரண அறிவித்தல்

### வைரவன் பொன்னம்பலம்



கோண்டாவில், தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் பொன்னம்பலம் (17.12.2008) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பவளம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைரவன்- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகன்- சின்னம்மா தம்பதியரின் மருமகனும் குகன் (கனடா), குகேந்திரன் (பாலு), குகதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜி (கனடா), சுகிதா, நேமினா (லண்டன்) ஆகியோரின் மாமனும் கிரேனியா (கனடா), கிலன் (கனடா), சுவேதா, தனோஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், தங்கம்மா, பொன்னம்மா மற்றும் கன்கம்மா, நவரட்ணம், துரேவதை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், கார்ரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த தகவல்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தில்லையம்பதி, கோண்டாவில். (80976)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் புலிகளின் விஸ்வரூபம்!

அரசியல்வாதிகளின் விருப்பு, வெறுப்புகளுக்கும், அரசியல் சுயலாபங்களுக்கும் ஏற்ற விதத்தில் யுத்த நடவடிக்கைகளை வகுக்கும் தவறுக்கான பாடத்தை இவ்வாரத்தில் கிளிநொச்சிச் சுற்றாடலில் இலங்கைப் படைகள் 'நன்கு' படிக்க வேண்டியதாயிற்று.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தக்கோரும் வற்புறுத்தல் தமிழகத்தில் தீவிரமடைந்து வருகின்றது. தமிழகத்தின் இந்தக் கருத்து நிலைப்பாட்டை இலங்கை அரசுத் தரப்புக்கு நேரில் எடுத்துரைப்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைக் கொழும்புக்கு அனுப்புவதற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், நேரடியாகத் தமிழக முதல்வரிடம் இசைவு தெரிவித்து இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன.

ஆனால், இந்திய வெளிவிவகார அமைச்சரின் உத்தேச இலங்கை விஜயத்துக்கான ஏற்பாடுகளில் ஒரு துரும்பைக் கூட கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் இதுவரை அசைத்ததாகத் தகவல் இல்லை.

ஆனால், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கும் இலங்கை அரச உயர்மட்டங்களுக்கும் இடையில் நெருக்கமான நல்லுறவு - பிரத்தியேக இரு தரப்பு ஈடுபாடு - இருப்பது குறித்து இப்பந்தியில் ஏற்கனவே நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம்.

"இலங்கையில் யுத்தத்தை நிறுத்தக்கோரும் வலியுறுத்தல் தமிழகத்தில் தீவிரமடைந்து வருகிறது. அதை இந்திய மத்திய அரசு உதாசீனம் செய்யமுடியாத நிலைமையும் ஏற்பட்டு வருகின்றது. எனவே, இவ்விடயத்தில் புதுடில்லி நீண்ட காலத்துக்கு வாளாவிருக்க முடியாது. ஏதோ ஒரு கட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு வந்து தமிழகத்தின் கருத்து நிலைப்பாட்டை இந்திய மத்திய அரசின் சார்பில் பிரதிபலித்து வற்புறுத்துவது தவிர்க்க முடியாதது. ஆகவே, அவரின் இலங்கை விஜயத்துக்கு முன்னர் - கிளிநொச்சியைக் கைப்பற்றி உங்கள் அரசியல் வெற்றியை உறுதிப்படுத்தி ஸ்திரப்படுத்திக் கொள்ளுங்கள். இனியும் தாமதப்படுத்தாதீர்கள்!" - என்ற அந்தரங்க 'அட்வைஸ்' தூதரகத் தலைமையினால்தான் இலங்கை அதிகார வட்டாரங்களுக்கு வழங்கப்பட்டதாக 'உள்வீட்டில்' பேச்சடிபடுகின்றது.

ஒருபுறம், இந்திய வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு விஜயத்துக்கான முன்னேற்பாடுகளை வேண்டுமென்றே இழுத்தடித்துத் தாமதப்படுத்திக் கொண்டு, கிளிநொச்சியை இலங்கை அரசுப் படைகள் கைப்பற்றுவதற்கான கால அவகாசத்தை வழங்கிக் காத்திருக்கிறதாம் தூதரக வட்டாரம்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் உத்தேச இலங்கை விஜயத்துக்கான முன் ஆயத்தங்களுக்கான கோடி புதுடில்லியிலிருந்து காட்டப்பட்டாலும் -

"இங்கு (கொழும்பில்) நிலைமை சாதகமானதாக இல்லை. வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜய சமயம் அவர் இங்கு 'இன்சல்ட்' இற்கு உள்ளாகும் வகையில் (அவமரியாதைப்படுத்தப்படும் விதத்தில்) காரியங்கள் நடக்கலாம். எனவே, அவரது கொழும்பு விஜயத்துக்கு சற்றுப் பொறுப்பது நல்லது." - என்ற சாரப்பட பதில் சமிக்ஞைகள் கொழும்பில் உள்ள தூதரகத்திலிருந்து புதுடில்லிக்குக் காட்டப்படுவதாகவும் கூடக் கூறப்படுகின்றது.

வன்னியில் பல தரப்பிலும் எதிர்பார்த்திருந்த பெருமழை, காலம் பிந்தி இப்போதுதான் கொட்டித் தீர்க்கின்றது.

இந்த மழை வெள்ளத்துக்குள் படை நடவடிக்கை முன்னெடுப்பு கற்பனை பண்ணிக் கூடப் பார்க்கக் கஷ்டமான விடயம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. மழை பெய்து வெள்ளம் போட்டால், வன்னியில் அரசுப் படைகள் தொடுத்திருக்கும் யுத்தம் - புலிகளின் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் இராணுவ



நடவடிக்கை - மந்த கதியை அடைந்துவிடும் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள். துறை தோய்ந்த இராணுவ விமர்சகர்கள் அப்படித்தான் எழுதியும் வந்தனர்.

ஆனால், வன்னியில் - குறிப்பாக கிளிநொச்சி நகரச் சுற்று வியூகத்தில் - இதற்கு முரணான விடயங்கள் இப்போது அரங்கேறியமைதான் அதிசயம்.

ஒருபுறம் கடும் மழை பெய்து கொண்டிருக்க - பெருவெள்ளம் பெருக்கெடுக்க - மறுபுறத்தில், நடுநிசி தாண்டிய நேரத்தில், படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் ஒரு முனை, ஒரு பக்கத்தில் அல்ல.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் எத்தனத்துடன் கிளிநொச்சியைச் சூழ நான்கு முனைகளிலும் -

அதேசமயம் புலிகளின் கவனத்தை திசை திருப்பி சிதறடிப்பதற்காக கிளாலியில் ஒரு முனையிலுமாக -

மொத்தமாக ஐந்து பக்கங்களிலிருந்து கடந்த செவ்வாயன்று அதிகாலை 2 மணிக்கு பெருத்த எடுப்பில் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதிகாலை 2 மணிக்கு ஆரம்பமான படை நடவடிக்கை பற்றிய விவரம் அன்று காலை விடியும் சமயத்திலேயே கொழும்புக்கு எட்டிவிட்டது.

- வி.சிவராம் -

"கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான அரசுப் படைகளின் இந்தத் தாக்குதல் ஒரே சமயத்தில் ஐந்து முனைகளில் ஆரம்பித்து விட்டது. புலிகள் குழப்பமான கட்டத்தில் (Bad Shape) உள்ளனர்" - என்ற செய்தியே அன்று காலை கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்களில் உலா வரத் தொடங்கியது.

கிளிநொச்சி அரசுப் படைகள் வசம் வீழ்ந்தது என்ற செய்தியை எதிர்பார்த்திருந்த அந்த வட்டாரங்கள் மத்தியில் நண்பகல் வேளையில் எதிர்பாராத அதிர்ச்சி பரவத் தொடங்கியது. தலைநகரில் பல முனைகளிலும் 'சைரன்ஸ்' ஒலி எழுப்பியவாறு ஓடித் திரிந்த அம்புலன்ஸ்கள்தாம் முதலில் களநிலைவரம் பற்றிய செய்திகளைக் கோடி காட்டின. ஆனால், அன்று மாலையில் களநிலைவரச் செய்திகள் ஓரளவு தெளிவானபோது அரசுத் தரப்பின் பெரும் எடுப்பிலான - ஒரே சமயத்தில் பல முனைகளில் முன் நகரும் - தந்திரோபாயத் திட்டம் மழை வெள்ளத்தில் மூழ்கியமை போன்று அமிழ்ந்து போய் விட்டமை தெளிவாயிற்று. படைக்குப் பேரிழப்பு என்பதும் உறுதியாயிற்று.

"கிளிநொச்சியை விரைந்து கைப்பற்றுங்கள்!" என்று தூதரக வட்டாரம் ஒன்று வழங்கிய 'தவறான அட்வைஸை' சிரமேற்கொண்டு, கள நிலைவரம் புரியாமல், வெள்ளத்துக்குள் படை நகர்த்தி வாங்கிக் கட்டிக் கொண்டுள்ளது இராணுவத் தரப்பு.

மலையாளபுரம், குஞ்சுப்பரந்தன், புளிக்குளம், முறிகண்டி ஆகிய நான்கு முனைகளில் இருந்தே கிளிநொச்சியை இலக்கு வைத்து நான்கு முனை நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளாலியில் இருந்து மற்றொரு படை நகர்வு தெற்கு நோக்கி நடந்தது.

பல்குழல் ஏவுகணைகள், பீரங்கிகள் நெருக்கமாகவும், செறிவாகவும் முழங்கி பின்புலக் கூட்டாதரவு வழங்க - ஜெற்குண்டு வீச்சு விமானங்கள், எம்.ஐ.ரக ஹெலிக்கொப்டர்கள் போன்றவை வான் வழித் தாக்குதல் வழங்கி கவசம் அளிக்க -

விடிகாலை 2 மணிக்குக் கடும் மழை மற்றும் இருட்டுக்கு மத்தியில் புலிகளின் முன்னணிக் காவலரண்களைப் பிளந்து கொண்டு படைகள் முன்னேறின.

சற்றுத் தூரம் வரை படைநகர்வுக்கு இடமளித்தனர் புலிகள். பின்னர்தான் அவர்களின் பீரங்கிகள், ஏவுகணைகள் முழங்கத் தொடங்கின.

ஐந்து முனைகளிலும் ஒரே சமயத்தில் அலை அலையாகப் புலிகளின் போராளிகள் வந்து குவிந்து பதிலடி கொடுத்தமை படைத்தரப்பை ஆச்சரியத்துக்குள் மூழ்கடித்திருக்கின்றது.

முறிகண்டிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மகளிர் அணி கொடுத்த கடுமையான அடி அரசுப் படைகளை வாய் பிளக்க வைத்திருப்பதாக ஒரு தகவல்.

செவ்வாயன்றும் புதனன்றும் நடந்த சமர்களில் அரசுப் படைகள் தரப்பில் 250 பேர் வரை உயிரிழந்துள்ளனர் அல்லது காணமாற்போயுள்ளனர் என்றும் சுமார் ஐந்நூறு பேர் வரை காயமடைந்திருக்கின்றனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. தங்களது வலுவான போராளிகளைக் களத்தில் இறக்காமல், பல இடங்களிலும் மெல்ல மெல்லப் பின்வாங்கி 'ஒளித்துப் பிடித்து விளையாடி வந்த' புலிகள் இப்போதுதான் தங்களது 'கைவரிசையைக்' காட்டத் தொடங்கியிருக்கின்றார்கள்.

"இப்போதுதான் அரசுப்படைகளை 'நிறைகுடம்' வைத்து வரவேற்கத் தொடங்கியிருக்கிறோம். இது இனித் தொடரும். பொறுத்திருந்து பாருங்கள்!" - என்று இப்போது கூறுகின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசன்.

"வன்னி யுத்த முனையில் இனிக் கட்டவிழும் சம்பவங்கள்தாம் பல்வேறு அரசியல் திருப்புமுனைகளுக்கு வழிவகுக்கப்போகின்றன. அதன் ஆரம்பமே இப்போது இடம் பெறுகின்றது." - என்கிறார் அவர்.

அவர் தொட்டுக் காட்டும் அரசியல் திருப்பங்கள் எவை என்பது புரியவில்லை. ஆனால், புலிகள் தொடர்பாக சர்வதேச நிலைப்பாட்டில் ஏற்படக்கூடிய திருப்பங்களாகவும்" அவை அமையக் கூடும் என்பதும் இது தொடர்பான ஊகங்களில் ஒன்று என்பது கவனிக்கத்தக்கது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தை ஒட்டி சில வற்புறுத்தல்களை முன்வைக்கும் நோக்கோடு இந்தியப் பிரதமரின் சார்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வர விரும்புகையில், அதற்கு இடம் கொடாமல் முட்டுக்கட்டை போடும் பிரதிபலிப்பை கொழும்பு காட்டும் இச்சமயத்தில் -

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை இராணுவம் மேற்கொண்டு வரும் புலிகளின் பிரதேசங்களை நோக்கிய படை எடுப்பிற்கு வலுவான எதிர்த்தாக்குதல்களைக் காட்டாமல் பின்நகர்ந்து வந்த புலிகள், இப்போதுதான் - இவ்வேளையில்தான் - தங்களது வலிமையைக் காட்ட முன்வந்திருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

இந்த விடயத்தையும் -

இங்கு இடம்பெறப் போகும் யுத்தத்தை ஒட்டியே அரசியல் திருப்பங்கள் கட்டவிழ்வதற்கான வாய்ப்புகள் நேரும் என்ற புலிகளின் அரசியல் பொறுப்பாளரின் தற்போதைய கருத்தையும் -

இந்தியாவுக்கு சமரச சமிக்ஞை காட்டும் விதத்தில் மூன்று வாரங்களுக்கு முன்னர் புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரை அமைந்திருந்தமையையும் -

நோக்கும்போது இவற்றுக்குள் ஏதோ ஓர் 'அரசியல் சூத்திரம்' புதைந்திருப்பதாகவே தோன்றுகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



அகவை அறுபது
நிறைவு பெற்று இன்று
(21.12.2008)
சேவையிலிருந்து
ஓய்வுபெறும்
யா/சாவகச்சேரி மகளிர்
கல்லூரி ஆசிரியர்
**திரு.பொன்னுத்துரை ஸ்ரீவாமதேவன்**
(Sp.Trd.music., SLTS - I)
அவர்களின் சேவை
நலன் பாராட்டு

முப்பத்து மூன்றாண்டுகள் முத்தான சேவையிலே இருபத்து
மூன்றாண்டுகள் யா/சாவகச்சேரி மகளிருக்காய் சுந்தரமான
சங்கீத பாடத்தைச் சுவையுடனே சந்தோஷமாகக் கற்பித்த
சங்கீத வித்துவான் செந்தமிழ் இசைக்கவிஞர் சாதனையாளர்
ஸ்ரீவாமதேவன் செப்பரும் பெருமை சேர்த்தே சேவையில்
நிறைவுகண்டு அகவை அறுபது நிறைவுபெற்று
ஓய்வுபெறும் இந்நாளில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்லாண்டுகள்.

கல்லூரிச் சேவையாளர் சங்கம்,
சாவகச்சேரி. (சி/556172) யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலை நாள்களில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 05.01.2009 ஆம் திகதி பி.ப.4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

1.பதவி: பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)
2.பதவி இல.: 165/88 இன் படி சம்பள குறி இல.101/06
3.சம்பளத் திட்டம் : 66/06 இன் படி
11950 - 155x10 - 180x10 - 15300

4.அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 7ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 8ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்கு குறையாத அனுபவம். இந்த எட்டு வருடகால அனுபவத்தில் 2 வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொனறில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இப்பத்து வருடகால அனுபவத்தில் சிரேஷ்ட முகாமைமட்டப் பதவியில் குறைந்தது 2 வருடகால அனுபவம்.

5.பொது நிபந்தனைகள்

1. வயது 05.01.2009ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில்இரண்டுவருடங்களுக்கு மேலாகவசித்தமையை உறுதிப்படுத்துவதற்குச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால்விதிக்கப்படும்ரொக்கப்பிணையும்ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
4. ஆள்சேர்ப்புச் செய்யப்படுபவர் இரண்டு வருட கால தகுதிகாண் அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படுவர்.
5. கல்வித்தகைமைகள்,அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல் நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரபூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
6. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிக்கப்படும்.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும் இணைப்புக்களும் உண்மையானதும் செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.
8. நேர்முகப் பரீட்சையின் பொழுது சகல சான்றிதழ்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

21.12.2008. (சி/556145) தலைவர்.

# தவறிவிட்டது

60/4, சொலமன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய குணம் டெமிற்றியஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (840711447 V) யாழ்.நகருக்கும் அச்சக வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல.37, 5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P. 222 9159

# திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றியவரன் முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த-சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர்- சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.
தொழும் நேரத் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.


# ஒளிக்கலை விழாவின் போட்டி முடிவுகள்

வண்ணை, டிசெ.20

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி ஒளிக்கலை விழாவை முன்னிட்டு நடத்திய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. முடிவுகள் வருமாறு:

*பிரிவு 1:* அ.ஜெரியோண்சன், ச.சுகன்யா, அ.மேரிஆன்.

*பிரிவு 2:* ஆ.அ.யூட்லெயோன், கி.கதிர்சினி, அ.மேரிஆன்.

சிறுகதை

யோ.மரியாம்பிள்ளை, த.நிமல்ராஜ், எ.நிர்மலாதேவி.

நாடக எழுத்து

கொ.கரன்சன், றோ.க.கில்பேட், ம.கட்சன்.

நாடகம் மேடையேற்றம்

சென்.ஜேம்ஸ் இசைக்குழு, குருநகர் இளைஞர் கலைக்கழகம், கிறிஸ்தோப்பர் கடற்சாரணர்.

கட்டுரை

*மேற்பிரிவு:* எ.திவியா, கி.லிபியா ஷாறா, டே.பிறிஸ்கா.

*மத்திய பிரிவு:* ட.டினோஜினி, அ.ஐஸ்வரியா, ச.சுகன்யா.

*கீழ்ப்பிரிவு:* டி.ர.நிசாந்தன், ஈ.பார்வின், ஸ்.மனோஜ்,

பேச்சு - ஆண்

டி.அருந்தவராஜ், டி.நிசாந்தன், ஸ்.மனோஜ்.

*பெண் - மத்தியபிரிவு:* வி.லிற்றிக்கா, எ.பெனாசி, தா.லிபிதா,

*கீழ்ப் பிரிவு:* பொ.ஜேன் சௌமியா, ஞா.சிந்துஜா, இ.மேரி கிசாந்தி,

சிறப்புப் பரிசு: ஐ.கனிசா.

மறைக்கல்வி

*மேற்பிரிவு:* அ.ஜெரியோன்சன், அ.மேரிபிறின்சியா, அ.அனிதாறொக்சி.

*மத்திய பிரிவு:* அ.கௌலஸ்கா, யூ.யூறிகா,அ.டிலக்ஸி.

*கீழ்ப்பிரிவு:* ஜர்மிலன், மை.அருளமுகன், பொ.ஜேன் சௌமியா

கூத்துப்பாடல்

*ஆண்:* அ.அன்று ஜூலியஸ், கி.சுமேலன், கி.செறிங்ரன்.

*பெண்:* மி.பிறின்சியா, றெ.ஜனேந்தினி, கி.தனீஸ்வரி.

குழுநடனம் (இரு குழுக்கள்)

*பெண்:* சென்.ஜேம்ஸ் இசைக்குழு மற்றும் யா.அ.லெனின் குழு, சென்.ஜேம்ஸ் இசைக் குழு, இளைஞர் கலைக்கழகம்.

தனிநடனம்

*ஆண்:* அ.அன்று ஜூலியஸ், யா.அன்று லெனின், அ.டினோசன்.

*பெண்:* ஜ.ஆன் ஜெனிபர், கு.மேரி ஸ்ரிவினா, அ.லெ.மேரிமேனகா

*பிரிவு 2:* பீ.எறின் பிறின்சி, அ.ஆன் சாளிகா, றெ.ரெரன்சியா.

பாலர்நடனம்

குருநகர் சன சமூக முன்பள்ளி, ஆவேமரியா பாலர் [illegible]

(202-160)


# ST.JOHN'S COLLEGE, JAFFNA
# VACANCIES FOR TEACHERS

Applications are invited from suitable applicants to teach English Medium Economics & Mathematics for A/L classes and Science for O/L classes. The last date for receiving applications is 31st December 2008. Sports & IT skills will be an advantage. Apply with full bio - data and photocopies of certificates - Diploma / Degree to:

The Principal,
St.John's College,
Jaffna.

(சி/556128)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 24.11.2008 அன்று சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

**அமரர் அப்பாக்குட்டி மகாலிங்கம் (தேவன்)**

அவர்களின் இறுதிக்கிரியைகள் 27.11.2008 அன்று திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக முன் அறிவித்தல் எதுவுமின்றி நடைபெற்று முடிந்தது. ஆகையால் 24.12.2008 அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி,
உடும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
T.P.077 6100264, 077 9234946

மனைவி,
பிள்ளைகள்.

(80918)

# Assembly of God-Chunnakam
## (One Vision One Purpose)
## 23rd Church Anniversary Service
## (1985-2008......)
## "Glory Be To God"

* Praise and worship Service will be held on the 21st Sunday morning (21.12.2008) At 9.00 am in AOG Chunnakam
* Followed by special Healing - Service for the sick and other needs of people.
* All are welcome and receive God's best richest blessings

**"Jesus Heals, Saves and Protects even today and leads you into Eternity forever"**

"You have nothing to do but to save souls"
- John Wesley



Servants of Team Ministry

# அசெம்பிளி ஒவ் கோட் - சுன்னாகம்
## (ஒரு தரிசனம் ஒரே நோக்கம்) (1985-2008........)
## 23ஆவது சபையின் வருடாந்த விஷேட ஸ்தோத்திர ஆராதனை
## "கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக"

* 21ஆம் திகதி ஞாயிறு காலை 9.00 மணிக்கு AOG சபையில் வருடாந்த ஆராதனை நடைபெறும். (21.12.2008)
* இதைத் தொடர்ந்து விஷேட சுகமளிக்கும் ஆராதனை
* அனைவரும் வந்து ஆண்டவர் இயேசுவின் ஆறுதலையும் சுகத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

"இன்றும் ஆண்டவர் இயேசு உன்னை குணமாக்கிறார், இரட்சிக்கிறார், பாதுகாக்கிறார், நித்தியத்திற்குள் வழிநடத்துகிறார்"

"[illegible] செய்வதற்கான வேலை ஒன்றுமில்லை ஆனால் ஒன்றுண்டு அதுவே அழியும் மக்களை மீட்டுக்கொள்வது மட்டுமே"
- ஜோன் வெஸ்லி.

(80944)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் கொழும்பூர் முத்துலிங்கம்" என்ற புனைபெயரில் அறுபதுகளில் ஈழத்து இலக்கியத்துறையில் தடம் பதித்தவர் இந்தக் கதாசிரியர். ஈழத்துச் சிறுகதைப் பரப்பில் இவரது எழுத்துக்கள் தனித்துவம் பெற்றவை.

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், ஓவியம் ஆகிய துறைகளோடு திரைப்படத்துறையிலும் பங்களிப்பு வழங்கியவர். இவரது மும்மொழி வல்லுமை இவரது இலக்கியப் பரப்பையும் ப...யும் விசாலப்படுத்தியது.

ஒரு நாவலும் ஐந்து சிறுகதைகளும் அடங்கிய இவரது 'ஒரு ஜனனத்தின் அஸ்தமனம்' தொகுதி 1994 இல் வெளிவந்தது.

இவரது 'அரணை' சிறுகதை இவ்வார இலக்கியப் பொழிலை அலங்கரிக்கிறது.

# சிறுகதை
# அரணை

அதிகாலை நேரம் 'மீனாசாதியாத்' பிரதேசத்தை பனி மூடியிருந்தது. அபுதாபி நகரின் ஆரவாரங்களிலிருந்து சற்று ஒதுங்கி கடற்கரையோரமாக இருக்கும் மீனாசாதியாத் கடற்கரையில் தான் நான் பணிபுரியும் பிரிட்டிஷ் கிளப் இருக்கிறது. பல ஏக்கர் நிலத்தை வளைத்துப்போட்டுக்கொண்டு ஒரு பக்கம் கடலாலும், மற்றைய பக்கங்கள் நீண்டு உயர்ந்த மதில்களாலும், ஏராளமான கட்டடங்களையும், நீச்சல் குளங்களையும் அழகிய பூந்தோட்டங்களையும் தன்னுள்ளே கொண்டு அந்த நாட்டில் ஆங்கிலேயர்களுக்கு இருக்கும் செல்வாக்கையும், வசதியையும் வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறது.

உள்ளே நுழையும் நுழைவாயிலிலேயே பெரிய கேட். அவ்விடத்தில் பெரிய செக்கியுரிடி அறை. அந்த அறைக்கு இரண்டு பக்கமாகவும் உள்ளே வரவும் வெளியே போகவும் சிமெண்டுப் பாதைகள். உள்ளே நுழைந்தவுடன் கொஞ்சத் தூரத்திற்கு பாதையின் இருமருங்கும் பச்சை நிறப் புல்வெளிகள்.

புற்றரையின் இடையிடையே அளவோடு இடைவெளிவிட்டு நடப்பட்டிருந்த உயர்ந்த ஒலியெண்டர் மரங்கள். அவைகளின் சிகரங்களில் இளஞ்சிகப்பு நிறத்தில் பூக்கள், மதில்களின் ஓரமாக அடர்த்தியான வர்ணக் கலவையுடன் போகன்வில்லாச் செடிகளின் அடர்த்தி மதில்களைச் சுத்தமாக மறைத்துக்கொண்டு நிற்கிறது. எதிர்ப்புற மதிலோரம் வரிசையாக யூகலிப்டஸ் மரங்கள்.

இந்த அற்புதங்களைத் தாண்டினால் வரிசை வரிசையாக நான்கு டென்னிஸ் விளையாடும் இடங்கள் பெரிய நீலநிற இரும்புக் கம்பி வலைகளுக்குள் சிறைப்பட்டுக் கிடக்கின்றன. சற்று முன்புறம் எதிர்ப்பக்கமாக ஸ்விம்மிங்பூல் பார். மறுபக்கம் மணல் வெளி. அப்பால் அலையடித்துச் சிணுங்கும் நீலக்கடல். கடற்கரை முழுவதும் மணல் வெளி இல்லாத இடங்களில் ஓயஸிஸ் மாதிரி விஸ்தீரணமான இடத்தில் கட்டடங்களையும், பாதைகளையும் தவிர்த்து மற்றைய இடங்களில் கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ணப் பூச்செடிகள் மெர்ரிகோல்ட், பெர்ரிவின்கலர் சீனியாஸ் இப்படி இந்தியாதி இனங்கள்.

யூரியா உரத்தின் அனுக்கிரகத்தினால் புல்வெளிகள் கரும்பச்சை நிறத்தில் காணப்படுகின்றன. அந்தப் புல்வெளிகளுக்குள் ஆங்காங்கே ஸ்பிரிங்லர்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. குழாய் வால்வை திறந்தால் போதும் எல்லா ஸ்பிரிங்லர்களுக்கும் உயிர் வந்துவிடும். 'ஸ்' சென்று நீர்க்கோடுகள் வெள்ளிக்கம்பிகளாய் மேலெழுப்பி ஒரே சீராக ஒரு வட்டத்தில் இறங்கும். அதிகாலை நேரத்தில் நூற்றுக்கணக்கான சிறிய குருவிகள் இதற்காகவே மரங்களில் காத்திருக்கும். உயர எழும்பும் நீர்க்கோடுகளுக்கூடாக அவைகள் குதூகலமாக நனைந்து, நனைந்து பறக்கும்போது தான் இந்த மனிதப்பிறவி எவ்வளவு அற்பத்தனமானது என்று நமக்குப் புரியும்.

நர்சரியில் இருந்து சிறு செடிகளைக் கொண்டுவந்து நடும்போது இந்தக் குருவிகளின் தொல்லை சொல்லிமாளாது. இளந்தளிர்களைக் கொத்தி முழுங்குவதில் அவைகளுக்கு பரம சந்தோஷம். ஒரு நிமிடத்தில் எல்லாச் செடிகளையும் மொட்டையடித்துவிடும். இதில் அவைகளுக்கு பாட்டுவேறு. சும்மா சொல்லக்கூடாது. அற்புதமான சங்கீத ஸ்வர ஞானம். மீண்டும் மீண்டும் ஒரே ஸ்ருதியில் ஆரம்பம். பிரமாதமான டைமிங். அவைகளின் சங்கீத ஆசானை யாரென்று தேடுவது?

அதுசரி, இவ்வளவு விவரமாக இவ்வளவு அக்கறையாக மரஞ்செடி கொடிகள் பற்றி சொல்லிக்கொண்டிருக்கின்றானே என்று யோசிக்க வேண்டாம். அடியேன் தான் இந்த பிரிட்டிஷ் கிளப்பின் கார்டனர். இந்த வேலைக்கு வர எத்தனை இண்டர்வியூக்கள் , எத்தனை கேள்விகளுக்கு பதில்கள்! சரிஅதெல்லாம் இப்போது வேண்டாம்.

அபுதாபிக்கு, இந்த பிரிட்டிஷ் கிளப்புக்கு வேலைக்கு வந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. இங்கு வந்த பின்தான் இந்தக் குருவிகளோடு, அரணைகளோடு எனக்கு சினேகிதம் ஏற்பட்டது. குருவிகளோடு சரி அரணைகளோடுமா?ஆமாம்! எனக்குத் தெரிந்த மட்டில் அரணைகளோடு சினேகிதம் வைத்திருப்பவன் நான் ஒருவனாக மட்டும்தான் இருக்க முடியும். அப்படித்தான் நம்புகிறேன்.

நான் இங்கு வருவதற்கு முன்னர் ஓர் ஈரான்காரன்தான் இங்கு பணி புரிந்தானாம். திடீரென்று அவன் போய்விட சுமார் ஒரு மாத காலம்வரை கிளப்லாண்டரியில் பணிபுரியும் கன்னிலால் என்ற டில்லிக்கிழவன் தான் தோட்டத்தைப் பராமரித்தானாம். அவனும் அவனுக்கு அளிக்கப்பட்ட இரண்டு மணிநேரத்தில்தான் எல்லா வேலையையும் செய்ய வேண்டியிருந்தது. அவனைச் சொல்லிக் குற்றமில்லை. அவன் தன் லாண்டரி வேலையைக் கவனிப்பானா, அல்லது தோட்டத்தைப் பார்ப்பானா?

நான் வந்து சேர்ந்ததும் எனக்குத் தோட்டத்தில் நிறைய வேலைகள் இருந்தன. போகன்வில்லாச் செடிகளின் அடிகளில் உதிர்ந்த பூக்களும், காய்ந்த இலைச் சருகுகளும் இரண்டு வண்டிகளுக்கு ஏற்றக்கூடிய அளவுக்கு இறைந்து கிடந்தன. ட்ரிம் செய்யப்படாத செடிகள், லோன் மூவர் தழுவாத புல்வெளிகள் இப்படி இந்தியாதி பிரச்சினைகள்.

மெயின்கேட்டை ஒட்டி இருக்கும் நீண்ட மதிலோர செ[illegible]களின் அடிப்பாகங்களைச் சுத்தம் செய்து கொண்டிருக்கும்போதுதான் முதன் முதலில் சருகுகளின் இடையில் அந்தப் பளபளப்பைக் கண்டேன். நெளிந்து செல்லும் பாம்பின் உடல் மீது காணப்படும் பளபளப்பு. முதலில் இலைச்சருகுகளுக்கடியில் சரசரவென்று நகர்வது ஒரு பாம்பு என்றுதான் நினைத்தேன். பிறகுதான் அறிந்து கொண்டேன்அது பாம்பல்ல, மிக நீளமான அரணை என்று. எங்கள் நாட்டில் இருக்கும்அரணைகளைவிட அபுதாபி அரணைகள் நீண்டும் பெரிதுமாய் இருந்தன.

சிறுவயதில் அப்பா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. "அரணை கடித்தால் மரணம்" என்று. ஆனால் இதுவரை அரணை கடித்து யாரும் மரணமடைந்தார்கள் என்று நான் அறிந்தது கிடையாது. ஆனால் ஒரு தடவை எதோ வொரு பத்திரிகையில் சிறைச்சாலை ஒன்றில் அரணையைச் சமைத்து சாப்பிட்ட சில கைதிகள் மரணமானார்கள் என்று படித்திருக்கிறேன்.

அரணைகள் மிகவும் முட்டாள்தனமானவை என்பது என் அனுபவத்தில் நான் கண்ட உண்மை.

நீர்க்குழாயைத் திறந்தவுடன் தரைக்குள் இருந்து பீறிட்டு எழும் நீர்க்கோடுகளில் இவைகள் நனைந்து பளபளவென மின்னும். ரேக்கையால் சருகுகளை வாரி இழுக்கும்போது இவைகள் விலகி ஓடாமல் மிகவும் முட்டாள்தனமாக எதிராகவே ஓடிவரும். சில சமயம் புற்களை வெட்ட யந்திரத்தை உபயோகிக்கும்போது இவைகள் படும்பாடு வேடிக்கையாக இருக்கும். முதல் நாள் நான் புல்வெட்டும் யந்திரத்தை இயக்க அதன் சத்தம் இவைகளை மிகவும் பயமுறுத்தியது. சுவர் ஓரமாக யந்திரத்தை தள்ளிக்கொண்டு போனேன். இரண்டு அரணைகள் சுவர் ஓரமாக விறுவிறுவென ஓடிக் கொண்டிருந்தன. சுவரின் எல்லையில் மேற்கொண்டு ஓடுவதற்கு இடம்கிடை யாது. பெரிய சுவர் குறுக்கே நின்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# வெள்ளத்தை வெளியேற்ற அணைக்கட்டை உடைக்காதீர்; எப்போதும் சினங் காத்துக் கொள்ளுதலே சிறப்புத்தரும்!

எதற்கெடுத்தாலும் கோபப்பட்டுக் கொள்ளும் பல மனிதர்களை இன்று நாம் பரவலாகக் காண்கிறோம். தம்பதியர் ஒருவரோடு ஒருவர் சீறி விழுதல், பெற்றோர் பிள்ளைகளோடு சினத்தல், அலுவலகங்களில் தொழில் புரிவோர் கூட ஒருவரோடு ஒருவர் முகத்தைச் சுழித்தல், அயலவனைக் கண்டால் ஆத்திரம் அடைதல் ஆகிய இத்தகைய நிகழ்வுகள் இன்று சர்வ சாதாரணமாகி விட்டுள்ளன. எனது வீட்டுக்கு அண்மையில் வசிக்கும் ஆண்டு நான்கில் படிக்கும் சிறுமி ஒருத்தியின் கதை மனதுக்கு வருத்தம் தருவதொன்றாகும். பாடசாலையிலும், தான் கற்கும் பிரத்தியேக கல்வி நிலையம் ஒன்றிலும் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் மிகுந்த கோபக்காரராம். கொப்பி அல்லது வேறு ஏதாவது எழுதும் உபகரணங்களைக் கொண்டுசெல்ல மறந்துவிட்டால், கொண்டு சென்ற ஏனைய கொப்பி , புத்தகங்களைத் தலையில் வைத்துச் சுமந்துகொண்டு தங்கள் வகுப்பைச் சுற்றிச்சுற்றி நெடுநேரம் பல தடவைகள் ஓடும்படி பணிப்பாராம். தாம் ஓடவேண்டுமாம். மற்றைய மாணவர்கள் பார்த்துச் சிரிப்பார்களாம். தனக்கும் இப்படியான நிலை பல தடவைகள் ஏற்பட்டதாம். தனக்கு அழுகையே வந்து விடுமாம். மனத்தினுள் மௌனமாக அழுதுகொண்டு ஓடுவாளாம்.



"அங்கிள், காலமை விடிய ரியூசன். பிறகு பள்ளிக்கூடம். பள்ளிக்கூடத்தாலை வந்தவுடனை சாப்பிட்டுவிட்டு அவசர அவசரமாக மீண்டும் ரியூசனுக்கு ஓடிப்போறது. மறதி வராதோ?"

"உண்மைதான் பிள்ளை"

"படிப்பிலை ஏதும் பிழைவிட்டுவிட்டால் உச்சந் தலையிலை குட்டு குட்டென்று குட்டுவது அவரது வழக்கம். அங்கிள், இன்று அந்தச் சேர் எனக்கு குட்டியதால் தலையிடியை என்னால் தாங்கவே முடியவில்லை." ஒருநாள் மாலையில் வந்த அந்தச் சிறுமி என்னிடம் சொன்னாள்.

"அப்பா, அம்மாவிட்டைச் சொல்லிப் பாரன் பிள்ளை"

"அவை வந்து, அதைப் பற்றிக் கேட்க மாட்டினம். சேர் அடிக்கேக்கையும் பெரிய கொட்டனாலைதா[illegible] அடிப்பார். எனக்குக் கை முறிஞ்ச மாதிரி இருக்கும்".

இந்தப் பிள்ளையின் சிரமத்துக்கு நான் எப்படி உதவுவது? சரீர தண்டனை வழங்கக் கூடாது என்று சட்டம் வேறு இருக்கிறதே. ஆசிரியர் அதனை அறிய மாட்டாரா? ஆசிரியரின் இந்தச் செயற்பாடு, சிறுமியின் உடல், உளம் இரண்டையும் பாதிப்பதை ஆசிரியர் உணர மாட்டாரா? இத்தகைய ஒவ்வாத உளவியல் தாக்கம் பாரிய பின்விளைவை ஏற்படுத்தும் என்பதை அந்த ஆசிரியர் அறிய மாட்டாரா?

கோபம் மிகக் கூடாதது. ஔவைப்பாட்டி மிக அழகாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் இரண்டே வார்த்தைகளில் "ஆறுவது சினம்" என்று சொல்லிவிட்டார். 'ஆத்திசூடி'யில் பதிவான செய்தி இது. 'கொன்றை வேந்தன்' இதை மேலும் விவரமாகச் சொல்கிறது.

"தீராக் கோபம் போராய் முடியும்"

இது சின்னஞ் சிறார்களுக்கு மிக எளிமையாகச் சொல்லப்பட்ட செய்தி. கொஞ்சம் வயது முதிர்ந்தவர்களுக்கு மிக அழகாக, உவமான, உவமேயங்களுடன் மிக அழுத்தமாக இதே விடயத்தைச் சிவப்பிரகாச சுவாமிகள் தமது 'நன்னெறி'யில் சொல்லிய விதம் வேறு. அணைக்கட்டின் உள்ளே வெள்ளம் முட்டி நிற்கின்றது. அதை அப்படியே தடுத்து வைத்திருத்தல் சிறப்பானதா? அல்லது அணைக்கட்டைப் பேர்த்து வெள்ளத்தை வெளியே பாய விடுவது சிறப்பானதா? முன்னையதே சிறப்பு அல்லவா? ஆகையால் உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினம் காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க.

**உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்**
**கொள்ளும் குணமே குணமென்க - வெள்ளம்**
**தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து**
**விடுத்த லரிதோ விளம்பு.**

'வாக்குண்டாம்' என்ற மற்றொரு நீதி நூலிலே, சினம் ஏற்பட்டாலும் அதை முடிந்தவரை சீக்கிரமாக மாற்றிக் கொள்ள வேண்டும். சீர் ஒழுகு சான்றோர் சினம், மிகச் சீக்கிரமாக மாறிவிடும் என ஔவைப்பிராட்டியார் சொல்லிய செய்தியை மனங்கொண்டால் நல்ல மனம் உண்டாம். தீயவர்களின் சினம் கற்பிளவுக்கு ஒப்பானது. உடைந்தால் ஒட்டுவது கடினம் சினத்தில் பொன் பிளவோடு ஒப்பாரும் சிலர் இருக்கிறார்கள். பொடி வைத்து ஒட்டுவது போல அவர்கள் சினம் கொஞ்சம் தாமதித்தாலும் ஒட்டிவிடும். வில்லைப்பிடித்து நீரைக் கிழிக்கும் [illegible] அந்த அம்பினால் நீரில் ஏற்படும் வடு உடனேயே மாறிவிடும். அது போன்றதே சீர் ஒழுகு சான்றோர் சினம். சீக்கிரமே மாறிவிடும் அதுவே சிறந்தது.

**கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ் சினத்துப்**
**பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே - விற்பிடித்து**
**நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே**
**சீரொழுகு சான்றோர் சினம்.**

நீதி நூல்களில் மாத்திரமன்றிக் காவியங்களிலும் பாத்திரங்கள் வாயிலாக, எக்காரணம் கொண்டும் வெகுண்டு எழுதல் கூடாது என்று விளக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். இராமன் காட்டுக்குப் போன செய்தியறிந்து, பரதன், அவனை மீட்டுவரப் படையோடு சென்றான். தூரத்தே படையோடு பரதனைக் கண்ட இலக்குமணன், அவன் போருக்கே வருகின்றான் என்று வெகுண்டு எழுந்தான்.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

-தனங்கிளப்பு, வ.சின்னப்பா.

# விதி மறந்தாய்; புயலே ஆச்சு!

- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.

விழிகளிற் கண்ணீர் பெருக நின்று
வெள்ளத்தி னுள்ளே தவித்தோ மென்றே
பழிதனை எந்தன் மீது நீயும்
சுமத்தினாய் மகனே, ஒன்று கேட்பேன்
அழிவுனக் கெதனால்? என்றே சற்று
அறிவொடு நீயும் சிந்தித் தாயா?
கழிவிரக் கங்கூட இன்றி இன்னும்
கடவுளைப் பழித்தல் பிழையே யன்றோ?

அறநெறி பற்றிநீ வாழ்ந்த காலை
அழித்ததோ இயற்கை? சொல்வாய் மகனே
இறைவன் வகுத்த இயற்கை நெறியை
எப்படி யெல்லாம் சிதைத்தாய் நீயும்!
மறைவாய்க் குப்பை குவித்தது தானா?
மற்றவை யெல்லாம் மறந்தா போனாய்!!
குறைகூற முன்னர் கொஞ்ச முந்தன்
குற்றங்களையும் எண்ணிப் பாராய்

இயற்கையைப் படைத்துநீ இனிமையாய் வாழ
எத்தனை தந்தேன்! இன்னுமே அவனி
செயற்கையாயும் பலபல செய்தார் அறிஞர்கள்
சொகுசைக் கூட்டினர் நுகர்ந்து மகிழ்ந்தாய் - அதனால்
அயற்புறந் தொடங்கி அதற்கும் மேலும்
அனைத்தும் மாசுறல் உணர்ந்தனர் அறிஞர்கள்
இயற்றினர் பற்பல விதிகள் அவற்றைநீ
இம்மி யேனும் சிந்தை கொண்டாயா?

சுயநலம் ஒன்றே கொண்டு நீ உன்
சுகமதற் காகவே வாழ்கின் றாயே
அயலதை நேசி அறமதை நாடு
அடுத்தவர் நலத்தையும் அவசியம் கவனி - உலக
நயமதற்காக நல்லோர் வகுக்கும்
விதிகளை யெல்லாம் வேதமாய்க் கொண்டிடு
நியமம் நிலைக்கும் உலகம் சிறக்கும்
நித்தம் மகிழ்வுடன் நீயும் வாழலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளின் பண்டைய பெயர்கள்

| தற்போதுள்ள பெயர் | பண்டைய பெயர் |
|---|---|
| 1) மியான்மார் | பர்மா |
| 2) சிம்பாவே | ரொடீசியா |
| 3) ஈரான் | பாரசீகம் |
| 4) ஸைரே | கொங்கோ |
| 5) எத்தியோப்பியா | அபிசீனியா |
| 6) ஈராக் | மெசப்பெத்தோமியா |
| 7) நெதர்லாந்து | ஒல்லாந்து, கொலண்ட் |



ய.கோபிகா, 7C,யா/இந்து மகளிர் கல்லூரி.

# அறிந்துகொள்வோம்

* சப்தரிஷி மண்டலம் என அழைக்கப்படும் உடுத்தொகுதி எது?
  பெருங்கரடி
* மனிதன் குடியேறத் திட்டமிட்டுள்ள கோள் எது?
  செவ்வாய்
* உலகப் புகழ்பெற்ற சாய்ந்த கோபுரம் எங்குள்ளது?
  இத்தாலி
* இந்துமதத்தின் மறுபெயர் என்ன?
  சனாதன தர்மம்

ஜெ.அஜித்தன், 7, யா/நெல்லியடி மமவி.

# நான் விரும்பும் நூல்

தமிழ்த் தாயின் மணிமுடியாய் அணி செய்யும் திருக்குறளே நான் விரும்பும் நூலாகும். இது 'செந்நாப்போதர்' வள்ளுவரால் உரைக்கப்பட்ட திரு நூலாகும். மனித வாழ்வுக்கு அரியதொரு வழிகாட்டியாக இந்நூல் திகழ்கின்றது.

திருக்குறள் ஆனது அறத்துப்பால், பொருட் பால், காமத்துப்பால் எனும் மூன்று பெரும் பிரிவு களைக் கொண்டுள்ளது. இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் அனேக பொருளடக்கங்களைக் கொண்டவை. ஒரு பொருள் பற்றிப் பத்துக் குறள்கள் கொண்ட அதிகாரங்கள் நூற்று முப்பத்துமூன்று உள்ளன. ஒவ்வொரு திருக்குறளும் இரு அடிகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. எத்துணைப் பெரிய பொரு ளையும் ஈரடியில் வெளிப்படுத்தும் சிறப்பு திருக் குளுக்கே உரியது. இதனால் 'குறுகத் தறித்த குறள்' என்ற போற்றுதலை உடையது. இந்நூலர்னது,மிகத் தொன்மை வாய்ந்தது. ஆயினும் எக்காலத்துக்கும் பொருந்துகின்ற அரிய பல கருத்துக்களைக் கொண்டுள்ளது. எத்தேசத்தவர்க்கும் வழிகாட்டுகின்ற ஒளிச்சுடராய் விளங்குகின்றது. வாழ்வின் எந்தப்படி நிலையில் உள்ளவர்களுக்கும் இது உறுதுணையாய் உதவுகின்றது. மானுட வாழ்வில் ஆற்றவேண்டிய அறநெறிகள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன. இல்லறத்தில் உள்ளவர்கள் செய்யவேண்டிய நல்லறங்கள் கூறப்படுகின்றன. துறவறம் பூண்டவர்களும் துணையாகக் கொள்ளவேண்டிய கொள்கைகளும் திருக்குறளில் சொல்லப்படுகின்றன. இன்னும் நாடு ஒன்றை நல்வழியில் ஆளுகின்ற திறம் பற்றியும் திருக்குறள் உரைக்கின்றது. நீதியான ஆட்சி முறை, பகைவரை வெல்லும் தகைமை போன்ற பல இந்நூலின் கண்பரவிக் கிடக்கின்ற பொருள்களாகும். வாழ்வினை வளம்படுத்துகின்ற அன்பின் தன்மை இன்பத்துப்பாலில் இயம்பப்படுகின்றது. இவ்வாறு உலகப் பொருளனைத்தையும் ஈரடியில் சொல்கின்ற திருக்குறள் உலகனைத்தும் வேண்டுகின்ற பொது நூலாய் ஆகிவிட்டது. ஆங்கிலம் முதலாய் அனேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலகப் பொது நீதி நூலாய் ஒப்பற்ற புகழினைத் தமிழ் நாட்டிற்கு தந்துள்ளது.

*"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு"* என்கிறார் பாரதியார். தெள்ளுதமிழில் தெளிந்த நற்கருத்துக்களைக் கொண்ட திருக்குறளை நான் மிகவும் விரும்புகின்றேன். குறள் சொல்லும் வழிநின்று வாழ்ந்து இறவாத புகழ் பெறுதலே என் வாழ்வின் இலட்சியமாய்க் கருதுகின் றேன். நல்வாழ்விற்கு உறுதுணையான திருக்குறளை எல்லோரும் கற்று இன்புற்று வாழ்வோமாக.



த.கிருஷாயினி, தரம் - 6A,யா/வ.இ.ம.க.

# சூரியன்

சூரியன் தரும் ஒளியதனில்
சுருண்டெழுந்து வந்ததனால்
உழவனவன் கை பட்டு
உலகெல்லாம் செழித்திடுமே!



உழவர்கள் உனக்காக எடுக்குமோர்
விழாவடா தைத்திருநாள்
தாவரங்கள் வளர்ந்திட - உயிரினங்கள் வாழ்ந்திட
நீ செய்யும் தொண்டு பெரிதடா

செந்தூர்க்குமரன், தரம் 8B, பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

# கிளி

பச்சை நிறக் கிளியே - கேள்
உனக்கு இந்த அழகைத் தந்ததாரோ
சின்னஞ்சிறிய சிறுவர்களின் - மனங்களை
கொள்ளைகொண்டதேனோ
உன்னைப்போல நானுமிருந்தால் - வானில்
உயரப் பறந்திடுவேனே.

த.குருபரன் தரம்– 5A
கொத்தணி அ.மி.த.க.பா.



# சிறுவர் கதிர்

## உண்மையான நண்பன்



கமலன், அமலன் என இரண்டு மாணவர்கள் ஒரே பாட சாலையில் படித்து வந்தனர். சில நாள்களில் அவர்கள் இருவரும் நண்பர்களானார்கள். அவர்கள் இருவரும் படித்து முடித்ததும் வேலை தேடத்தொடங்கினர். கமலனுக்கு ஒருபெரிய இடத்தில் வேலை கிடைத்தது. ஆனால் அமலனுக்கு வேலை ஒன்றுமே கிடைக்கவில்லை. கமலன், அமலனுக்கு வேலை கிடைக்காததை எண்ணிக் கவலையடைந்தான். ஆனால் அமலனோ தனக்கு வேலை கிடைக்காததையும் கமலனுக்கு வேலை கிடைத்ததையும் எண்ணிப் பொறாமைப்பட்டான். ஏனென்றால் அமலன் சிறு வயதிலிருந்தே கமலனுடன் கபட நட்புடன் பழகி வந்தான். ஆனால் கமலனோ, அமலனோடு உண்மையான நட்புடன்தான் பழகி வந்தான். பொறாமைப்பட்ட அமலன், கமலனை விட மேலதிகமாக உழைக்க வேண்டும் என எண்ணிக் கமலனிடம் ஐந்தாயிரம் ரூபாய் பணம் வாங்கித் தனது வீட்டிற்குப் பின்புறம் இருந்த நிலத்தில் காய்கறி மரங்களை நாட்டினான். "இந்தக் காய்கறி மரங்களிலெல்லாம் காய்கறிகள் பூத்துக் குலுங்கி, நான் அவற்றை விற்று, கமலனின் பணத்தை கொடுக்காமல் ஏமாற்றலாம்" என்று நினைத்தான். ஆனால் அன்று விடாமல் மழை பெய்ததனால் பயிர்கள் எல்லாம் நாசமாகின. அத்தோடு அமலனுக்குக் கடும்நோயும் ஏற்பட்டது. நண்பனுக்கு வருத்தம் என்ற செய்தி கமலனுக்கு எட்டியது. அவன் தன் வேலையில் லீவு எடுத்து விட்டு தன் நண்பனைப் பராமரித்தான். அமலனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

ச.கலைச்செல்வன், தரம் - 4B யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

# பொன்மொழிகள்

1) ஒரு முட்டாள் பல முட்டாள்களை உருவாக்குகிறான் ஆனால், ஓர் அறிவாளி பல முட்டாள்களைத் தெளிவாக்குகின்றான்.
2) மனிதனிடம் அறிவு உறங்கினால் மிருக இச்சைகள் தண் விழித்தெழுந்து குதியாட்டம் போடுகின்றன.
3) முட்டாள்களின் தோழமையைவிட ஒருவன் தனியாக வாழ்வது எவ்வளவோ மேலானது.
4) பொறாமை மடைமைக்கு ஒப்பானது. கோழைத்தனம் தற்கொலைக்கு ஒப்பானது.
5) கற்பது கடினம். ஆனால் அதைவிடக் கடினம் கற்பதை மறப்பது.
6) நம்பிக்கை நல்வழி காட்டும், சந்தேகம் சங்கடம் தரும்.

சி.நிரோஷினி, தரம் - 9D,யா/வேம்படி மகளிர் கல்லூரி

# மாயத்தீவில் மந்திரக் கிழவி 18



சிறுவர் மர்மத்தொடர்

கண்ணாடியில் தமது குருநாதர் தோன்றியதும் "வணங்குகிறோம் குருநாதரே" என்று கூறி, இரு கைகளாலும் வணங்கினர்.

"என் ஆசி உங்களிருவருக்கும் எப்போதும் உண்டு. அதுசரி! நீங்கள் பத்திரமாகத் தானே இருக்கிறீர்கள்? மாயக்கிழவி உங்களைத் துன்புறுத்தவில்லையே?"

என்று குருநாதர் கேட்டார்.

"இல்லை குருவே! எங்களை மாயத்தீவுக்கு அழைத்து வருவதற்காக மட்டும் ஏதோ ஒரு மந்திரப் புகையைப் பிரயோகித்தாள். இதைத் தவிர வேறெந்தத் தீங்கும் அவள் இதுவரை செய்யவில்லை" என்றான் சந்திரவர்மன்.

"நல்லது பிள்ளைகளே! என்னதான் மாயத்தீவு மந்திரக்கிழவி பில்லி சூனியத்தில் கை தேர்ந்தவளாக இருந்தாலும், நிறையப் பலவீனங்களும் கொண்டவள். அந்தப் பலவீனத்தை வைத்தே அவளை அழிக்க வேண்டும்"



என்று குருநாதர் கூறினார்.

"ஆனால் அவளிடம் எந்தப் பலவீனமும் இருப்ப தாக நாங்கள் அறிய வில்லையே?" என்றான் இந்திரவர்மன். அவனின் பதிலைக் கேட்ட குருநாத ரின் இதழ்களில் ஒரு குறுநகை உதயமானது.

"இந்திரா! மாயக்கிழவி மந்திர, தந்திரங்களில் கை தேர்ந்தவளாய் இருந்தால் இந்த மாயக்கண்ணாடி மூலம் நாம் உரையாட முடியுமா? தடுத்திருக்கலாம்! இவ்வாறு அவளிடம் உள்ள சின்னச் சின்னப் பலவீனங்களைக் கண்டறிந்து சொன்னீர்களானால் அவளை நீங்கள் வென்று வரக்கூடிய வழிகளை நான் சொல்ல முடியும்" என்றார் குருநாதர்.

"அப்படியே செய்கிறோம்!" என்று ஒருமித்த குரலில் இளவரசர்கள் சொன்னதும், கண்ணாடியில் இருந்து குருநாதரின் உருவம் மறையத் தொடங்கியது.

(தொடரும்)

# ஆசான்



கர்ணன் நண்பனுக்காக
உயிர் நீத்தான்
பாரி முல்லைக்கொடிக்கு
தேர் கொடுத்தான்
இவர்கள் அந்நாளைய வள்ளல்கள்!
அரிவரி மழலையாக
வந்த எம்மை
அன்பும் பண்பும்
அச்சாணிகளாய் கொண்டு
எண்ணெழுத்தோடு
உலகறிவும்
அள்ளி வழங்கி ஏற்றம் தரும்
ஆசான்களே இன்றைய வள்ளல்கள்.

எம்.நிஷாங்கினி, 7D
யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.

# நீங்களும் எழுதலாம்



(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)
மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


மாணவர் பெயர் :-..............................
தரம்
:-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

# மாணவர் தூரிகை

ச.மதுசன்
தரம் - 5 C,
புனித பத்திரிசியார் கல்லூரி.




ம.அருண்யா,
தரம் - 6 A,
கொக்குவில் இந்துக் கல்லூரி.



சி.பிரணவி,
யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



ந.தனுபாதன்,
தரம் - 7,
யாழ்/மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்களம் உண்மையும் நடப்பியலும்

- பு.சத்தியமூர்த்தி -

டிசெம்பர் முதல் வாரத்தில் சிறிலங்கா அரசினதும் அதன் படைகளினதும் ஊடகப்பிரிவுகள் சுறுசுறுப்பாகத் தகவல்களை வெளியிட்டுக்கொண்டிருந்தன.

நவம்பர் நடுப்பகுதியில் பூநகரியை 58 ஆவது படையணிக் கொமாண்டோக்கள் கைப்பற்றிய செய்தியை வெளியிட்டதைப்போன்று மகிமை மிக்கதொரு தகவலை வெளியிடுவதற்கான முன்னோட்டம் போன்று அவை காணப்பட்டன. அதேவேளை டிசெம்பர் 7 ஆம் திகதி கொழும்பின் வார ஏடுகள் அனைத்துமே, எஞ்சியுள்ள மாகாண சபைகள் ஐந்தும் கலைப்படுவதற்கான ஏற்பாடுகளில் ஜனாதிபதி ஈடுபட்டிருக்கிறார் எனவும் அதற்கான அறிவித்தல் 48 அல்லது 72 மணிநேரத்திற்குள் அநேகமாக வெளிவரக் கூடுமெனவும் ஆரூடம் கூறும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இதற்கான அரசியல் நிர்ப்பந்தம் என்னவெனில், நவம்பர் கடைசி வாரத்தில் எட்டப்பட்டு விடும் என ஜனாதிபதியின் சகோதரரும் அவரது மிக நெருங்கிய சகாவான இராணுவத் தளபதியும் வெளியிட்டிருந்த இராணுவ எதிர்வு கூறல்கள் களத்திலே எட்டப்படாமற்போன துன்பியலை மறைப்பதாகும்.

அதாவது, கிளிநொச்சியை வீழ்த்தியமை குறித்த செய்தியை நவம்பர் 26 இல் அல்லது 27 இல் வெளியிடுவதற்குக் காத்திருப்பதாக அவர்கள் கூறியிருந்தது ஏமாற்றத்தில் முடிந்திருந்த காரணத்தால் அதிலிருந்து அனைவரது கவனத்தையும் திசை திருப்பவேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. எனவேதான் ஏ - 9 பாதையிலுள்ள சிறு நகரங்களைக் கைப்பற்றுவதான செய்திகளை அடுத்தடுத்து வெளியிட்டு அசத்திக்கொண்டிருக்கிறது இராணுவம். இவை சந்திரிகா அம்மையார் காலத்து ஜயசிக்குறு நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவத்தினரது குருதியில் சேறாகிப்போன இடங்கள் என்பது சிறிலங்காவின் மக்களால் இலகுவில் மறக்கப்பட முடியாதவை. ஆகவே அதை, அந்த மனநிலையைத் தொடக்கூடியவகையில் இந்தச் செய்திகள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், கனகராயன்குளம் கைப்பற்றப்பட்ட செய்தியை டிசெம்பர் 6 ஆம் திகதி வெளியிட்ட இராணுவம் மறுநாள் மன்னகுளம் வீழ்ந்து விட்டதாக அறிவித்ததாகும்.

பல மாதங்களாகவே வன்னிவிளாங்குளத்துக்குக் கிழக்காக இராணுவ முன்னரண் வரிசை அமைந்திருந்த நிலையில், மாங்குளம் நவம்பர் நடுப்பகுதியில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டிருந்தது.

டிசெம்பர் 6 ஆம் திகதி கனகராயன்குளமும் வீழ்ந்துவிட்ட நிலையில் ஏ - 9 இற்கு மேற்காகவுள்ள மன்னகுளம் என்பது எந்தவித முக்கியத்துவமற்ற பகுதியாக இருந்தது. அதனைக் கைப்பற்றியதாக இராணுவம் அறிவித்தது ஒரு பகட்டாரவாரமான நடவடிக்கையே அன்றி வேறில்லை. இதன் இலக்கு ஜயசிக்குறு கால நினைவுகளை மீட்டுகின்ற ஒன்றாகும். அவற்றுக்கு ஒத்தடம் கொடுப்பதன் மூலம் தென்னிலங்கையிலே போர் வெற்றி பற்றிய எதிர்பார்ப்புகளை உச்சம்பெறச் செய்யமுடியும் என்று அரசு கருதுகிறது.

ஆனால், போர் இனிமேல்தான் அதனது உண்மையான கோரவடிவத்தைப் பெறப்போகிறது என்பதை கொழும்பின் ஆட்சிப்பீடமும் அதனது இராணுவ இயந்திரமும் வசதியாக மறைத்து வருகின்றன.

மக்களது புத்தியைச் செயற்படவிடாது போதையேற்றும் போர் வெற்றிச் செய்திகளையே தொடர்ந்து உற்பத்தி செய்துகொண்டிருப்பதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பேரபாயம் குறித்து அவர்களைச் சிந்திக்காமல் தடுக்க விளைகிறது அரசு. இராணுவத்தின் தளபதியும் அதிகாரிகளும் அதற்கு பூரணமாக ஒத்துழைக்கின்றனர். ஆட்சியாளரும் போரை நடத்துபவரும் சகோதரர்களாயிருப்பதும் இராணுவத்தளபதி போரை நடத்துகின்றவரான ஜனாதிபதியின் சகோதரரின் நண்பராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருப்பதும் இந்த அபாயகரமான அரசியல் விளையாட்டுக்கு வாய்ப்பாக அமைகின்றன. இதன் அர்த்தம் இராணுவத்தளபதியும் இந்த அரசியல் விளையாட்டின் பங்காளி என்பதாகும்.

அதேவேளை, இராணுவத்தளபதிக்கும் தீவிரமான அரசியல் அபிலாசைகள் இருப்பதாகவும் அது குறித்து அரசியல் தலைமைக்கு உள்ளூர தமது இருப்புக்குறித்த அச்சமும் விழிப்புணர்வும் இருப்பதாகவும் உள்ளிடத்தகவல்கள் மூலம் கொழும்பின் இராஜதந்திர வட்டாரங்களினால் அறியப்பட்டுள்ளது.



தமது ஆட்சியின் இருப்பின் அடிப்படையே இராணுவ வெற்றிகள்தான் என்பதிலே தெளிவுடனிருக்கும் ஆட்சியாளர்கள், அதனை எட்டுவதற்கு தற்போதைய இராணுவத் தளபதியையே நம்பியிருக்கின்றனர் எனினும், அதன் காரணமாக அவர் பெறுகின்ற நட்சத்திர அந்தஸ்தை, தேசிய வீரன் என்ற கௌரவத்தை அரசியல் மூலதனமாக அவர் மாற்றிக்கொண்டு விடக்கூடாது என்பதில் அவர்கள் தீவிர விழிப்புடனிருப்பது இராஜதந்திர வட்டாரங்களின் அவதானிப்பாகும்.

புலிகள் தமது இருப்பை இப்போது மிக வரையறுக்கப்பட்ட நிலைகளுக்குள் நிலைப்படுத்திக்கொண்டு விட்டனர் என்பது தகவல்களை வெகு மேலோட்டமாகப் பகுப்பாய்வு செய்பவருக்குக்கூட நன்கு புரியும்.

கிழக்குக் கரையிலே முல்லைத்தீவு நகருக்குத் தெற்காக அளம்பிலை முன்னரங்காகக்கொண்டு முள்ளியவளைக்கும் ஒட்டுசுட்டானுக்கும் தெற்குப் புறமாக அம்பகாமம் பகுதியூடாகச் செல்லும் புலிகளின் முன்னரண் வரிசை, கிளிநொச்சியை முறிகண்டியையொட்டி மேவி புதுமுறிப்பு, சிவநகர், குஞ்சுப்பரந்தன் ஊடாகக் கடல் நீரேரியைச் சென்றடைகிறது. இதற்குத் தெற்கான அவர்களது நிரந்தர நிலைகள் பின்வலிக்கப்பட்டு அங்கே நடமாடும் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்த அணிகளுக்குப் புறம்பாக விசேட நடவடிக்கைகளுக்கான பல்வேறு அணிகள் நடமாடுகின்றன.

தமது முன்னரண் வரிசைக்குப் பின் பாக ஒன்றுக்கும் மேற்பட்ட மண்ணரண் களை அப்பகுதிகளின் புவியியல் நிலை களுக்கு ஏற்ப அமைத்துள்ள புலிகள், ஒவ் வொரு பகுதிகளுக்கும் மூத்த, கட்டளை யதிகாரிகளின் கீழ் நன்கு பயிற்றப்பட்ட துருப்புக்களை நிறுத்தியுள்ளனர்.

அத்தோடு தரைத்தோற்றத்துக்கு ஏற்றவாறு அதிநவீன, கனரக ஆயுதங்களை முன்னுதாரணமற்ற முறையில் பயன்படுத்துவதற்கு தயார் நிலையில் விசேட அணிகளையும் நிறுத்தியுள்ளனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளிவரும் பகிரங்க, உட்சுற்று ஊடகங்கள், பிரசுரங்களில் வெளியாகும் புகைப்படங்களைக் கவனிக்கும் அவதானிகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவேதான் 2009 இற்குரிய தனது கொள்கை விளக்க உரையிலே புலிகளின் தலைவர் பிரபாகரன், ''தற்போது எதிர்கொள்ளப்படும் நெருக்கடி எமக்குப் புதிதுமல்ல, பெரிதுமல்ல'' என அழுத்தமாகத் தெரிவித்துள்ளார் என புலிகளுக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

''ஒரு அரண் இழக்கப்பட்டால் அதற்குப் பின்னே அடுத்ததை அமைத்துப் போரிடுவோம்'' எனப் புலிகளின் தளபதிகளும், அரசியல்துறைப் பொறுப்பாளரும் பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தக் கூற்றுக்களுக்கு வலுச்சேர்க்கும் விதமாக உடல் வலுவுள்ளவர்கள் அனைவரும் அடிப்படை இராணுவப் பயிற்சிகளைப் பெறவேண்டுமென்ற நியமத்தைப் புலிகள் கொண்டு வந்திருக்கின்றனர்.

போர்க்கால வேகத்தில் நடைபெறும் இந்த நடவடிக்கை மூலம் சில வாரங்களுக் குள்ளேயே பல்லாயிரம் பேர் காவற் கடமைக் கும் அதனோடிணைந்த இராணுவத் தேவை களுக்கும் தயார்படுத்தப்பட்டுள்ள நிலைமை வன்னியிலே தோன்றிவிட்டது கவனிக்கத்தக்கது.

1999 இல் புலிகளின் புகழ்பெற்ற ஓயாத அலைகள் - 03 நடவடிக்கைக்கு முன்பாக வும் வன்னியிலே இதே நிலைமையே காணப் பட்டது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த நடவடிக்கையிலே இராணுவம் தனது 53 ஆவது, 56 ஆவது படையணிகளுடைய தலைமையகங் களையும் இழந்து ஒருவாரத்துள் பலநூறு சதுர கிலோ மீற்றர் பரப்பிலிருந்து - இப்போது செய்திகளில் அடிபடும் ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி - புளியங்குளம் - மன்னகுளம் - மடு பகுதியிலிருந்து விரட்டப்பட்டது. இதன் காரணமாக இராணுவத்தின் இரண்டு டிவிசன்களின் தளபதிகள் இராணுவ நீதிமன்றினால் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டதும் கவனிக்க வேண்டியதாகும்.

களமுனையிலே இராணுவத்தின் நகர்திறனும் இழப்புகளும் எவ்வாறுள்ளன? இராணுவம் புலிகளின் அரண் வரிசைகளுடனோ அல்லது வலுவான படைப்பிரிகளுடனோ நேரடியாக மோதுவதைத் தவிர்த்து இடைவெளிகளூடாகக் கசிந்து நுழைந்து பின்புறமாக மேவுகின்ற, ஒருவித கெரில்லாப்பாணித் தாக்குதல் உத்தியையே மாவிலாற்றிலிருந்து அளம்பில், பூநகரி வரைக்கும் பின்பற்றி வருகிறது.

8 வீரர்களைக் கொண்ட சிறுகுழுக்கள் இதில் முக்கிய பங்காற்றுகின்ற அதேவேளை ஆழ ஊடுருவும் அணிகள் தாக்குதல், வேவு ஆகிய இரட்டைப்பணிகளையும் ஆற்றுகின்றன.

புலிகள் பரந்து விரிந்த, காடு சார்ந்த பகுதிகளைக் கட்டுப்படுத்தியிருந்த நிலையில் அவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியுடன் இந்தக் கெரில்லா உத்தியை எதிர்கொள்வதிலே குறிப்பிடத்தக்களவு சிரமங்களையும் பின்னடைவுகளையும் எதிர்கொண்டிருந்தனர்.

அதன் விளைவாகப் பெருமளவு நிலப்பகுதிகளை படையினரிடம் முன்னு தாரணமற்ற வகையில் இழந்துமிருக்கின் றனர். ஆனால், இப்போது புலிகளின் பகுதிகள் வெகுவாகச் சுருங்கிவிட்ட நிலையில் இந்த உத்திகள் மேலும் பலனளிக்குமா என்ற கேள்வி இராணுவ விற்பன்னர்களால் எழுப்பப்படுகிறது.

ஏனெனில் புலிகள் தமது ஆளணியை இயன்றளவு சேதமின்றிப் பேணிய படியும், ஆயுத பலத்தைப் பொத்திவைப்பது போன்று தக்கவைத்தபடியும் கட்டுப்பாட்டுப் பகுதி களிலிருந்து பின்வாங்குவதென்பது படை யினரது இந்த உத்திக்கான பதிலிறுப்பாகத் தான் என்பது அவர்களது கணிப்பு.

வரையறைக்குட்பட்ட நிலப்பகுதியில் வலுப்படுத்தப்பட்ட அரண் வரிசைகளில் நெருக்கமாகவும் ஒப்பீட்டளவில் குறிப் பிடத்தக்க ஆயுத பலத்துடனும் சூட்டு வலுவுடனும் புலிகள் நிலைகொள்ளும் போது இராணுவத்தின் உத்திகள் பலனளிக் காமல் போகும் என்பதே புலிகளது கணக்கு. இதனைக் கடந்த இரண்டரை வருடங் களாக உறுதியாக நிற்கும் கிளாலி, முக மாலை, நாகர்கோவில் முன்னரங்குகளும் (இங்கே 12 கிலோமீற்றர் முன்னரங்கில் இரண்டு முழு டிவிசன்கள் பூரண பலத் தோடு முயன்றும் புலிகளை அசைக்க முடியவில்லை), தற்போது களத்திலே இராணுவம் சந்திக்கும் இழப்புக்களின் அளவும் மெய்ப்பிக்கின்றன.

கடந்த சில வாரங்களாகக் களத்திலே காயமடையும் படையினரது எண்ணிக்கை சடுதியாக உயர்ந்திருக்கிறது. இந்தக் காயங்களும் படையினரைக் களத்திலிருந்து நிரந்தரமாகவோ, நீண்ட காலத்துக்கோ அகற்றி விடுமளவுக்குப் பாரதூரமானவையாகவே இருக்கின்றன.

இதற்கு காரணம் புலிகள் பெருமளவு கனரக ஆயுதங்களை மரபு ரீதியற்ற முறையிலே பாவிப்பதாகும். உதாரணமாகக் கடலிலே இடம்பெறும் சமர்களிலே பாவிக்கப்படும் 23 மி.மீற்றர், 30 மி.மீற்றர் கனரகப் பீரங்கிகளைத் தரைத்தாக்குதலுக்குப் பாவிக்கின்றனர். இவற்றின் எறிகணைகள் மோதல் தலத்திற்கு அப்பால் பின்தள வேலைகள், தளவேலைகளில் ஈடுபடும் படையினரது உயிர்களையும், உடல் அவயவங்களையும் பறிக்கவல்லன.

இவற்றின் எறிகணைகள் இலக்கிலே பட்டதும் வெடிக்கும் இயல்புடையவையாதலால் அவற்றால் தாக்கப்படும் படையினர் கொல்லப் , படுவதோ அல்லது மிகக் கடுமையாகக் காயமடைவதோ நிச்சயமாகும். மட்டுமன்றி, இவை படையினரது காவலரண்கள், வழங்கல் வாகனங்கள், உலங்குவானூர்திகள் போன்றவற்றைத் துவம்சம் செய்து விடவல்லன.

ஒரு 'நடைமுறை அரசாங்கத்தை' (Defector state) நடத்தும், சர்வதேச ரீதியான பங்கேற்பு, பேச்சு, ஒப்பந்தம் என்றளவுக்குச் சென்றுவிட்ட புலிகள் இன் னொரு முறை கெரில்லாக்களாகிக் காடு களில் கரந்துறையவும் மறைந்திருந்து சிறு சிறு தாக்குதல்களில் ஈடுபடவும் நேரிடு மளவுக்குத் தமது நிலைமை சீரழிவதற்கு இடமளிக்கமாட்டார்கள் என்பதும் -


எதிர்வரக்கூடிய நிலைமைகள் தொடர்பான தெளிவான முன்னுணர்வு, கணிப்பீடு, திட்டமிடலும் தயார்நிலையும் என்பன மூன்று தசாப்தங்களாக போரிடும் புலிகளிடம் நிச்சயம் இருக்கும் என்பதும் - ஆட்சியாளர்களாலும் அவர்களது பகட்டார வாரமான தகவல்களை அப்படியே விழுங்குபவர்களாலும் சந்தர்ப்பவசமாக மறக்கப்பட்டுவிட்டன. இந்த மறதியானது வரலாற்றில் என்றும் அழியாத துன்பியலைப் பிரசவித்துவிடக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்

10 . 01 . 1966



விண்ணில்

01 . 01 . 2008

## அமரர் திரு. தியாகராசா மகேஸ்வரன்

**(முன்னாள் இந்துசமய விவகார அமைச்சர், யாழ் மாவட்ட மற்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)**

அன்பு சொரியும் அப்பா ஆனந்தம்
அளிக்கும் அப்பா இன்பம்
தரும் அப்பா எங்கள் இனிய
அப்பா பொன் பொருள் போகம்
எல்லோர்க்கும் வழங்கும் அப்பா எங்களை
அற்றைத் திங்கள் அம்மார்கழி நாளில்
தின்னைபுரம் ஈழத்துச் சிதம்பரம் நடராசரை
தரிசிக்க அழைத்துச் சென்றாரே ஐயனார்
வெள்ளோட்டம் பார்த்து அடுத்தநாள் பஞ்சரதம்
இழுத்து அதிகாலை ஆருத்திரா தரிசனம்
கண்ணாரக் கண்டு தூது தீர்த்தம்
தீபம் தரிசித்து ஐயனார் புராணம்
வெளியீடும் கண்டு அன்னதானம் அன்பாய்
செய்து காரைநகர் மக்கள் ஆனந்தக்
கூத்தனை தரிசிக்க வந்த அயலூர் மக்கள்
அனைவருடனும் அன்புடன் கலந்து ஆனந்தமாய்
வீடு திரும்பினோமே! இற்றைத் திங்கள்
இம்மார்கழி நாளில் எங்கள் அருமை அப்பாவை
எங்கள் ஆசை அப்பாவை காணாது திகைக்கின்றோம்
திக்குத்தெரியாது திசைமாறி நிற்கின்றோம்
பாதை தெரியாது பரிதவித்து நிற்கின்றோம்
தலைவன் இல்லாது தனித்து நிற்கின்றோம்
பன்னிரண்டு மாதம் பரிதவித்து நிற்கின்றோம்
அப்பா உங்களைப்பார்க்க விருப்பமப்பா
அப்பா உங்களை காண விருப்பமப்பா
நேச அப்பா உங்கள் நினைவால்
நெஞ்சம் புண்ணாகி நினைவு இழக்கின்றோம்
இற்றைத்திங்கள் இம்மார்கழி வந்ததப்பா
ஈழத்து சிதம்பரம் செல்வது இல்லையோ
பஞ்சதேர் வடம் இழுப்பது இல்லையோ
பன்னீர்பூக்கள், திரவியங்கள் எங்கேயப்பா
அன்னதானம் அன்புடன் போடுவது இல்லையோ
ஆருத்திரா தரிசனம் தீர்த்தம் தூது தரிசனம் இல்லையோ
அப்பா அப்பா தாரா அழைக்கின்றேன்
அன்பாக விடை தாரும் அப்பா
ஆனந்தக்கூத்தனிடம் தனியாகச்செல்வீரோ
ஆனந்த நடனம் அழகாய் காண்பீரோ
பொன்னம்பல வாணர் தரிசனம் பெற்றீரே
பிறவி ஒழிந்து பேரின்பம் பெறுக அப்பா
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஈழத்துச்சிதம்பர தரிசனம் செல்வதில்லையா?

**பவதாரணி மகேஸ்வரன்**

தங்கமான எங்கள் ஆசை அப்பா
கம்பீரமாய் சிவனைக் கும்பிடச் சென்றீரே
கும்பிட்டு வரும்போது கூற்றுவன் கொடிய
துவக்கால் சுட்டனனே! சின்னக் குழந்தைகளென
சிந்திக்காது பச்சைக்குழந்தைகளிடத்து பரிதாபமில்லாது
பிஞ்சுக் குழந்தைகள் பேதலித்து நிற்க
சின்ன வயதிலேயே அப்பாவைச் சாகடித்தனரே!
கொடிது! கொடிது! அப்பா இந்தக் கொடுமை
அன்று முதலாக அப்பாவைக் காணவில்லை
அன்பான பேச்சை நாங்கள் கேட்கவில்லை
கொஞ்சி மகிழவில்லை கூடிச்செல்லவில்லை
பெற்று வளர்த்த அப்பா பெயரிட்ட அப்பா
வளர்த்த அருமை அப்பா வரிசையிட்ட
நேச அப்பா தொடர்ந்து பேணி வளர்க்காது
பெரியவர் ஆக்காது பெருமை பார்க்காது
ஐந்து வயதிலேயே அகன்ற மர்மம் என்ன?
சின்ன வயதிலேயே சென்ற மர்மம் என்ன?
பிஞ்சு வயதிலேயே பிரிந்த மர்மம் என்ன?
இச்செயல் கொடிது! கொடிது! அப்பா
அதனிலும் கொடிது! அப்பா இன்று
பச்சைப் பாலகனாய் பக்குவமாய் உமைநினைத்து
பன்னிரண்டு மாதங்கள் முட்டுக்கால் குந்தி
அறுகெடுத்துப் பூசை செய்யும் அர்ச்சுனனாய்
வில்வம் எடுத்துப் பூசை செய்யும் விசயனாய்
பூ எடுத்து பூசை செய்யும் புண்ணியனாய்
அறுசுவை உண்டி அன்பாய் படைத்து
பத்துவித பட்சணங்கள் பாங்காய் படைத்து
எள்ளும் தண்ணீரும் கடலில் இறைத்து
என்னப்பா பூசனையால் உங்களை ஈசனாக்கி
இதயம் நெக்குருக இப்பணிகள் தொடர்வதென்ன?
நீங்கள் அள்ளி அணைத்து அன்புசொரியும்
பிரணவன் பாடுகிறேன் பேசாது இருப்பதென்ன?
கேளாது இருப்பது என்ன? வாராது இருப்பது என்ன?
கொடிது! கொடிது! அப்பா நேச அப்பா
பித்தன் சிவனுடன் பேதமறக் கலந்தீரோ
அன்பன் சிவன் பேரருளில் அழகாய் கலந்தீரே.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பா பூசனையால் ஈசனாக்கி போற்றுகின்றேன்

**பிரணவன் மகேஸ்வரன்**

பிராமணத்தி பிராமணத்தி என்று பேரன்பு
சொரியும் எங்களைப் பெற்ற அப்பா
பக்குவமாய் பல இடங்கள் கூட்டிச்செல்லும் அப்பா
பாலூட்டி சோறூட்டி பண்டங்கள் தந்து
மார்பிலும் தோளிலும் சீராட்டி மகிழ்வூட்டும் அப்பா
கொஞ்சிக்குலாவிக் கூடிமகிழும் அப்பா
அப்பாவைக் காணாமல் பவித்திரா அழுகின்றேன்
பெற்றவரை காணாது புலம்புகின்றேன் அப்பா
பச்சைக்குழந்தைகளை பசுமையாய் வளர்க்காது
சின்னக் குழந்தைகளைச் செல்லமாய் வளர்க்காது
பட்டம் பெறும்போது பக்கம் இருக்காது
ஈழத்துச் சிதம்பரத்திற்கு எங்களைக் கூட்டிச்செல்லாது
கண்ணீர் துடைக்காது கவலை ஆற்றாது
சொற்ப வயதிலே சென்ற இடம் எங்கே?
சிவனாரைச் சேவித்துச் செல்வங்களை மறந்தீரோ?
ஆனந்தக்கூத்தனோடு அன்பாய் கலந்திடுவீர்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பாவைக்காணாமல் அழுகின்றேன்.

**பவித்திரா மகேஸ்வரன்**



***அமரர் தி. மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு காரைநகர் ஈழத்து சிதம்பர அறப்பணி நிலைய மண்டபத்தில் பஜனை, நினைவுப்பேருரை நூல் வெளியீடு என்பன இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.***

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன்,**
**குழந்தைகள், குடும்பத்தினர்.**

**276, பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைவிமர்சனம்

# எல்லாம் அவன் செயல்



ஷாஜி கைலாஷின் இயக்கத்தில் ஆர்.கே.என்ற வில்லன், நடிகர், கதாநாயகனாக நடித்து வெளிவந்திருக்கும் திரைப்படம்தான் 'எல்லாம் அவன் செயல்'.
ஆர்.கே ஒரு சட்டத்தரணி. அதுவும் பயங்கரக் குற்றங்கள் புரிந்த வில்லன்களுக்காக வாதிடுபவர். சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி சட்டத்தின் பிடியிலிருந்து வில்லன்களை காப்பாற்றி விடுவார். ஆனால் அதன்பின் அவர்களை எவ்வித தடயமும் இன்றி கொலை செய்து விடுவார் ஆர்.கே.. இந்த நேரத்தில் ஓர் ஏழை மாணவியை, ஒன்பது பணக்கார மாணவிகள் 'ராகிங்' கொடூரம் புரிந்து கொலை செய்து விட்டதாக ஒரு வழக்கு. அவ்வழக்கில் குற்றவாளிகளான ஒன்பது மாணவிகள் சார்பாக ஆர்.கே. ஆஜராகின்றார். வழமைபோல அந்த மாணவிகளைத் தனது வாதிடும் திறமையால் விடுவிக்கின்றார். ஆனால் வழமைபோல் அவர்களைக் கொல்கிறாரா? இல்லையா? என்பதைத் திகிலுடன் சொல்கிறது எல்லாம் அவன் செயல் திரைப்படம்.
இப்படத்தில் கதாநாயகனாக அவதாரம் எடுத்திருக்கும் ஆர்.கே., சட்டத்தரணி கதாபாத்திரத்திற்கு கனகச்சிதமாகப் பொருந்துகிறார். என்றாலும் எப்போதும் ஒரேவிதமான தொனியில் அவர் வசனம் பேசுவது எரிச்சலூட்டுகின்றது. மணிவண்ணன், சுகன்யா, ரோஜா, விசு என்போர் எல்லாம் குறைந்த நேரமே வந்தாலும், நிறைவாக நடித்துள்ளார்கள்.
திகில் கலந்த திரைக்கதையை வெகுநேர்த்தியாகச் செதுக்கியிருக்கிறார் இயக்குநர் ஷாஜி கைலாஷ். இத்திரைப்படம் ஏற்கனவே மலையாளத்தில், நடிகர் மம்முட்டி நடித்து வெற்றி பெற்றிருந்த படமென்பதால், தமிழ் பதிப்பிலும் மலையாளப் படத்தின் சாயல் தெரியவே செய்கின்றது.

# மகிழ்ச்சியில் தேவிஸ்ரீ பிரசாத்



'வில்லு' படத்தின் பாடல்கள் வெளிவந்து தமிழகமெங்கும் பட்டையைக் கிளப்புவதால் இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத் உற்சாகத்தில் இருக்கிறார். ஏனெனில் வில்லு படத்தின் இசையமைப்பாளர் இவர்தான்.

'வில்லு' படத்தில் கோவை சரளாவும் வடிவேலும் இணைந்து பாடுகின்ற ஒரு பாடலுக்கும் இவர் இசையமைந்துள்ளார். அத்தோடு தன்னுடைய இசையமைப்பின் மூலம் இது நாள் வரையும் நடிகராகவும் நடன இயக்குநராகவும், இயக்குநராகவும் இருந்த பிரபுதேவாவை பாடலாசிரியராகவும் மாற்றிவிட்டார் தேவிஸ்ரீ பிரசாத்.

வில்லு படத்தில் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வது போல் வருகின்ற பாடலையே எளிமையான சொற்களால் எழுதியுள்ளார் பிரபுதேவா. இந்தப் பாடல் மக்கள் மனதை நிச்சயம் கொள்ளை கொள்ளும் என்கிறார் தேவிஸ்ரீ பிரசாத்.


# அடிபட்ட ராஜ்கிரண்





நடிகரும் இயக்குநருமான 'ராஜ்கிரண்' படப்பிடிப்பொன்றின்போது காலில் காயமடைந்துள்ளார்.
சென்ற வருடம் நடிகை பத்மப் பிரியாவின் கன்னத்தில் அறை கொடுத்து பரபரப்பை உண்டாக்கிய இயக்குநர் சாமி தற்பொழுது இயக்கி வரும் படம் 'சரித்திரம்'. இதில் 'மிருகம்' பட புகழ் ஆதி கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் மிக முக்கியமான வேடத்தில் ராஜ்கிரண் நடித்து வருகிறார். என் திரைப்பட வரலாற்றில் 'சரித்திரம்' படத்தில் வருவது போன்ற பாத்திரத்தில் நடிக்க நீண்ட நாளாகவே ஆசைப் பட்டேன். இப்போது இயக்குநர் சாமி மூலமாக என் கனவு நனவாகியுள்ளது என 'சரித்திரம்' படத்தில் வருகின்ற தன்னுடைய பாத்திரம் பற்றிக் குறிப்பிட்டு இருந்தார் ராஜ்கிரண். இப்போது கண்பட்டது போல காலில் காயமடைந்து போயுள்ளார் ராஜ்கிரண்.

# கருணாசும் கதாநாயகன்



இப்போது நகைச்சுவை நடிகர்களெல்லோரும் கதாநாயகனாக மாறி வருகின்றனர். வடிவேலு, விவேக், சந்தானம், கஞ்ச-கருப்பு போன்றோரின் வரிசையில் கருணாசும் இணைந்துள்ளார். 'சன்பிக்சர்ஸ்' நிறுவனத்தின் தயாரிப்பில், 'திண்டுக்கல் சாரதி' என்ற படத்தில் கதாநாயகனாக கருணாஸ் கலக்கியிருக்கிறார். 'வடக்கு நோக்கி யந்திரம்' என்ற மலையாளப் படத்தின் தமிழ்ப்பதிப்பே 'திண்டுக்கல் சாரதி' இந்தப்படம் கற்பனைக்கும் யதார்த்தத்துக்கும் உள்ள நடைமுறைச் சிக்கலை ரசிகர்களைச் சிரிக்க வைத்தபடியே சொல்கிறது. இந்தப்படம் வெற்றி அடைந்தால் வருடத்துக்கு ஒரு படத்தில் கதாநாயகனாக நடிப்பது என்று கருணாஸ் முடிவெடுத்திருக்கிறாராம். 'திண்டுக்கல் சாரதி' கடந்த வெள்ளிக்கிழமை வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

# சங்கீதாவுக்குத் திருமணம்



நடிகை சங்கீதாவை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். பிதாமகன், உயிர், தனம் போன்ற படங்களில் தன்னுடைய நடிப்பால் ரசிகர்கள் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்தவர்தான் இந்த சங்கீதா. ஆரம்பத்தில் 'ரசிகா' என்றிருந்த தனது பெயரை பிதாமகன் படத்திலிருந்து இவர் சங்கீதா என மாற்றிக் கொண்டார். இளம் பின்னணிப் பாடகர் க்ரிசுக்கும், சங்கீதாவுக்கும் காதல் உண்டாகி, இப்போது அது திருமணம்வரை வந்துவிட்டது. அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் சங்கீதாவுக்கும், க்ரிசுக்கும் திருமணம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கிறிஸ்துவின் பாடுகள்' திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்வி, கலைத்துவம் சார் படக்காட்சித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் மெல் கிப்சனின் ''கிறிஸ்துவின் பாடுகள்'' திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திரைப்படக் காட்சியின் முடிவில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறும் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(204)

## புதிய வருடத்திற்கான அனுமதிகள்

6th Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்

**பாலர் பாடசாலை**

Play Group - 2-3 years | Montessori - 3 -4 years | Pre-School - 4-5 years

கற்பித்தல் முறை :

- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- தாய்மொழி கட்டாய பாடம்.

Contact : 0773627055

விசேட நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா
ஒளி விழா, பட்டமளிப்பு விழா
மாணவர் சித்திரம்/ கைவேலை
கண்காட்சி, Sports Meet

## அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில பாடநெறிகள்

பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமையவும்,
சர்வதேச தரத்திற்கும் ஏற்ப ,

சிறார்களுக்கு...

- PRE FOUNDATION
- FOUNDATION
- LEVEL 1,2,3,4

படிப்படியாக ஆங்கில அறிவை விருத்தி செய்யும் 6 மாத கால பாடநெறிகள்

G.C.E. (O/L), G.C.E. (A/L) கற்றோருக்கு ....

- IELTS — வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- DIPLOMA IN ENGLISH — வெளிநாடு / உள்நாடு தொழில் வாய்ப்புகளுக்கு
- CERTIFICATE IN ENGLISH — சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கு

## BRITISH BUSINESS SCHOOL

| | |
|---|---|
| நல்லூர் (1) | No : 140, Temple Road, Nallur, Jaffna. Tel : 021 222 5796 |
| நல்லூர் (2) | No : 34, Saddanathar Road, Nallur, Jaffna. Tel : 021 222 4060 |
| சுன்னாகம் | Lakshmi Cottage ( Near the New Court), K.K.S Road, Mallakam. |
| மானிப்பாய் | 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay. |
| புலோலி | Sri Pathmanathanillam, Manthikai. |

## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

RDS Building, K.K.S Road, Mallakam.
Website : www.iitjaffna.com
TP : 021 4591920 Email : iit@iitjaffna.com

கணனிக்கற்கைநெறிகளுக்காக IIT வழங்கும்

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008

IIT இனால் முற்றிலும் இலவசமாக நடாத்தப்படும் ( பொது அறிவு, நுண்ணறிவு) போட்டிப்பரீட்சையில் தோற்றுவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் 90%, 75%, 50%, 40% வரையான கட்டணச்சலுகையுடன் பின்வருவனவற்றில் ஏதாவதொரு கற்கைநெறியை பயில்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்கின்றீர்கள்.

- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Software Engineering
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Networking
- Diploma in Web Designing
- Diploma in Video Editing
- Diploma in Internet & Email
- Diploma in Maya
- Diploma in AutoCAD
- Diploma in Accounting Package

காலம் 28.12.2008

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு...

மண்ணில் 19.10.1935

விண்ணில் 13.01.2007



### அமரர் செல்லையா பத்மநாதன்

திதி: 21.12.2008

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே!-உங்கள் கள்ளமில்லா வெள்ளை உள்ளம் மறக்கமுடியுமா? உங்கள் இனிய குரல் என்றும் எம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

என்றும் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

வங்கியடி, இணுவில்.

(80893)



"மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், ஒரு வர்த்தகவியல் பட்டதாரி. செலிங்கோ லை.'.பில் சேர்ந்துகொண்ட பின்பே துரிதமாக வாழ்க்கையில் முன்னேறினேன். 2002ஆம் ஆண்டில் விற்பனை ஆலேசகராக இணைந்த நான், குறுகிய காலத்திற்குள் முன்னேறி இப்பொழுது மட்டக்களப்புக் கிளையில் பதில் உதவி விற்பனை முகாமையாளர் பதவியை வகிக்கின்றேன். என்னைப் போல வாழ்க்கையில் முன்னேற உங்களுக்கும் விருப்பமா?"

ரி.எம்.எஸ். சுசிலன்
பதில் உதவி விற்பனை முகாமையாளர் மட்டக்களப்பு கிளை

# வாழ்வில் வெற்றியீட்ட எங்களுடன் இணையுங்கள்

"நான் 19 வருடங்களுக்கு முன் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் விற்பனை ஆலோசகராகவே இணைந்தேன். இதிலிருந்து படிப்படியாக முன்னேறி, இன்று வியாபார அபிவிருத்தி முகாமையாளராக உயர்ந்துள்ளேன். வாழ்க்கையில் முன்னேற விரும்புவோருக்கு செலிங்கோ காப்புறுதி நிறுவனம் ஒரு சிறந்த களமாகும். நீங்களும் இதில் இணைந்து முன்னேறுங்கள்."

T. விஜயநாத்
வியாபார அபிவிருத்தி முகாமையாளர்



## விற்பனை மேற்பார்வையாளர்கள் / விற்பனை ஆலோசகர்கள்

விற்பனை பணிகளில் அனுபவம் வாய்ந்த, உற்சாகமான விற்பனை மேற்பார்வையாளர்களும் விற்பனை ஆலோசகர்களும் எமக்குத் தேவைப்படுகின்றனர். நீங்கள் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் சிறந்த தலைமைத்துவ ஆற்றல், தொடர்பாடல் திறமை, தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி என்பவற்றைக் கொண்டவராகவும் இருந்தால், எம்முடன் இணைந்து வாழ்க்கையில் வெற்றியீட்டுங்கள். உங்கள் திறமைக்கேற்ப விசேட பயிற்சி, தலைமைத்துவ ஊக்குவிப்பு மற்றும் வெளிநாட்டுப் பயண வாய்ப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் அதிகூடிய மாதாந்த வருமானத்தைச் சம்பாதிப்பதோடு வேறு பல அனுகூலங்களையும் பெறுவீர்கள்.

உங்கள் விண்ணப்பப் படிவத்தை இன்றே செலிங்கோ லை.'.ப் கிளையொன்றில் பெறுங்கள்.

*விண்ணப்பத்தைத் தபாலில் அனுப்பும்போது, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விற்பனை அணி" என்று குறிப்பிடவும். ஈ-மெயில் மூலம் அனுப்புவதாயின், Subjectஇல் Sales Force என்று குறிப்பிடவும்.*

ZENITH MARCOM

## செலிங்கோ லை.'.ப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி

சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ

134, காலி வீதி, கொழும்பு 3. கம்பனிப் பதிவு இலக்கம் - PQ 24 தொலைபேசி (011) 2 461 461 இணையத்தளம்: www.ceylincolife.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வளம் பெருக்கி மண் செழித்திட மரவளம் பேணும் மனம் தேவை

இப்போது தீமையிலும் நன்மை தந்த உள்ளூர் சம்பவம் ஒன்றைப் பார்ப்போம்.

இங்கே, தின்னவேலியிலே, சிவன்சக்தி கோவிலுக்கு பின்புறமாக மணல்தறை தொடுக்கும் வீதியில் அழகாக நின்றது ஓங்கி வளர்ந்த ஆலமரம். ஆலமரத்துக்கு பக்கத்தில் ஒரு மடம். மடத்தில் அமருபவருக்கு மரத்தின் சுகமும் கிடைக்கும். திடீரென ஒன்றிரண்டு இளைஞர்கள் சேர்ந்து மொட்டையடிக்கத் தொடங்கினர் ஆலமரத்தை. அதை நட்ட கணேசநாதனுக்குக் கேட்டதும் கவலை தொட்டது. இளைஞர்களில் வேகம் தெரிந்தது. வீறாப்பும் இருந்தது. மரத்தை வெட்டுவதற்கு என்ன காரணம்? வேறுவேறு வியாக்கியானங்கள் வசதிக்காக வந்தன. சிவன்கோயில் தேர் அசைந்துவர மரம் தடையாம். இன்னொரு விதமாக சிவன்கோயில் மூலையில் உள்ளுக்குள் அமர்ந்திருக்கும் கணேசப்பெருமானை ஆலமரத்தின் வேர்கள் சீண்டிப் பார்த்து விட்டனவாம். கணேசனும் சிவனும் கோபிக்கவேயில்லை. மகன்-தந்தை உறவு அப்படி. ஆனால் எதையாவது வெட்டவேண்டும் என்ற இளசுகளுக்கு கையில் கிடைத்தது அந்த வாயில்லா மரம்தானே. அதன்மீது ஏறி ஆற அமர்ந்து இதமாக, பதமாக கிளைகளை ஒவ்வொன்றாக வெட்டினர்.

**செயற்கையின் துணிவில் இயற்கையை அழிக்கலாமோ?**

மரத்துக்குப் பக்கத்தில் மடத்தைக் கட்டி விட்டால் மரம் இனி தேவையில்லையா? அல்லது மடம் இருக்கும் தைரியத்தில் மரத்தை அழிக்க நினைத்தனரா?

**கடந்த மாத இறுதியில் சற்றும் எதிர்பார்த்திராத வேளையில் யாழ்.குடாநாட்டை ஒரு கலக்குக் கலக்கி ஒய்ந்துள்ளன மழையும் 'நிஷா' சூறாவளியும்.**

**அவற்றின் நேரடியான - உடனடியான பாதிப்புக்களைவிட, வெளிப்படையாகப் புலப்படாத பல்வேறு பாதிப்புக்களின் தாக்கத்துக்கு இன்று குடாநாட்டு மக்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.**

**இந்த நிலையில், இனத்துக்கேயான நற்பண்பையும், மனிதத்தையும் கைவிட்டு, இயற்கையின் அழிவைச் சீர்செய்யப்போய் அழிந்த வைபோக, -குடாநாட்டின் எஞ்சிய மரவளத்தையும் கட்டுப்பாடின்றி சேதப்படுத்திவரும் சாத்தியங்கள் தெரிகின்றன. இவற்றைச் சுட்டிக்காட்டுவதுடன் 'நிஷா'வின் தாக்கத்தால் எமக்கேற்பட்ட இழப்பினை மீண்டும் நேர்சீர் செய்ய மேற்கொள்ள வேண்டிய அவசிய-துரித செயற்பாடுகள் குறித்தும் இக்கட்டுரைத் தொடர் விளக்கி விவரிக்கிறது.**

மரம் இருக்கும் வரைதானே மடத்திற்குப் பெருமை. மரத்தை அழித்து விட்டால் வெயில் காலத்தில் அந்த மடம் கூட பயன்படாதே. இதை மடம் கூட சொல்லிப் பார்த்ததுதான் இங்கே அதிசயம். வயசு வந்தவர்களின் சொல்லு செல்லாததாகி விட்டது. மரமும் அரைவாசி வெட்டப்பட்டு விட்டது. கலங்கிய மக்களுள் நானும் ஒருவன். எவருக்கும் தற்துணிவு இல்லை. வீரமக்களுடன், அந்த ஆவேசம் கொண்ட இளசுகளுடன் பேசமுன்வர யாருமில்லை. பெயர், ஊர் தெரியாத ஒருவருக்கு திடீரென யோசனை ஒன்று பிறந்தது. மரம் வெட்டுவது பற்றி ஊருக்கும் சூழலுக்கும் பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு கழுத்திலே கைபட்ட நிலையில் தப்பியது ஆலமரம். இன்னும் அதன் விழுதுகள் மண்ணைத் தொடவில்லை. தொடவிட்டதுமில்லை. இளசுகள் செய்தது சரியா தவறா என்பதை விட கொப்புக்கள் வெட்டப்பட்டு "தலைப் பாரம்" குறைக்கப்பட்டதால் "நிஷா" வின் ஆட்டத்திற்கு சிறிதேனும் அங்கலாய்க்காத சந்நியாசியார்போல ஆடாது அசையாது அப்படியே இப்போதும் நிற்கிறது அந்த ஆலமரம். ஆக இளசுகளின் செயலால் தப்பியது ஆலமரம். இந்தப் புகழாரத்தை வெட்டியவர் எடுத்துக் கொள்வதில் தப்பேதுமில்லை. ஆனால் இதை ஓர் ஊக்கியாகக் கொண்டு கண்டதையும் வெட்டக்கூடாது. இவர்கள் எம்மூர் நல்ல இளைஞர்கள். ஊருக்கு நல்லது பல செய்யும் இளைஞர்கள்.

**வெளிநாட்டு உத்தியை நம்நாட்டிலும் செய்யலாம்**

வளர்ந்த நாடுகளில் மரத்தை உயிரினத்தை எதுவென்றாலும் பாதுகாக்கச் சட்டங்களுண்டு. இங்கும் இருக்கின்றது, ஆனால் அமுலாக்கல்தான் இல்லை. தீமை தருவன என்றாலும் அவற்றை அழிய விடுவதில்லை. விலங்குகளுக்குச் சரணாலயம், தாவரங்களுக்குப் பூங்கா என உயிரினத்தின் மீதான கரிசனை அதிகம். இங்கே நம்முடைய கதைவேறு. தெருநாய்க்கு இருக்கும் மரியாதைகூட மனிதனுக்கு இல்லை. மறத்தமிழனுக்கு இல்லையே... தன்னைப் பற்றியாவது கொஞ்சமேனும் சிந்தியாதவனுக்கு மரியாதை எதற்கு? வெளிநாடுகளில் எமது நாட்டுச் சுவாத்தியம் போல புயலும் உண்டு சூறாவளியும் உண்டு. ஆனால் மரங்களென்று பெரிதாக அவற்றை

## வளர்த்த மரத்தை வெட்ட நினைக்கும் போது கிட்ட ஒரு மரம் நட்டு செயலில் காட்டுங்கள்

அழிய விடுவதில்லை. தெருவோரத்தில் கோயில்களில், பாடசாலைகளில் மற்றும் ஏனைய பொது இடங்களில் மிஞ்சி இருக்கும் மரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநகர சபையோ, பிரதேச சபையோ இதனைச் செய்யலாம். இவ்வாறான மரங்கள் மழைகாலத்திற்கு முன்பு சிறப்பாகக் கத்தரிக்கப்பட்டு விட்டால் மழை காலத்தில் வரும் புயல், பேய்க்காற்று போன்றவற்றால் பாதிப்புறாது தவிர்க்கலாம். இப்போது மின்சார சபையினர், தொலைத்தொடர்புக்கு பொறுப்பானவர்கள் அறுந்து விழுந்த வயர்களைச் சீர் செய்வதனால் அதன் தொடர்ச்சியாக மரங்களில் சரியும் கொப்புகளை வெட்டிச் சீர்செய்கின்றனர். இதுபோல



சரியும் என்ற நிலையில் இருக்கும் மரங்களில் மேலதிகமாக வளர்ந்த கொப்புக்களைக் கத்தரித்தால் அந்த மரங்களின் பாதுகாப்பை உறுதிசெய்யலாம். மரங்களை இவ்வாறு கத்தரிக்கும்போது, சமநிலையைக் குழப்பாதவாறு அனைத்துப் பக்கங்களிலும் செய்தல் நன்று. வெட்டிய பகுதிக்கு பூஞ்சணநாசினி தடவுவது நல்லது.

**எஞ்சிய மரங்களையேனும் பாதுகாக்க வேண்டும்**

"நிஷா" என்ற அகோர காற்று, புயல் வடிவங்கொண்டு அழித்த மரங்களைப் பட்டியலிட்டே கொண்டு போகலாம். அதற்கு முதல் இருக்கின்ற மரங்களை எப்படியாவது பாதுகாக்க வேண்டும். அன்புள்ளம் கொண்ட எம் இனிய உறவுகளுக்கான அழைப்பு இது. வீட்டிற்கு, கட்டடங்களுக்கு, உயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் என நினைக்கும் மரங்களை ஒரு தரத்திற்கு இரண்டுதரமேனும் பரிசீலித்து அம்மரங்களை அல்லது அவற்றின் கொப்புகளை வெட்டுவதில் தவறேதுமில்லை. ஆனால் அதுவே ஒரு காரணமாக்கி தேவையற்ற மரங்களைத் தறித்து விடாதீர். தறித்தெடுப்பது மிக சுலபம். தழைக்க வைப்பது மிகவும் கடினம். அதுவும் ஒரு மரத்தை வளர்த்தெடுப்பது இவையனைத்திலும் கடினம். "நிஷா"விற்குத் தாக்குப்பிடித்த மரங்களை எதற்காக வெட்டுகின்றீர்கள்? வெட்ட வெட்டத் தழைக்கும் என்பதால் தழைக்காதவாறு வெட்டும் நிலை மாறவேண்டும். மின்சார வாள் கொண்டு ஒரு மரத்தை வெட்டி வீழ்த்த ஒரு நிமிடம் போதும். ஆனால் அப்படி ஒரு மரத்தை உருவாக்க எத்தனை ஆண்டுகள் செல்லும். எத்தனை சிரமங்கள் படவேண்டும்? நாட்டியவருக்குத்தானே வெட்டுவதற்கு உரிமை! அனைத்து விடயங்களிலும் "உரிமம்" கோரி உறுதிக்கட்டுடன் அலையும் சீமான் பொதுசனத்திற்கு இதுமட்டும் புரியாதது ஏனோ?

சந்ததி என்பதால் காணி சீதனமானாலும் அதிலுள்ள மரங்களை அழிக்காது பயன்பாட்டைப் பெறமட்டுமே அவருக்கு உரித்து உண்டு எனச் சட்டக்கோவையில் விதியாக்கி விட்டால் அந்த மரங்களின் விதியை நாம் நிச்சயிக்கலாம் அல்லவா? ஆனால் அந்த விதி மதியூகமாகி நாலுகாசு சம்பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ளல் அவசியம்.

**பனையும் தென்னையும்**

கற்பகதருக்கள் என்று கூறப்படும் பனையும் அதனுடன் தென்னையும் அதியுச்சப் பயன்பாட்டைத் தருகின்ற மரங்கள். ஒருவித்திலை மரங்கள். கிளை கொள்ளாவிட்டாலும் மரமனைத்தும் பயனாகும் மரங்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளத்தில் இவ்விரு மரங்களின் பங்கு மிகவும் அதிகம்.

தென்மராட்சியில் போரின் உக்கிரம் கண்டபகுதிகளிலுள்ள இவ்விரு மரங்களின் தலைகள் கொய்யப்பட்டு விட்டன. எறிகணைகளின் வீச்சும் வீரியமும் இம்மரங்களில்தான் பரீட்சித்துப் பார்க்கப் படுகின்றனவாம்.

இங்கிருந்தவரே யோசிக்காமல் வெட்டும்போது வந்தவர் யோசிக்கவா போகிறார். கண்களில் பட்ட மரங்களெல்லாம் வெட்டப்பட்டு காப்பரண்களாகின்றன. அதிலும் மனிதனுக்குப் பாதுகாப்பு என்பதற்காகவே வெட்டப்படுவதாக இருப்பதுதான் விந்தையாக இருக்கிறது. மரம் எழுந்து நிற்கின்றபோதும் பாதுகாப்பு, விழுந்து வெட்டியடுக்கினாலும் பாதுகாப்பு.

முக்கியத்துவம் "பாதுகாப்பு" என்பதால் மரத்திற்கு இங்கே முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

**வெப்பமடைகிறது பூமிப்பந்து**

பூமி வெப்பமடைதல் (Global warming) என்பதே தற்போது ஒவ்வொருவருக்கும் பொதுவான பெரும் பிரச்சினையாகும். வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலுள்ள மக்களுக்கு இதுபற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பினும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டுள்ள விடயமாகும் இது.

வாகனங்களிலிருந்து, தொழிற்சாலைகளிலிருந்து வெளிவிடப்படும் வாயுக்களும் குறிப்பாக குளிரூட்டிகளில் இருந்து வெளிவரும் வாயுக்களுமாக வளிமண்டலத்திலிருக்கும் ஓசோன் படையை அழிப்பதனால், அப்படையினால் வடித்து தேவையான அளவிலே விடப்படும் புறஊதாக்கதிர்கள் நேரடியாகவே பூமியின் மேற்பரப்பை அடைகின்றன. இதனால் வளி வெப்பநிலை அதிகரிக்கின்றது.

இன்னொரு வகையில் பூமியின் மேற்பரப்பிலிருக்கும் மரங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைக்கப்பட்டு மரங்கள் இருந்த இடங்களெல்லாம் மாடிவீடுகளாகிக் கொண்டிருக்கின் றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மரங்களின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சி கண்டிருப்பது இதற்குப் பொருத்தமான சான்றாகும். போரின் உக்கிரவேகத்தினுள் சிக்கி அவ்வப்போது பல மரங்கள் குறிப்பாகப் பனை, தென்னை போன்றவை தலைசாய்த்திருப்பதை அவதானிக்கலாம். இருபக்கத்தினாலும் சீறிவரும் 'ஷெல்' களுக்கு இடையில் சிக்குண்டு பயன்தரும் பல மரங்கள் உருக்குலைக்கப்பட்டுள்ளன. இவற்றை மீள வளர்த்தெடுத்துக் கொள்வது எப்போது? அது இலகுவான காரியமா என்ன? பழம் புசிக்க ஆவல் கொள்ளும் மனிதரெல்லாம் இனியொரு பழம் பறிக்க இன்றொரு விதை நடவேண்டியது அவசியமன்றோ? இவைதவிர பாதுகாப்புக் காரணங்களுக்காக போர் நடைபெறுமிடங்களில் தடுப்பரண்களுக்காக மரங்கள் வெட்டியெடுக்கப்படுவதும் இன்னொரு காரணமாக இருக்கின்றது. வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்ட போரில் நல்ல சூழலை இழப்பதென்பது தோல்வியேயாகும். இடம்பெயர்ந்து வேலை வாய்ப்பின்றி அங்கலாய்க்கும் மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக அகப்பட்ட மரங்களை வெட்டி பக்குவமாக அடுக்கி ஈருளியில் சுமந்து சென்று விற்பதும் இங்கொரு காரணமாகும். எரிபொருளின் விலையேற்றமும், சமையல் எரிவாயுவின் கிடைதன்மையில் குறைபாடும் அதிகரித்த விலையும் மாற்றுச் சக்திகளைச் சிறப்பாகப் பயன்படுத்தாமையும் மரத்தை விறகாக்குவதற்கான காரணமாயிருக்கின்றது. மரத்தை வைத்துச் சம்பாத்தியம் செய்யும் மனிதருக்கு மாதமொன்றுக்கு முப்பது மரம் நடும் கட்டாயச் சட்டம் போட்டு அதை நடை முறையிலும் காட்ட வேண்டும்.

**கிளிறிசிடியா உயிர் அடுப்பு**

இவ்வேளையிலே தென்னைப் பயிர் செய்கைச் சபையின் முயற்சியினாலே கிளிறிசிடியாவைப் பயன்படுத்தி உயிர் அடுப்பு பரந்துபட்ட அளவிலே யாழ். குடாநாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருவது ஆறுதல் தரும் செய்தியாகும். ஆனாலும் கிளிறிசிடியாவை அனைவரும் வேலிமரமாக வளர்த்து

**மரங்களை வளர்த்து மானுடம் காப்போம் 02**

விறகுக்குப் பயன்படுத்துவது நல்லதொரு மாற்றீடாகும். எது எப்படி இருந்தாலும் நட்டமரத்தை வெட்ட நினைக்கும் போது கிட்ட ஒரு மரம் நடுதல் சிறப்பு. பெயரளவிலல்லாது மனதளவில் அதிலும் செயலளவில் இது நடைபெறவேண்டும்.

(வளரும்)



கலாநிதி கு. மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரணை....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யந்திரத்தை நிறுத்திவிட்டு மெல்லக் குனிந்து பார்த்தபோது அந்த அரணைகள் இரண்டும் ஒன்றின் மேல் ஒன்று நெருங்கிக்கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டு சலனமற்று இருந்தன. மிகவும் அருகாமையில் நெருங்கி உற்றுப் பார்த்ததில் அச்சத்தால் அவைகள் நடுங்குவது புரிந்தது. ஒரு சிறிய குச்சியை எடுத்து அவைகளை விரட்டத் திரும்பி மறுபக்கம் ஓடி மறைந்தன. அன்றிலிருந்து வாரம் ஒரு தடவை புல்வெட்டும் போது மிகவும் கவனமாகச் செயல்பட ஆரம்பித்தேன்.

எத்தனையோ அரணைகள் அங்கிருந்த போதும் அந்த இரண்டு பெரிய அரணைகளும் எனக்குப் பரிச்சயமாகின. அவைகளை அடிக்கடி கூர்ந்து அவதானித்ததில் அந்த இரண்டும் மற்றவைகளில் இருந்து மிகவும் வேறுபட்டவையாகத் தெரிந்தது. ஒன்று பெரியது, மற்றது சிறியது. சிறியதின் வால் நுனி அறுபட்டிருந்தது. சிறியதின் உடலில் பளபளக்கும் சிறிய புள்ளிகள். பெரியதின் உடலில் அதே பளபளப் போடு மங்கலான நீண்ட வரிகள். இவைகளை மிகவும் உன்னிப்பாகப் பார்த்தாலொழிய வித்தியாசம் புரியாது.

பிறகு தினமும் ஒரு முறையாவது பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. நாள்கள் போகப்போக இவையிரண்டும் ஆண், பெண் சோடியாக இருக்கும் என நினைத்தேன். அவைகள் மீது எனக்கிருந்த பயமும், என்மீது அவைகளுக்கிருந்த பயமும் குறைந்து போயிற்று.

பிறகு அந்த இடத்திற்கு வந்து வாயினால் விசில் சப்தம் எழுப்பினால் போதும், சரசரவென இரண்டும் ஓடிவரும். அந்த அளவிற்கு அந்த இரண்டு அரணைகளும் என்னோடு நட்புக்கொள்ள ஆரம்பித்தன. இந்த நிலைக்கு அவைகளைக் கொண்டு வருவதற்கு ஒரு வருடத்திற்கு மேல் பிடித்தது. கிளப் மெயின் கிச்சனில் கழிவாக வீசும் மெக்கரல் மீன் டின்னில் எஞ்சி இருக்கும் துண்டுகளை எடுத்து அவைகள் இருக்கும் இடத்தில் தூவினால் அதைவிடப் பெரிய கொண்டாட்டம் அவைகளுக்கு கிடையாது. அவைகளுக்காகவே மெயின் கிச்சன் பின்புறம் இருக்கும் பெரிய கழிவுப் பொருள்களைப்போடும் ட்ரம்மில் வெற்று மெக்கரல் டின்களைத் தேடுவேன்.

சில நாள்களாக வாலறுந்த அரணை மற்றதைப் போல சுறுசுறுப்பாக ஓடுவது கிடையாது. உற்றுப்பார்த்தபோதுதான் தெரிந்தது அதன் அடிவயிறும், இடுப்பசைத்து நகரும் விதமும் அது பிள்ளைத்தாச்சி என்று. வால் அறுந்த அரணைதான் பெண்அரணை என்று யூகித்திருந்தேன். என் யூகம் இப்போது சரியாயிற்று. அரணைகள் முட்டையிடுமா? அல்லது குட்டி போடுமா? எனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. யாரிடம் கேட்பது? கேட்டால் சிரிப்பார்கள். சரி எப்படியோ இருக்கட்டும். சில நேரங்களில் என் அறையில் என்னோடு இருக்கும் நண்பரிடம் இது பற்றிக் கூறுவேன். அவர் பதில் சொல்லாமல் என்னையே நோக்குவார். காரணம் எனக்கு ஏதாவது மூளைக் கோளாறு ஏற்பட்டு வருகிறதோ என்ற சந்தேகம் அவருக்கு.

வழக்கமாக அதிகாலை நான்கு மணிக்கு படுக்கையை விட்டு எழவேண்டிய நான் அன்றைய தினம் ஆறு மணிவரை தூங்கிவிட்டேன். முதல் நாள் இரவு அறையில் நண்பர் ஒருவர் ஜானி வாக்கர் விஸ்கி போத்தல் ஒன்றைக்கொண்டு வந்திருந்தார். அதன் தயவுதான் இந்தத் தாமத எழுச்சி.

அன்றைய தினம் நிறைய வேலைகள் இருந்தன. அதோடு இன்ஸ்பெக்ஷன் வேறு. எனக்கு மேலதிகாரியாக இருப்பவன் ஒரு ஸ்காட்லாந்துக்காரன். அவனிடம் இரக்கம் என்பது துளியும் கிடையாது. சில பிரிட்டிஷ்காரர்களிடம் இருந்த ஆளப்பிறந்தவர்கள் என்ற மனோபாவம் இவனிடம் நிறைய இருந்தது. போதாக்குறைக்கு சமீபத்திய கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து மிக மோசமாக ஒதுங்கிப் போனது வேறு அவனது எரிச்சலுக்கு ஒரு காரணம்.

படுக்கை விட்டு எழுந்ததும் முதல் வேலையாக மெயின் கேட்பக்கம் விரைந்தேன். அந்தப் பக்கம் தான் முதலில் அந்த ஸ்காட்லாந்துக்காரன் செக்கிங் வருவான். இன்று மெயின் கிச்சின் பக்கம் போய் வெற்றுமெக்கரல் டின் தேடமுடியாது. இப்போதே இரண்டு மணித்தியாலம் தாமதம். ஒரு நாளைக்கு அந்த அரணைகள் மெக்கரல் மீன் கழிவுகள் சாப்பிடாவிட்டால் இறந்து போகாது.

அதிகாலையில் அபுதாபி முனிசிபல் மஞ்சள் நிற வண்டி குப்பைகளை ஏற்றிவரும். மஞ்சள் நிறப் பெரிய வண்டி. அதன் முன் நெற்றியில் மஞ்சள் நிற விளக்கு ஒன்று சுழன்று கொண்டிருக்கும் வண்டியின் பக்கவாட்டில் நீலநிற சீருடை அணிந்த ஊழியர்கள் தொங்கிக்கொண்டு வருவார்கள். மார்ச் மாதம் பிறந்தும் பனிமூட்டம் குறையவில்லை.

தினமும் நான் வேலை செய்து எல்லா இலைக் கழிவுகளையும் சருகுகளையும் கறுத்த பெரிய பொலிதீன் பைகளில் கட்டி வைத்து நீர் வால்புகளை திறந்த பின்னர்தான் சாவகாசமாக அந்த வண்டி வரும். இன்று நான் அவசரமாக மெயின் கேட்டை நோக்கிப்போகும் போதே என்னைத் தாண்டி அந்த பலதியா வண்டி கிளப்பின் பின்புறம் நோக்கிப்போய்க் கொண்டிருந்தது. பின்புறம் இருக்கும் பெரிய கழிவு ட்ரம்களை காலி பண்ணிவிட்டு மீண்டும் திரும்பி வரும். அதற்குள் நான் என் வேலையை முடித்துவிட வேண்டும். முன்புறத்தை கூட்டிப் பெருக்கி பொலிதீன் பைகளை பாதையில் வைக்க வேண்டும்.

வந்தவுடன் விறுவிறுவென எல்லாச் சருகுகளையும் கூட்டி அவசர அவசரமாக பெரிய பொலிதீன் பைகளில் அடைக்க ஆரம்பித்தேன். அப்போதுதான் அந்தத்தவறு நிகழ்ந்ததாக உணர்ந்தேன். நான் வேலை செய்யும் அவசரத்தில் தினமும் என்னைத் தேடி வந்து மெக்கரல் மீன் கேட்கும் அரணைகள் இரண்டையும் கவனிக்கவில்லை.

அந்த இரண்டில் ஒன்று எப்படியோ ஏதோ ஒரு பொலிதீன் பையில் மாட்டிக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் எல்லாப் பைகளையும் கட்டி பாதையோரத்தில் எடுத்து வைக்கும் போதுதான் அந்த ஒற்றை அரணை வந்து சரசரத்தது. வால் அறுந்த கர்ப்பிணி அரணை. அவசரத்தில் வேலை செய்யும்போதே ஏதோ மென்மையான பொருளும் இலைச் சருகுகளுடன் போன உணர்வு ஏற்பட்டதை உணர்ந்தேன். கையில் நீண்ட ரப்பர் கையுறைகள் இருந்தபோதும் அரணையின் மென்மை புரியாமலா போகும். நன்றாகப் பார்த்தேன். ஆண் அரணையைக் காணவில்லை. சருகுகளோடு சேர்ந்து பொலிதீன் பைகளுக்குள் போய்விட்டது. அங்குமிங்கும் ஓடியது வாலறுந்த பெண் அரணை. இதயத்தில் ஒரு நிமிடம் வேதனையின் சுழற்சி. தூரத்தில் ஸ்காட்லாந்துக்காரன் வந்து கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் திருப்பத்தில் மஞ்சள் நிற முனிசிபல் வண்டியின் மஞ்சள் விளக்கொளி.

இப்போது என்ன செய்வது? மீண்டும் எல்லாப் பைகளையும் அவிழ்த்து உதற முடியாதே! ஸ்காட்லாந்துக்காரன் கழுத்தை நெரித்து விடுவான். இந்த அரணைச் சோடியைப் பிரித்த பாவம்?

சரி! ஒன்று செய்யலாம். மிக அவசரமாக செயல்பட்டேன். ஆம் ஏதோ ஓர் இடத்தில் கொண்டு போய் இந்தக் கழிவுகள் கொட்டப்படலாம். ஒரு அரணை ஏற்கெனவே ஒரு பையினுள் இருக்கிறது. மற்றதையும் ஒன்றில் போட்டு அனுப்பி விட்டால்! அங்கே இரண்டும் சந்தித்துக் கொள்ளும். புதிய இடமாக இருக்கலாம். மனிதர்கள் கூட அகதிகளாக ஏதோ நாடுகளில், புதிய சூழ்நிலைகளில் இருக்கவில்லையா! இவைகள் போகும் இடத்திலும் அரணைகள் இருக்கலாம்.

ஒரு பையை மட்டும் பிரித்து வாய்ப்புறத்தை தரையோடு வைத்து ஒரு சிறிய குச்சியினால் அந்த வால் அறுந்த கர்ப்பிணி அரணையைத் தட்ட, அது வெகுண்டு அந்தப் பைக்குள் ஓடியது. உடனே அதை எடுத்து வாய்ப்புறம் கட்டி முடிக்க அந்தப் பெரிய மஞ்சள் நிற வண்டி வந்து நின்றது. இப்போது மனத்தில் ஒரு நிம்மதி. இரண்டு அரணைகளும் இரண்டு பைகளில் இருக்கின்றன. எங்கேயோ கொண்டு போய் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் இரண்டு அரணைகளும் ஆச்சர்யத்துடன் சந்தித்துக் கொள்ளும். புதிய இடத்தில் உங்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்குங்கள். இந்த கார்டனர் உங்களை நினைத்துக் கொண்டே இருப்பான்.

பைகள் வண்டியில் ஏற்றப்பட்டன. ஸ்காட்லாந்துக்காரன் திருப்தியுடன் தலையாட்டிவிட்டுப் போய்விட்டான். நீல நிற உடையணிந்த தொழிலாளர்கள் வண்டியில் ஏறித் தொங்க வண்டி புறப்பட்டது. நான் கையசைத்தேன். ஒருவன் பதிலுக்கு கையை ஆட்டினான். நான் என்ன அவனுக்கா கை காட்டினேன். அந்த வண்டியில் போகும் அரணைகளுக்காக அல்லவா?

தூரத்தில் வண்டி போய்கொண்டிருந்தது. நிம்மதியுடன் திரும்பிக் போக முற்படுகையில் சரசரவென்ற ஒலி. அருகில் காலடியில் கீழே தரையைப் பார்த்தேன். பெரிய ஆண் அரணை தனியாக நின்று அங்குமிங்கும் பார்த்தது. என் மனைவி எங்கே என்று கேட்பது மாதிரி. அப்படியானால்!**************

(நன்றி: சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள்)

## வெள்ளத்தை வெளியேற்ற...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதைக்கண்ட இராமன் மிகத் தண்ணளியாகவும் மிக விளக்கமாகவும் தம்பிக்குச் சொன்னான். "ஆற்றிலே நீர் இல்லாமற் போதல் ஆற்றின் பிழை அன்று. அது போல நாம் காட்டிற்கு வந்தது எமது பிதா தசரதனின் பிழையன்று. தாயாம் கைகேயியின் புத்திக் கோளாறுமன்று. தம்பீ! இது விதியின் பிழை. நீ ஏன் இதற்கு வெகுண்டாய்?"

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று, மகன் பிழையன்று மைந்த!
விதியின் பிழைநீ இதற்கென் கொல் வெகுண்ட தென்றான்.

சினங்கொள்ளாமையின் முக்கியத்துவத்தை உலகுக்குணர்த்திச் சமுதாயத்தை மேம்படுத்த எண்ணங் கொண்ட தெய்வப்புலவர் திருவள்ளுவர், தமது உலகப் பொதுமறையாம் திருக்குறளிலே, 'வெகுளாமை' என்றொரு அதிகாரத்தையே வகுத்து, சினத்தின் தீய விளைவுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றிலிருந்து விடுபடும் வழியையும் கூறியுள்ளார். 'வெகுளாமை என்ற அந்த அதிகாரத்தில் வரும் பத்துக் குறட்பாக்களும் அரிய-பெரிய உண்மைகளை எமக்கு எடுத்தியம்பி நிற்கின்றன.

*********************

## சொற்சிலம்பம் - போட்டி இல: 40

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | 6 |
| | ■ | 7 | | | ■ | 8 | |
| 9 | 10 | | | ■ | 11 | | |
| 12 | | | ■ | 13 | | ■ | |
| ■ | ■ | ■ | 14 | | | 15 | ■ |
| 16 | | 17 | | ■ | 18 | | 19 |
| | ■ | 20 | | 21 | | ■ | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

1. சாதுவான போக்குக் கொண்டவன்.
4. சோறு.
7. தேர்.
8. உயிர்ப்பின் ஆரம்பம்.
9. காலம் பிந்துதல்.
11. சர்ச்சைக்குள்ளாகிய ஒரு நாட்டின் தலைவராய் இருந்தவர்.
12. உறுதி.
13. தமது.
14. பெறவேண்டிய வருமதி.
16. வேறுபாடு.
18. கவனிப்பாரற்ற நிலம்.
20. இதைப்பெறும்நோக்கிலும் ஆள்கள் கடத்தப்படுவதுண்டு.
22. தற்கொலைத் தாக்குதல் போராளி.
23. இல்லம்.

### மேலிருந்து கீழ்

1. ஒரு பாடலின் இறுதிச் சொல் அடுத்த பாடலின் ஆரம்பமாக அமையும் பாடல் வகை.
2. இந்தியா.
3. ரகம்
5. முன்னிலையில்
6. நிஜத்தில் மிகச் சிறியது என விளக்கப் பயன்படுத்தப்படும் சொல். ஒரு வகைச் சீட்டு விளையாட்டில் இதற்கு மதிப்பு அதிகம்.
10. அடங்கு/பங்கு/ அளவு.
11. இணக்கம்.
13. மரம்.
14. தடையாக இருப்பது.
15. மூன்று/விளக்கில் எரிவதும் இது வே.
16. பாட்டு இசைக்குக!
17. பகுதி
19. தானிய அளவுக்குப் பயன்படுத்தும் அலகு.
21. உயிர்க்காணிக்கை.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும்முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 40
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (31.12.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபாலட்டை யிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 40 இல் வெற்றிபெற்றோர் விவரம் 04.01.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 38 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1) சதாம் (3) மிதப்பு (6) காய் (7) சான்று (8) லாபம் (10) தகுதி (12) அந்தி (13) தலைவிரி (14) குது (15) ஆடை (16) தடு (17) அல்லா (19)தவக்காலம் (21) திரிகல் (22) மாதம்

மேலிருந்து கீழ்
(1) சகா (2) தாய்லாந்து (3) மின்(4) தறுதலை (5)புத்திரி (7) சாம் (9)பதி (11) குவிதல்(12) அருந்ததி (13) தடை (15) ஆடுகால் (16) தக்க (17) அம்மா(18) லாடம் (20) வரி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 38 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம்தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு

1 ஆம் பரிசு
திருமதி தி.சிதம்பரநாதன்,
டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

2 ஆம் பரிசு
இரஞ்சன் இரகுராம்,
'அருணோதயம்', நாவலடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

3 ஆம் பரிசு
செ.செல்வகுமார்,
பிள்ளையார் கோவிலடி,
மாதகல்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) க.வி[illegible],
5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(2) ப.மகேந்திரதாசன்,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(3) திருமதி க.யோகலட்சுமி,
[illegible] கோயிலடி, நாக்கியப்புலம்,
ஏழாலை மேற்கு,சுன்னாகம்.


(4) நா.தெட்சணாமூர்த்தி,
இல145/2, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

(5) வேலுப்பிள்ளை குமாரசாமி,
இளைப்பாறிய அதிபர்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயல் எப்போது வரும் என்று அச்சொட்டாக எதிர்வு கூறுவது இயலாத ஒன்றே.....!

புயல்கள் ஏன், எவ்வாறு, எப்போது, எங்கே உருவாகும் என அறிய அனைவருக்கும் ஆவலாக இருக்கும். இதில் ஏன், எவ்வாறு என்பதற்கு பௌதிகவியல் ரீதியாக விளக்கம் கொடுக்கலாம். என்றாலும், எப்போது, எங்கே என்பதை யாரும் முன்கூட்டியே கூறமுடியாது. அது எங்கும் எப்போதும் தோன்றலாம் எனினும் சில காலங்களில் தோன்றக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதை அனுபவம் மூலமாக அறிந்திருக்கிறார்கள். அதாவது




(படம்: 3)

பருவ மழை ஏற்படுவதற்கு முன்னும், பின்னுமே புயல் ஏற்படுவது வழமை எனக் கூறுகிறார்கள். எனினும் காலநிலையை எதிர்வு கூறுவது என்பது முகமொன்றின் படத்தை தாளொன்றில் கீறிவிட்டு இப்படியான ஒருவரைத் தெரியுமா எனக் கேட்பது போலாகும். எமது அனுபவங்களிலிருந்து கண்கள் எங்கே, மூக்கு எங்கே, வாய் எங்கே என்பதை நாம் அறிவோம். அவற்றிலிருந்தே நாம் முகத்தின் தோற்றத் தைக் கூறுகிறோம். இதுபோன்றே சில அவதானிப் புகளிலிருந்தே நாம் சில மாதிரிகளை (Models) உருவாக்குகின்றோம். எனவே அவ்வாறான அவதா னிப்புகளிலிருந்து புயல் எவ்வாறு தோன்றுகிறது என்பதையும் கூறலாம்.

### காற்றுத் திணிவுகளும், பிரிதளமும்...

புயல் எவ்வாறு உருவாகிறது என்பதை அறிவதற்கு முதலில் காற்றுத் திணிவுகள் (air masses), பிரித ளங்கள் (fronts) என்ற சொற்பதங்களின் கருத்தை அறிந்திருப்பது அவசியமாகும்.

காற்றுத் திணிவு என்பது கிடையாக நூற்றுக் கணக்கானது முதல் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் தூரம் வரை பரவியிருக்கும். மாறாத



(படம்: 4)

வெப்பநிலை, ஈரப்பதன் ஆகியவற்றைக் கொண்டுள்ள காற்றுத் தொகுதி யாகும். அவை எவ்வெவ் பகுதிகளிலிருந்து உருவா கின்றன என்பதைப் பொறுத்து அவற்றின் பெயர்கள் பின்வருமாறு மாறுபடும்.

- ஆட்டிக்குப் பிரதேசம் (Arctic) - A
- துருவ மண்டலம் (Polar) - P
- வெப்ப மண்டலம் (Tropical) - T
- மத்திய கோட்டுப் பிரதேசம் (Equatorial) - E

இப்பெயர்கள் அக்காற்றுத் திணிவுகள் உருவாகும் பிரதேசத்தின் மேற்பரப்புத் தன்மையின்படி மாற்றமடையும். இரண்டு வகையான மேற்பரப்புத் தன்மைகள் உள்ளன.

- கடல்சார்ந்தது (Maritime) - M
- கண்டம் சார்ந்தது (Continental) - C

எனவே இவற்றைச் சேர்க்கும்போது ஆறுவகையான காற்றுத் திணிவுகள் உருவாகும்.


- கண்ட வெப்ப வலயம் (Continental Tropical) - cT
- கடல் சார்ந்த வெப்ப வலயம் (Maritime Tropical) - mT
- கடல் சார்ந்த துருவ மண்டலம் (Maritime Polar) - mP
- கண்ட துருவ மண்டலம் (Continental Polar) - cP
- ஆட்டிக்கு பிரதேசம் (Arctic) - A
- மத்திய கோட்டுப் பிரதேசம் (Equatorial) - E

எங்கெங்கு எவ்வகையான காற்றுத் திணிவுகள் உருவாகுகின்றன என்பதை அவற்றின் பெயர்களி லிருந்தே ஊகித்துக் கொள்ளலாம். இங்கு கடல் சார்ந்தது என்பதன் பொருள் ஈரப்பதன் மிக்க காற்றும். கண்டம் சார்ந்தது என்பதன் பொருள் ஈரப்பதன் குறைந்த காற்றும் வெப்ப வலயம் என்பது சூடான காற்றும், துருவ மண்டலம் என்பது குளிர்ந்த (COLD) காற்றும், ஆட்டிக்கு பிரதேசம் என்பது குளிர்ச்சியான (COLD) காற்றும் என்பதாகும். எனவே காற்றுத் திணிவு என்பது அவ்வப் பிரதேசங்களுக்கு மேலுள்ள காற்றுத்

## புயல்கள் எவ்வாறு உருவாகின்றன 02

தொகுதியைக் குறிப்பதாகும்.

எனவே இக்காற்றுத் திணிவுகளில் சில வெப்ப மாகவும், ஈரப்பதன் மிக்கதாகவும் இருக்கும். வேறுசில குளிராகவும் உலர்ந்ததாகவும் இருக்கும். இந்த இரு வகையான காற்றுத் திணிவுகளும் அசைந்தபடி இருக் கும். இவ்வகையான காற்றுத் திணிவுகளுக்குத் தெளி வான பிரிதளமும் இருக்கும். எனவே வெவ்வேறான இந்த இரு காற்றுத் திணிவுகளும் நேரத்துடன் மாறிக் கொண்டிருந்தாலும் ஒன்றுடன் ஒன்று கலக்காது.




(படம்: 5)

எனவே இந்த இருவகையான காற்றுத் திணிவுகளும் அருகருகே தொட்டுக் கொண்டிருக்கும் போதும் அவை தம்மிடையேயான எல்லைகளைப் பல நாள்களுக்கு வேறாக வைத்திருக்கும் இந்த இருவகையான காற்றுத் திணிவுகளுக்கிடையேயான பெயர்ச்சி எல்லையையே பிரிதளங்கள் (frortns) என அழைக்கிறோம். இப்பிரிதளங் கள் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர்கள் நீளத்திற்குப் பரந்து இருப்பதுடன், காற்றுத் திணிவுகள் தங்கள் எல்லைகளை வேறாகப் பிரித்து வைத்திருக்கும் காலம் வரை இருக்கும். இப்பிரிதளங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன சூடான பிரிதளம், குளிரான பிரிதளம், நிலையான பிரிதளம், உட்கொள்ளப்பட்ட பிரிதளம் என்பவையாகும்.

ஆரம்ப காலங்களில் நோர்வேயைச் சேர்ந்த வானிலை அவதானிகளே காற்றுத் திணிவு, பிரிதளங்கள் என்பவற்றை அறிமுகப்படுத்தினர். அவர்கள் பாரிய காற்றுத் திணிவுகள் முன், பின் நோக்கி நகர்வதை அவதானித்தனர். அவ்வாறு அசையும் போது மோதும் காற்றுத் திணிவுகளே அழிவுகளைத் தரும் காலநிலைகளை உருவாக்குகின்றன.

வழமையாக பிரிதளமானது சூடான காற்றுத் திணி



(படம்: 6)

வின் வடக்கு நோக்கிய எல்லையில் குறிக்கப்படும். அப்போது நிலைமாறு எல்லையானது பிரிதளத்தின் வெப்பப்பக்கமாக உருவாகும். உதாரணமாக படம்: 5 இனை அவதானியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குளிரான காற்றுத் திணிவின் அடிப்படையில் பிரிதளமானது பெயரிடப்படுகிறது. ஆகவே காற்றுத் திணிவுகள் mT இற்கும் mP இற்கும் இடைப்பட்ட எல்லையானது துருவ பிரிதளமெனவும்; காற்றுத் திணிவுகள் mP இற்கும் A இற்கும் இடைப்பட்ட எல்லை ஆட்டிக்கு பிரிதளமெனவும் அழைக்கப்படும்.

பிரிதளங்களானது அவை அசையும் திசைக்குத் தக்கவாறு பெயரிடப்படுகிறது. சூடான பிரிதளம் எனப்படுவது சூடான காற்று, குளிரான காற்றை மாற்றீடு செய்கிறது என்பதைக் குறிப்பதாகும்.

(படம்: 4) சூடான பிரிதளத்திற்கான குறியீட்டைக் கவனியுங்கள்.

இதேபோன்று குளிரான பிரிதளம் எனப்படுவது குளிர்ந்த காற்று சூடான காற்றை மாற்றீடு செய்கிறது என்பதைக் குறிப்பதாகும். (படம்: 5) குளிரான பிரிதளத்திற்கான குறியீட்டையும் கவனியுங்கள்.

இரு காற்றுத் திணிவுகளுக்கும் இடைப்பட்ட மேற்பரப்பு எத்திசையிலும் அசையாது இருப்பின்,




(படம்: 7)

அவற்றுக்கு இடைப்பட்ட பிரிதளத்தை நிலையான பிரிதளம் என அழைப்பர். (படம்: 6) நிலையான பிரிதளத்திற்கான குறியீட்டையும் கவனியுங்கள்.


பிரிதள எல்லைகள் நிலைக்குத்துத் திசையில் தொடர்ச்சியாக இருந்தாலும் அவை மேல்காற்றுக் கோட்டுப் படங்களில் (Airchirt) குறிக்கப்படு வதில்லை. குளிரான காற்று சூடான காற்றைவிட அடர்த்தி கூடியதால் அது சூடான காற்றின் கீழ் அமிழ்ந்திருக்கும். எனவே அவற்றின் பிரிதள எல் லைகள் சாய்வாக இருக்கும். பொதுவாக இச்சாய்வுகள் மிக மெதுவான சாய்வாக இருக்கும். அவற்றின் சாய்வு வீதம் 1:50 முதல் 1:300 வரை மாறுபடும். உயர்ந்த சாய்வு உதாரணமாக 1:100 ஆனது குளிரான

(படம் : 8)




பிரிதளங்களிலும்; மெதுவான சாய்வு, உதாரணமாக 1:200 ஆனது சூடான பிரிதளங்களிலும் அவதானிக் கப்படுகிறது. இவ்வித்தியாசங்கள் பகுதியாக முன் னேறும் குளிர்காற்றின் (குளிரான பிரிதளம்) வேகத்தைக் குறைக்கும் உராய்வின் விளைவால் ஏற்படுகிறது; அல்லது பின்வாங்கும் குளிர்காற்றால் (சூடான பிரிதளம்) ஏற்படுகிறது. பிரிதளத்திற்குரிய


(படம் : 9)




புயல் ஒன்றின் ஊடான வெப்ப வடிவத்தின் குறுக்கு வெட்டுப் பரப்பு பின்வரும் (படம் : 7) இல் காட்டப்பட்டுள்ளது. இப்படத்தில் பிரிதள சாய்வுகள் பெரிதாக்கிக் காட்டப்பட்டுள்ளன.

படங்கள் 8, 9 என்பன சூடான, குளிரான பிரிதளங்களில் ஏற்படும் முகிற் கூட்டங்கள், மழை வீழ்ச்சிகளின் இயல்பைக் காட்டுகிறது. சூடான பிரிதளங்களில் படையான முகில்களுடன் மாறாத ஒளியும் நடுத்தரமான மழையும் இருக்கும். குளிரான பிரிதளங்களில் மேற்காவுகை முகில்களுடன், பலமாகக் கொட் டும் மழையும் இருக்கும்.

இதுவரை நாம் புயலின் உருவாக் கத்தை விளங்கிக் கொள்வதற்குத் தேவையான சொற்பதங்களையும் அவற்றின் கருத்துக்களையும் பார்த்தோம். புயல்கள் உருவாகும் பொறிமுறையைப் பின்னர் பார்ப்போம். *(தொடரும்)*



கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதிகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




COM BANK e Exchange மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தை பெறுவித்து

**ரூ.12 இலட்சம் பணப் பரிசில்களை வெல்லுங்கள்!**

டிசெம்பர் மாதம் முதல் எதிர்வரும் ஏப்பிரல் 2009 வரை
மாதாந்தம் 3 வெற்றியாளர்களுக்கு தலா ரூ.100,000/-

இன்றே COM BANK e Exchange மூலமாக பணத்தை அனுப்பும்படி வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிவியுங்கள். COM BANK e Exchange அதிவிரைவானது, நம்பிக்கையானது, இலங்கையின் எப்பகுதியிலும் பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 5 667 679, 011 2 353 353

COMBANK e Exchange MONEY TRANSFER

கொமர்ஷல் வங்கி

## வீதி சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

தென்மராட்சி தெற்கு கோயிலாக் கண்டி மத்தி ஸ்ரீ முருகன் வீதி மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது குன்றும் குழியுமாக உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த வீதி செப்பனிட வசதியாக 'நிக்கொட்' அமைப்பினால் 13 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும் இதுவரை இந்த வீதி செப்பனிடப்படவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (203-131)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் அடுத்த ஆண்டுக்கான செயற்திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது. (204)

## கைதடி குமரநகர் வீதி சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.21

கைதடி குமரநகர் வீதி அண்மையில் பொதுமக்களின் உதவியுடன் சிரமதான மூலம் செப்பனிடப்பட்டது.

சாவகச்சேரி பிரதேசசபையின் அனுசரணையுடன் இந்த வீதி செப்பனிடப் பட்டது.

சாவகச்சேரி பிரதேசசபை உத்தியோகத்தர்கள் கைதடி பிரதேசசபை உபபணிமனைப் பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் தலைமையில் இந்த சிரமதானப்பணி இடம்பெற்றதாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (203-131)

**ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME**

★ A three-month English course for School leavers/Job seekers
★ TheCourse content comprises the four skills in the English Language-Listening, Speaking, Reading & Writing
★ Evaluation & Award of certificate at the end of the programme

*Commencement:* 7th January 2009.
Lessons on Weekdays from 2.30-3.30pm.
Closing Date: 5th January 2009

*English Language Teaching Unit*
*St John's College, Jaffna.*

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**கலாநிதி புண்ணிய மூர்த்தி ரவிராஜன்**

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜன் அவர்கள் காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் கடந்த சனிக்கிழமை(மார்கழி 13,2008) நிகழ்ந்த 2008 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான தொழில் நுட்ப தேசிய விருதுகள் வழங்கும் வைபவத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களால் "இள விஞ்ஞானி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இதேபோல் இவர் இன்னும் பல பட்டங்கள் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ யாழ்.நல்லூர்க் கந்தன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
யாழ்ப்பாணம். நண்பர்கள்.

## செல்வா சனசமூக நிலையத்தில் சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் கோயிலாக்கண்டி செல்வா சனசமூக நிலைய வளாகத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுமார் 60 லட்சம் ரூபா செலவில் 'சேவாலங்கா' நிறுவனத்தால் இந்த விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. (203-131)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

ஜெர்மன் சற்பேட் கலப்பின அல்சேசன் ஆண்/பெண் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு.

குலங்கரை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**31 ஆம் ஆண்டின் ஆறாத் துளிகள்**



அமரர்
**சீ.செல்லத்துரை**
(முன்னாள் மேற்பார்வையாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.)

சொந்தங்கள் மகிழ்ந்திட 09.02.1937
பந்தங்கள் கதறிட 21.12.1987

"ஈஸ்வரி வாசம்",
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

அன்பிற்கு அணிகலமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
வாடியே வருபவரைத்
தேடியே நலமாக்கி
உறவுக்கெல்லாம்
உறுதுணை நல்கி,வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து
தெய்வத்துள் கலந்துவிட்ட
உங்களை
எம் சிந்தையில் நிறுத்திச்
சீருடன் வாழ்கின்றோம்.இருந்தும்
ஆறவில்லை எம்துயர்!

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

சித்தாரா

அதிமதுரம் ஆடாதோடை சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) AR/PR/NO: 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி/555276)



தவத்திரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

வாழும் கலைப் பயிற்சி - பாகம் I

(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்ஸன கிரியா எனும் சிறப்பு மூச்சுப் பயிற்சி)

அறிமுக உரை

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்: 22.12.2008 (திங்கள்) மாலை 3.30 இற்கு
பயிற்சி நாள்கள்: 23.12.2008 (செவ்வாய்)
முதல் 28.12.2008 (ஞாயிறு) வரை
காலை 6.30-8.30 அல்லது
மாலை 3.30-5.30

பயிற்சி முற்றிலும் இலவசம்

குறிப்பு:- ★பயிற்சிக்கு எவ்வித கட்டணமும் இல்லை
★இலவச பயிற்சிகளின் இறுதிப் பயிற்சி

மேலும் விவரங்களுக்கு:
சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்.
தொ.பே: 0779 434 879, 0779 749 346

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்
கொக்குவில் இந்து முன்பள்ளி

## முன்பள்ளி மாணவர் அனுமதி

★நவீன கற்பித்தல் முறை
★ஆங்கிலத்தின் அவசியம் உள்வாங்கப்பட்ட கற்பித்தல்
★ஆற்றல் வெளிக்கொணரும் செயற்றிட்டம்
★அதிக மேடை நிகழ்ச்சிகள்
★சிறந்த அமைவிடம், போதிய இடவசதி
★தரமான, நிறைவான ஆசிரியர் குழாம்
★அயல் பாடசாலைகளின் அனுசரணை, வழிகாட்டல்
★முன்பள்ளியின் தொடர்ச்சியாக ஆங்கில வகுப்புகள்

ஆரம்பம்:- 07.01.2009

தங்கள் மழலைகள் முன்னணி ஆரம்பப் பாடசாலைகளில் அனுமதி பெறவும், தரமான எதிர்காலப் பிரஜைகளாக உருவாகவும் எம்முடன் இணையுங்கள்.

விண்ணப்பப்படிவங்களை காலை 9.00-10.00 மணி வரையான நேரத்தில் முன்பள்ளி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து 30.12.2008 இற்கு முன் ஒப்படைக்கவும்.

## முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் தேவை

முன்பள்ளி மாணவர்களுக்கு ஏற்ப சிறந்த முறையில் ஆங்கிலத்தில் கற்பிக்கக் கூடிய (ஆடல், பாடல், கலைநிகழ்ச்சிகள் உட்பட) தகுதியான ஆங்கில ஆசிரியர் தேவை.

சம்பளம் ரூபா: 5000/= இற்கு குறையாத தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சுயவிவர விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்து 30.12.2008 இற்கு முன் கீழ் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், கொக்குவில்.

ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE
NORTHERN EXTENSION
DUTCH ROAD, UDUVIL CHUNNAKAM

அசெம்பிளிஸ் ஒவ் கோட் வேதாகமக் கல்லூரி வட பிராந்தியம்.
டச்சு வீதி, உடுவில் சுன்னாகம்.
"Equip yourself to serve God"

Courses for Diploma in Theology for the academic year 2009
Application forms are available for new admissions.

Closing Date for Application 05.01.2009
Registration & Interview 10.01.2009
Commencement 13.01.2009
Modular Evening Courses on weekends.

Apply to:-
The Dean of Student Rev.P.Robert
Assemblies of God Bible College.
Northern Extension
Dutch Road, Uduvil
or
Assembly of God
No 5 cross Rd
Nallur, Jaffna.

Phone Fax - 009421 222 5501, 07791 94622
or 7308, 060 221 6886.
E.mail - surriraja @ sltnet.lk.
"Distinctively Pentecostal" (Accreditation with ATA).

## ஆசிரியர் சேவை பதவி உயர்வு

அச்சுவேலி,டிசெ.21

'ஆசிரியர் சேவையின் பதவி உயர்வு; உள்ளீர்ப்பு; ஒரே நடைமுறையைப் பின்பற்ற அறிவுறுத்தல்' என்னும் தலைப்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 9 ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் களனிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆர்.டி.ஏ.ஜெயசுந்தரவின் நியமனத் திகதி 1984.05.02 என இருப்பதை 1989.05.02 எனத் திருத்தி வாசிக்கவும். (202-11)

## வடிகால் அமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

மட்டுவில் வடக்கு சேச் வீதியில் சுமார் மூன்று லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் வடிகால் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இப்பகுதியில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்காது வழிந்தோடுவதற்கு வசதியாக இந்த வடிகால் அமைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வசதியாக இந்த வீதியில் உள்ள காணிச் சொந்தக்காரர்கள் வீதியை அகலமாக்கும் நேரத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் வேண்டுகோளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-131)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

சுழிபுரம்,டிசெ.21

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சங்கானைக் கல்விக் கோட்ட பிரிவிலுள்ள தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை 2008 இல் சித்தியடைந்த மாணவர்களையும், தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலாம் இடம்பெற்ற மாணவனையும் பாராட்டி பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கானை பட்டினசபை வீதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் குடுஸ் பராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சங்கானை பிரதேச செயலர் திருமதி தே.பாபு, யாழ்.ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் பே.நாகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (204-28)

### தென்மராட்சி விவசாயிகளுக்கு 2 ஆம் கட்ட மானிய உரம்

தென்மராட்சியில் விவசாயிகளுக்கு 2 ஆம் கட்ட மானிய உர விநியோகம் இடம்பெற்று வருகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் சாவகச்சேரி, மீசாலை, புத்தூர்ச் சந்தியில் உள்ள கமநலசேவை நிலையத்தினூடாக வழங்கப்பட்டு வருகிறது.


இந்தமானிய உரம் பின்வரும் திகதிகளில் பின்வரும் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளது இன்றுஞாயிற்றுக்கிழமை சரசாலை வடக்கு விடத்தற்பளை, நாளைதிங்கட்கிழமை வரணிஇயற்றாலை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை- தவளைஇயற்றாளை, எழுதுமட்டுவாள்வடக்கு எதிர்வரும் வியாழக்கிழமை கொடிகாமம் வடக்கு, மீசாலை மேற்கு எதிர்வரும்வெள்ளிக்கிழமை- மந்துவில் வடக்கு, மந்துவில் மேற்கு, மந்துவில் கிழக்கு, எதிர்வரும் சனிக்கிழமை- அல்லாரை மீசாலை ... (203-131)

## வேலணையில் வீதிகள் திருத்தம்

வேலணை திருவள்ளுவர் வீதி நயினாதீவு மகாவித்தியால வீதிகள் திருத்தியமைக்கும் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் வீதி புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றதெனவும் பொதுமக்களின் பாவனைக்காக இந்த இரண்டு வீதிகளையும் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் வேலணை பிரதேச சபையின் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தெரிவித்தார். (202-111)

## 7 ஆம் வருட நீங்காத நினைவுகளில்

மண்ணில் 15 ★ 06 ★ 1935



விண்ணில் 21 ★ 12 ★ 2001

அமரர் மரியாம்பிள்ளை வைற்றஸ்
(ஓய்வுபெற்ற தபாலதிபர் - தாழையடி)

நீதிமான்கள் உரிய காலத்திற்கு முன் இறந்தாலும் இளைப்பாற்றியடைவார்கள்
சால.ஞா.4:7

ஆண்டு ஏழு உருண்டோடினாலும்-ஐயா
ஆறாது எம் கவலைகள் மாறாது எம் சோகங்கள்
தேடுகின்றோம் அனுதினமும்
ஆறவில்லை எம் மனங்கள் ஐயா
எப்போது நீர் வருவீர் ஆசையுடன் காத்திருப்போம்.

என்றும் தங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி, மகன்(சுவிஸ்),
மருமகள், பேரப்பிள்ளைகள்.

போயிட்டி,
இளவாலை. (80711)

## வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## மீள் கேள்வி அறிவித்தல் - 2009

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2009 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 26.12.2008 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 26.12.2008 பி.ப 1.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 26.12.2008 பி.ப 2.00 மணி.
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம்)

| இல. விவரம் | கேள்விப் பத்திர பணம் (வற் நீங்கலாக) | மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| *அச்சுவேலி உப அலுவலகம்* | | | |
| 01. அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 2000.00 | 845000.00 |
| 02. அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 131775.00 |
| 03. அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 32500.00 |
| *புத்தூர் உப அலுவலகம்* | | | |
| 01. புத்தூர்ச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 52800.00 |

மேலதிக விவரங்களையும் கேள்விப்படிவங்களையும் உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி.கிழக்கு பிரதேச சபை,தலைமை அலுவலம், புத்தூர்.
19.12.2008

தம்பையா நடராசா
செயலாளர்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
ஜெகநாதன் சிவவதனி
(ஆசிரியை, கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)
திதி:- துதியை 29.12.2008

அன்னை மடியில்
17★04★1977

ஆண்டவன் அடியில்
21★12★2006

கள்ளமில்லா புன்சிரிப்பும் கனிவான பார்வையும்
இளகிய மனமும் கொண்ட இனிய வதனியே!
காலன் கவர்ந்தானே உனதுயிரை
கண்ணீரில் கரைந்து விட்டோம்
ஆண்டிரண்டு சென்றாலும் வந்திடுவாய்
வதனியே வதன முகம்காண வையமதில்

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

முருகமூர்த்தி கோயிலடி,
உடுவில்.

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

## சேவை நலன் பாராட்டு

ஆசிரிய சேவையில் 37 வருடங்கள் விஞ்ஞான ஆசிரியராக நிறைந்த சேவையாற்றி எமது பாடசாலையிலிருந்து இன்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெறும் ஆசானும், பழைய மாணவனுமாகிய

**திரு.சின்னத்தம்பி முத்துலிங்கம்**

அவர்களின் (S.L.T.S.-I)

ஓய்வு காலம் சிறக்க எல்லாம்வல்ல நடேசப் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.



★ ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி — யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை (1954- 1966 மாணவனாக)
★ உயர் கல்வி — யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி (1967- 1970 மாணவனாக)

**சேவை விபரம்** - ஆசிரியராக

| | |
|---|---|
| ★ யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர் | 1971- 1971 |
| ★ யா/பலாலி விசேட் ஆசிரியர் பயிற்சி | 1972- 1973 |
| ★ பதுளை சரஸ்வதி மகாவித்தியாலயம் | 1974- 1981 |
| ★ யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | 1982- 2004 |
| ★ யா/மானிப்பாய் மெமோறியல் ஆ.பாடசாலை | 2005- 2008 |

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

**வை.செ.சோமாஸ்கந்தன்**

[வேலணை, சிற்பனை முருகன் ஆலய முன்னாள் அறங்காவலரும், தற்போதைய ஆயுட்கால தலைவரும்]

எமது ஆலய பரிபாலன சபையின் ஆயுட்கால தலைவராக இருந்து வழிநடத்திய அமரர் வை.செ.சோமாஸ்கந்தனின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சிற்பனை முருகனின் பொன்மலர் பாதங்களில் நித்திய சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிற்பனை முருகன் கோயில்,
சிற்பனை, வேலணை. ஆலய பரிபாலன சபையினர்.

(80986)

# அறுபதாவது அகவை நிறைவும் சேவை நயப்பும்

## திருமதி மகாலட்சுமிதேவி வரதராஜா

(Sp.Trd. Home Science SLTS - 1)



எமது வித்தியாலயத்தில் மனைப் பொருளியல் ஆசிரியையாக அர்ப்பணிப்புடன்கடமையாற்றி 21.12.2008 அன்று தன் அறுபதாவது அகவையில் ஓய்வுபெறும் திருமதி மகாலட்சுமிதேவி வரதராஜா அவர்கள் சகல சிறப்புக்களும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம், கொடிகாமம்.

# மரண அறிவித்தல்

## முத்துச்சாமி சுடலைமுத்து(ஆச்சாரி)



தமிழ்நாட்டைப் பிறப்பிடப் பிடமாகவும் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்து வந்த வருமான முத்துச்சாமி சுடலை முத்து (ஆச்சாரி) நேற்றுமுன்தினம் (19.12. 2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி - கோமதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சாமி (ஆச்சாரி), தையல்நாயகி, அருள்ராஜன்(ஆச்சாரி) மற்றும் ஐயம்பெருமாள் (ஆச்சாரி), ஜெயா, ஜெகதீஸ்வரன்(ஆச்சாரி) , கோமதி, சந்திரன்(ஆச்சாரி), பொன்னி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவன் (ஆச்சாரி), நாகலிங்கம் (ஆச்சாரி), பொன்னையா (ஆச்சாரி), இராசம்மா, சுப்பிரமணியம் (ஆச்சாரி) மற்றும் கிருஸ்ணம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.12.2008)ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேரப்பிள்ளைகள்.

ஐயம்பெருமாள் ஆச்சாரி,
இல.625, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## தேவசகாயம் ஜோசேப்



தேவாலய வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் ஜோசேப் (19.12.2008) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் - பாக்கியம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் பொன்னையா - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் பழனிச்சாமியின் மைத்துனரும் நீற்றம்மா, சிசிலியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவளம்மாவின் அன்புக் கணவரும் மேரி புஷ்பம், ஞானமலர், ஸ்ரீ உதயமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடராசா, இராசநாயகம், யோகராணி ஆகியோரின் மாமனும் மயூரன், செந்தூரன், மேனகா, சோபனா, அனிற்றா, ஜென்சி, தர்சன், மேருஜன், அட்சயன், வேதிகா, துளசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் இந்துஜா, சினோஜா, அட்சயா, மாலினி, கெமி, ரெறி, பிறிட்னி, அனனி ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (20.12.2008) சனிக்கிழமை மாதம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
189, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [80988]
செ.இராசநாயகம் (மருமகன்)
T.P. 021 222 8249, 0777 168148

## நாகநாதி வைத்திலிங்கம் (சின்னத்துரை)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி வைத்திலிங்கம் (சின்னத்துரை) நேற்றுமுன் தினம் (19.12.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி-நாகமுத்து தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசையா - கற்பகம் தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, யோகம்மா, பொன்னம்மா, சிவக்கொழுந்து, சின்னம்மா, மீனாட்சி, சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் விமலா (கனடா), ஞானகௌரி (கொழும்பு), தயாளன் (பிரான்ஸ்), குகதாசன் (தாஸ் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம்), நிர்மலா (கனடா), சிவனேசன் (கனடா), மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராமச்சந்திரன் (கனடா), நடராசா (சேகர் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), சிவலட்சுமி (பிரான்ஸ்), ராகினி (யாழ்ப்பாணம்), சிவகுமார் (கனடா), குமுதா (கனடா), சிவசோதி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுகன்யா, சுவர்ணா, ஜனனி, சுபைதா, சோபிதர், சுகிர்தா, விதர்சனா, சிந்து, வைகை, சத்தியேந்திரா, யுகேந்திரா, சனேந்திரா, ராகவி, ராகுல், றஜீவன், பிரகவி, மிதிலா, சாகிதா, றீகன், கௌஷா, கௌஷன், லக்ஸ்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சகானா, அஸ்வின், சுஜினா, சியான், அஸ்ணவி, வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி: குகன் (தாஸ் கிறீம் ஹவுஸ்),
இல.230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன், மருமக்கள்.

# இறுதி அஞ்சலி



வட்டு மூளாய் றோட் சமூகத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான

**குமாரசாமி சிவசுப்பிரமணியம்**

C.S.Master

அவர்கள்

★ கல்விமான்
★ நல்லாசிரியன்
★ வினைத்திறன்மிக்க கூட்டுறவாளன்
★ ஆன்மீகவாதி

அன்னாரின் மறைவையொட்டி சிரம்தாழ்த்தி கரம் கூப்பி அஞ்சலி செலுத்து கின்றனர். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றனர்.

வட்டு மூளாய் றோட் சமூகத்தின் இணை அமைப்புகளான
வட்டு - மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கம்,
ஸ்ரீ கணேச வாசிகசாலை,
வட்டு - மூளாய் றோட் இளைஞர் உடலுள விருத்திச் சங்கம்
மூளாய் றோட் மகளிர் இலக்கிய வட்டம்,
உடுக்கியவளை பிள்ளையார் கோயில்,
கண்ணகை அம்மன் கோயில்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

மூளாய் றோட் ...

## முன்பள்ளிகளுக்கு யுனிசெப் உதவி

கோப்பாய், டிசெ.21

வலி.கிழக்குப் பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட முன்பள்ளிகளுக்கு யுனிசெப் அமைப்பின் அனுசரணையோடு சவர்க்காரம், துவாய் போன்ற சுகாதாரப் பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

(202-72)

# ஓராண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 ✱ 10 ✱ 1940 | 03 ✱ 12 ✱ 2007 |



**அமரர் முத்துக்குமார் சிவஞானம்**

திதி: நவமி [21.12.2008]

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அணையாத தீபமாய் எம்மவர் மனங்களில் நிறைந்திட்ட
எம் அன்பு அப்பாவே! கழிகின்ற பொழுதெல்லாம்
விழிகளில் நீர் சுமந்து உங்கள் நினைவுகளில் சிதக்கின்றோம்
ஆண்டொன்று கடந்தாலும் ஆறாது எம் துயர்.

23, பிள்ளையார் கோயில் வீதி,
நெடுங்குளம், கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.

(80987)


'X' MAS SALE


நத்தார் புது வருட அதிரடி அசத்தல் மலிவு விற்பனை

NEW YEAR SALE

சகல ஆடை வகைகளுக்குமான விலைக் கழிவு,
ரூபா 5000/=க்கு மேல் கொள்வனவு செய்யும்
பெண்களுக்கு ஸ்கேட் & பிளவுஸ் ஒன்றும்
ஆண்களுக்கு ரீசேட் ஒன்றும் நத்தார் பரிசாக வழங்கப்படும்.
என்றும் இல்லாத, எங்குமில்லாத் தெரிவுகளுக்கு

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

மலாயன் கபே முன்பாக
இல.10, 11, மின்சார நிலைய வீதி,
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜனநாயகத்தின் பெயரால் ஸ்திரமாகும் சர்வாதிகாரம்

பாரதத்தின் 'நியூ இந்தியன் எக்ஸ்பிறஸ்' பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சியைச் சுற்றித் தற்போது நடைபெற்றுவரும் யுத்தம் குறித்தும் குறிப்பிட்டிருக்கின்றார்.

*''கிளிநொச்சி வீழ்ச்சி இராணுவ வெற்றி என்பதை விட ஜனநாயக உரிமைகளை மீள ஏற்படுத்துவதற்கான ஆரம்பமாக அமையும்''* - என்று வியாக்கியானம் அளித்திருக்கின்றார் அவர்.

தமிழர் தாயகத்தின் மையப் பிரதேசம் சிங்களப் படைகளின் - சிங்களத் தலைமையின் - கைகளில் வீழ்ச்சியுறுவது ஜனநாயக உரிமைகளை மீள நிலைநாட்டுவதற்கான ஆரம்பம் என்று இலங்கை அரசுத் தலைவர் குறிப்பிடுகின்றார்.

அவர் கூறும் ஜனநாயகம் எது என்பதுதான் இன்றைய முக்கிய பிரச்சினையாகும். அவர் குறிப்பிடும் ஜனநாயகத்தின் ஆழ அகலங்களை - அர்த்த பரிமாணங்களை - புரிந்துகொண்டால், ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேற்றப்படும் பேரினவாத அடக்குமுறையையும் இனவாத சர்வாதிகாரத்தையும் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

சிறுபான்மையினரான தமிழர்களை பெரும்பான்மையினரான பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் அடக்கி, ஒடுக்கி, மேலாதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்த சொல்லாடலே 'ஜனநாயகம்' என்ற தந்திரோபாயமாகும்.

'பெரும்பான்மையினரின் தீர்மானமே முடிவு' என்ற ஜனநாயகத்தின் மாண்புமிக்க கோட்பாட்டுத் தத்துவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டே - அதை சாதகமாகப் பயன்படுத்தியே - கடந்த ஆறு தசாப்த காலமாக சுதந்திர(?) இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்கள் திட்டமிடப்பட்ட முறையில் பேரினவாதிகளின் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பது வெளிப்படையான உண்மை.

ஜனநாயக விழுமியத்தின் உன்னதத் தன்மை என்ற கருத்துருவத்தின் தோற்றப்பாட்டுக்குப் பின்னால், அந்தப் பொய்யான முகமூடிக்குப் பின்னால், பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகள் ஆறு தசாப்த காலமாக தமிழினத்துக்கு எதிராகப் புரிந்துவரும் அநீதிகள், அராஜகங்கள், அடக்குமுறைகள் அனேகம்.

இந்தக் கொடூரங்களை மூடிமறைத்து, உலகத்தின் கவனத்தை தவறான பாதையில் திசைதிருப்பும் யுக்தியாகவே 'ஜனநாயகம்' என்ற பூடகமான சொல்லாடலை தென்னிலங்கை வசமாகப் பயன்படுத்தி வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை - பௌத்த, சிங்கள அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படும் ஜனநாயகம் என்பது தமிழ் மக்களின் கருத்தில், நிதர்சனத்திற்கு மாறான வெறும் மாயாஜால வார்த்தைப் பிரயோகமே. அந்தப் போலியான கருத்துவத் திரைக்குப் பின்னால் மறைந்துநின்று இன அடக்குமுறைச் செயற்பாடுகளைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் தென்னிலங்கை, அந்த அத்துமீறல்களை எல்லாம் சர்வதேசத்தின் முன்னால் நியாயப்படுத்துவதற்காக ஜனநாயக நாடகத்தை ஆடுகின்றது.

தனியான இனம், தனியான தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய பண்பியல்புகளைக் கொண்ட ஒரு தேசமாகவும், தேசியமாகவும் விளங்கும் ஈழத்தமிழர் தரப்பை, எண்ணிக்கையில் அதிகம் என்ற தனது வலிமையை வைத்துக்கொண்டு, ஆக்கிரமித்து அடக்கி ஆள்வதற்கும், அத்தரப்பு மீது தனது அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் சிங்களம் கையில் எடுத்திருக்கும் கருவியே ''ஜனநாயகம்'' என்ற சொல்லாடலாகும்.

தனது அதிகார மேலாண்மையையும், கருத்து நிலை மேலாதிக்கத்தையும் நிலை நிறுத்துவதற்கான உபகரணமாக ஜனநாயகம் என்ற உயரிய பண்பியல்பை சிங்களம் நுட்பமாகப் பயன்படுத்துகின்றது.

தமிழர் தரப்பின் சம்பந்தமோ, உடன்பாடோ, இசைவோ இன்றி சிங்களத்தின் ஒருதலைப்பட்சமான தீர்மானத்திற்கு அமைய இலங்கைத் தீவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அரசமைப்புகளை வைத்துக்கொண்டு - தமிழர்கள் மீது சிங்களத்தினால் வல்வந்தமாகத் திணிக்கப்பட்ட யாப்புக்களின் அடிப்படையில் - முன்னெடுக்கப்படும் அதிகாரச் செயற்பாடுகள் தார்மீக ரீதியில் தமிழர்களைக் கட்டுப்படுத்தா. அத்தகைய சட்ட ஏற்பாடுகளின் கீழ் ''ஜனநாயகத்தின் பெயரால்'' தான் நடத்தும் நாடகங்களை உலகம் நம்பவேண்டும் என சிங்களம் எதிர்பார்ப்பதும் அபத்தமாகும்.

''அநீதியான முடிவு என்றாலும் பெரும்பான்மையினரின் தீர்மானமே இறுதித் தீர்ப்பு'' என்ற ஜனநாயகத்தின் ஓட்டையை வைத்துக்கொண்டு தென்னிலங்கைப் பேரினவாதம் புரிந்த அராஜகத்தின் வரலாற்றுப் பெறுபேறே ஈழத்தமிழினத்தின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமாகும்.

அதை அடக்கும் அடக்குமுறை நடவடிக்கையை நியாயப்படுத்தவும் அதே ஜனநாயகமே தென்னிலங்கைக்குப் பயன்படுவது விந்தைதான்.

ஜனநாயகத்தின் மாண்பு ஓர் எல்லை வரையே. அதற்கு அப்பால் 'எண்ணிக்கையை விட எண்ணம் பெரிது' என்ற உயரிய மார்க்கத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். நீதி, நியாயத்தை உள்வாங்காத ஜனநாயகமும் - பேரினவாதமும் - ஒரு வகையில் சர்வாதிகாரமே.

இந்தவகையில் பார்த்தால் கிளிநொச்சியின் உத்தேச வீழ்ச்சி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுவதுபோல 'ஜனநாயகத்தை மீள நிலைநாட்டுவதன் ஆரம்பம்' ஆக் அல்லாமல் 'சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தும் ஜனநாயகக் கேலிக்கூத்தாகவும் ' அமையலாம்.

# மானிய உரத்தை விற்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## கமநல உதவி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மானிய உரத்தை விற்பனை செய்தல் சட்டரீதியாக தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரத்து 80 மெற்றிக் தொன் உரம் முதற்கட்ட மானியமாக விநியோகிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக ஆயிரத்து 120 மெற்றிக் தொன் உரம் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

இந்த மானிய உரத்தை விற்பனை செய்தல், வாங்குதல், விற்பனைக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ஆகியன சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (202)

# தேசியப் பிரச்சினையாகக் கருதியே எரிபொருள் விலை குறைப்புக்கான தீர்ப்பை வழங்கினேன்

## கட்சி அல்லது அரசியல் கோணத்தில் அதனை நோக்கக்கூடாது என்கிறார் பிரதம நீதியரசர்

எரிபொருள் விலைக்குறைப்பு தொடர்பான உயர்நீதிமன்ற உத்தரவு, கட்சி மற்றும் நிறபேதங்களுக்கு அப்பாற்பட்டதாகும். எரிபொருள் பிரச்சினையை நாட்டின் தேசியப் பிரச்சினையாகக் கருதியே நீதியரசர்கள் குழு, குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

பொதுமக்கள் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக காலை முதல் நீண்ட வரிசையில் நிற்கின்றமை கவலையளிக்கும் விடயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை நீதிமன்ற சேவை அதிகாரிகள் சங்கத்தின் மாநாட்டில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதம நீதியரசர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில், நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் பின்னரும் வியாழக்கிழமை காலை முதல் அதிகளவான மக்கள் எரிபொருளுக்காக காத்து நின்றமை கவலைக்குரிய விடய மாகும். இந்நிலைமைக்கு ஒரு வகை யில் நானும் பொறுப்புக்கூற வேண்டுமென உணர்கிறேன். ஆனால் நீதிமன்றத்தில் கட்சி, நிற பேதங்க ளைத் தாண்டியே அனைத்துத் தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றது என்பதைக் கூறவேண்டியுள்ளது.

இது தேசிய பிரச்சினை. அதனால் தான் உயர் நீதிமன்றம் நான்கு தடவைகள் உத்தரவு பிறப்பித்தது. இதனை கட்சி அல்லது அரசியல் கோணத்தில் பார்க்க வேண்டாம் என நவம்பர் மாதம் 28 ஆம் திகதி வழங்கிய தீர்ப்பில் வலியுறுத்திக் கூறியிருந்தோம். நீதியரசர்கள் குழுவில் இருந்த மூன்று நீதியரசர்களும் இதில் கையொப்பமிட்டனர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அரசியல் மோதல்களுக்கு நீதிமன்றத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இந்த அரசியல் கருத்து மோதல்கள் நாட்டை ஊழல் நிலைமைக்குத் தள்ளும். அனைத்துக் கட்சிகளையும் அரசியலையும் விட உயர்ந்த இடத்தில் நாங்கள் இருக்கின்றோம் என்பதைத் தெளிவாக கூற விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## மறக்க முடியாத பலவகை.......

*(03 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

திறந்திருந்த ஓரிரு சாப்பாட்டுக் கடைகளில் வழமையை விடவும் இரண்டு, மூன்று மடங்கு விலைகளிலேயே உணவுப்பொருள்கள் விற்கப்பட்டன. இதனால் கையில் இருந்த காசெல்லாம் கரைந்துபோய், மாணவர்கள் பலரும் கடனாளிகளாக வேண்டிய பரிதாபநிலை உண்டானது.

மழை பெய்து ஓய்ந்த பின்னர் குடிதண்ணீருக்கும், ஏனைய தேவைகளுக்கான நீருக்கும் மிகுந்த சிரமப்பட வேண்டி வந்தது.

எங்களைச் சுற்றிலும் மழையின் வேகத்தால் ஒரே நீர்மயம். ஆனால் தவித்த வாயின் தாகம் தீர்க்க ஒரு சொட்டுத் தண்ணீருக்காக நாங்கள் அலைந்து திரிந்தோம். கடைசியாக விடுதியின் பின்புறமாக இருந்த கைப்பம்பியைப் (hand pump) பயன்படுத்தி குடிநீரைக் கஷ்டப்பட்டுப் பெறமுடிந்தது. எனினும் அந்த நீரில் வெள்ளநீரும் கலந்ததினால் இப்போது பலமாணவர் களுக்கு கால், கைகளில் சிரங்கு முதலான தோல் நோய்கள் வந்தவண்ணம் உள்ளன.

இதுதவிர மழை பெய்தபோது தடைப்பட்ட மின்சாரம் மீள வந்த போது அதிக வலுக்கொண்டதாக இருந்தது. இதனால் பல மாணவர்களின் கைத்தொலைபேசிக்கான மின்னேற்றல் கருவிகள் (Phone Charger) பழுதடைந்து விட்டன. ஏராளமான மின்குமிழ்களும் இதன்போது செயலிழந்து விட்டன. இப்போது விடுதியில் ஒரு சில 'டியூப் லைற்' கள் தான் இயங்கு நிலையில் உள்ளன.

அத்தோடு விடுதியின் அயற்புறங்களில் வசிப்போரின் கழிவுகள் எல்லாம்-மலசலம் உட்பட - வெள்ளத்தால் விடுதிக்கு அடித்து வரப்பட்டதனால் கிருமித்தொற்றும் அதிகரித்துள்ளது.

வருடாவருடம்மழை வெள்ளத்தால் ஆனந்தகுமாரசுவாமி விடுதி மாணவர்களும், விடுதி அமைந்துள்ள வீதி வழியாகப் பயணிப்பவர்களும் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின், விடுதிக்கு முன்னாலுள்ள வீதியானது, விடுதியை ஒட்டி அமைந்துள்ள தண்டவாளப்பகுதி அமைந்துள்ள உயரத்திற்கு உயர்த்தி அமைக்கப்பட வேண்டும். அத்தோடு அயற்புறங்களில் இருந்து விடுதியை நோக்கி வருகின்ற வெள்ளத்தை வேறுவழிகளினூடாகப் பாய்ந்தோடுவதற்குரிய மாற்று வழிகளும் அமைக்கப்பட வேண் டும். அப்போதுதான் மாணவர்கள் வெள்ளத்தால் அனுபவிக்கும் அவலங்களுக்கு ஒரு முடிவு வரும். உரியவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பார்களென நம்புகின்றோம்.

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 07 | 22.12.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.ப. 10.02வரை |
| நட்சத்திரம்: | சித்திரை |
| | மு. ப. 10.17வரை |
| சுபநேரம்: | 12.25 - 1.55 |
| ராகுகாலம்: | 7.55 - 9.25 |

# யாழ்ப்பாணத்திற்கு உள்ளூராட்சி அந்தஸ்து காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டது

***டிசெம்பர் 1907 யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது.***

*யாழ்ப்பாணம், இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாயிருந்த போதும், வடபகுதியின் தலைநகரமாக இருந்தும், இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படத்தொடங்கி நாற்பது வருடங்களின் பின்னரே யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச்சபை உருவாக்கப்பட்டது.*

*1866 ஆம் ஆண்டே கொழும்பு, கண்டி மாநகர சபைகள் உருவாக்கப்பட்டு விட்டன. காலி மாநகரசபை 1867 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபையை உருவாக்குவதை அப்போது அரசாங்க அதிபராக இருந்த சேர் வில்லியம் துவைனம் எதிர்த்து வந்தார். (என்ன காரணத்திற்காக எதிர்த்தாரோ தெரியவில்லை) இவரது பதவிக் காலம் முடியும் வரை யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச்சபை உருவாக்கப் படவில்லை. துவைனம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் ஜே.பி. லூயிஸ் (J.P. Lewis) அரசாங்க அதிபராகப் பதவியேற்றார். இவர் யாழ்ப்பாணத்திற்கு உள்ளூராட்சிச்சபை தேவையெனச் சிபார்சு செய்தார். இதனையடுத்து 1905 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச்சபை அமைப்பதற்கு அப்போதைய அரசு (பிரிட்டிஷ் அரசு) அங்கீகாரமளித்தது. 1907 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் எஸ்.தம்பையாபிள்ளை, ஏ.கதிரவேலு, ஓ. சபாபதி ஆகியோர் இரண்டாண்டு காலப்பகுதிக்கு உத்தியோகப்பற்றற்ற உறுப்பி னர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.*

**அப்போதைய அரசஅதிபரின் பிடிவாதம் காரணம்**

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

*யாழ்.மாநகரசபை (மாநகரசபை அந்தஸ்து கிடைக்கமுன் 1949 வரை) ஆரம்பத்தில் உள்ளூராட்சிச்சபை எனவும், நகரசபை எனவும் அழைக்கப்பட்டது. உள்ளூராட்சிச் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோதும் அரசாங்க அதிபரே சபைக்கூட்டங்களைத் தலைமை தாங்கி நடத்தினார். உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பெரிதாக அதிகாரம் எதுவும் இருக்கவில்லை. அரசாங்க அதிபரே இறுதி முடிவு எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் உள்ளூராட்சிச் சபைக் கூட்டங்கள் கச்சேரியிலேயே நடைபெற்றன.*

-தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்...

# அமரர் மகேஸ்வரனின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.21

முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சரும் முன் னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான அமரர் தியாகராசா மகேஸ்வ ரனின் முதலா வது ஆண்டு நினை வுப் பேருரையும், நினைவு நூல் வெளியீட்டு நிகழ்வும் இன்று காரைநகர் ஈழத்துச் சிதம்பர அறப் பணி நிலைய மண்டபத் தில் இடம்பெற உள்ளன.

இன்று காலை முதல் ஈழத் துச் சிதம்பரத் தில் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளும் பஜனைகளும் நடைபெறும்.

அதனையடுத்து முற்பகல் 9.30 மணிக்கு மகேஸ்வரன் அமரத்துவமடைந்த ஓராண்டு நினைவு அஞ்சலி நிகழ்வுகள், நினைவுப் பேருரை, நூல் வெளியீடு என்பன அறப் பணி நிலைய மண்டபத்தில் நடை பெறும்.

'பத்திரிகைகளின் பார்வையில் மகேஸ் வரன்', 'பாராளுமன்றம் சூட்டிய புகழா ரம்', 'பாராளுமன்றத்தில் மகேஸ்வரன்' ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்படவுள்ளன. வெளியீட்டுரை, அறிமுக உரை என்பனவும் நினைவுப் பேருரையும் இடம் பெறும். (அ)

## கலைவிழாவும் வழியனுப்பு விழாவும்

சுன்னாகம் கிழக்கு சனசமூகநிலையமும் சிவன் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் கலைவிழா வும் வழியனுப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் க.சிவம் தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் தி.சிவகுமாரன் கலந்துகொள்வார்.

## பரா வெளிச்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை முதலில் ஐந்து மணிக்கும் பின்னர் 5.35 மணிக்குமாக இரு தடவைகள் வந்த ஹெலிகொப்டர்கள் பரா வெளிச்சக் குண்டு களை வீசி குண்டுத் தாக்குதலை நடத்தின.

இத் தாக்குதலில் கரையோரப் பகுதி மீன் வாடிகள் இரண்டும் படகுகள் இரண்டும் எரிந்து நாசமாகியுள்ளன. பொதுமக்களின் வீடுகள் இரண்டும் சேதமாகியுள்ளன.

## காங்கிரஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் ராயப்பேட்டை, சத்தியமூர்த்திபவன் மற்றும் அண்ணா சாலை பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். மறியலில் ஈடு பட்ட காங்கிரஸாரை பொலிஸார் கைது செய்து அப்புறப்படுத் தினர்.

வீதி மறியலின்போது திருமாவளவனைக் கைது செய்ய வலி யுறுத்தி காங்கிரஸார் கோஷமிட்டதைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் சத்தியமூர்த்திபவன் எதிரே சாலை மறியலில் ஈடுபட்டனர். திடீரென அவர்கள் சத்தியமூர்த்திபவன் அலுவலகத்தின் உள்ளே புகுந்து ரகளையில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காங்கிரஸார் மீண்டும் வீதி மயிறலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

திருமாவளவனை கைது செய்யக் கோரி தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தலைமையில் தேனியில் காங்கிரஸார் சாலை மறியலில் ஈடுபட்டனர். சாலை மறியலில் ஈடுபட்ட தங்கபாலு, ஆருண் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட காங்கிரஸாரை பொலிஸார் கைது செய்தனர். (அ)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடைப்பட்ட களமுனையில் மேலும் பல படையினரின் சடலங்களும் படையப் பொருள்களும் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன.

இந்த அதிரடித் தாக்குதலின் போது படையினருக்கு ஒத்துழைப்பாக விமானப் படையினரின் விமானங்கள் செறிவான தாக்குதலை நடத்தின- என்றுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து,இச் செய்தி எழுதப்பட்ட நேற்று நள்ளிரவு வரை, இராணுவத் தரப்பில் இருந்து எவ்வித தகவலும் வெளிவரவில்லை. (அ)

## புலிகளுக்கு ஆயு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சித்தது. கடற்படையினர் திருப்பித் தாக்கியபோது அது தீப்பற்றி எரிந்தது என்றும் கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்களை ஏற்றி வந்த சுமார் 100 அடிநீள முள்ள கப்பலே தாக்கி அழிக்கப்பட்டதாவும் இருதரப்பினருக்கும் இடையில் மோதல்கள் சுமார் இரண்டு மணி நேரம் இடம் பெற்றதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து இச் செய்தி எழுத்தப்படும் வரை விடுதலைப் புலிகளிடம் இருந்து தகவல்கள் எதுவும் வெளியாக வில்லை. (அ-ரி)

## நிதி நிர்வாகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையாது. இது அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அனைத்துலக நடைமுறையாகும். பெற்றோல் விலைக் குறைப்புக் குறித்து தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் மதிக்கின்றோம். இது தொடர்பில் அமைச்சரவை முடிவு எடுக்கும்.

வரவு- செலவுத் திட்டம் மூலம் மேலும் பெற்றோல் விலையை மஹிந்த குறைத் தார். எதிர் வரும் ஆண்டின் தொடக்கத்தில் சமையல் எரிவாயு வின் விலை பாரியள வில் குறைக்கப்படும். பால்மாவின் விலை யும் மேலும் குறைக்கப்படும்-

இதே வேளை ஐக்கிய கட்சியைச் சேர்ந்த ரவி கருணநாயக்க, பெற் றோல், அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப் புக்கு உயர் நீதிமன் றத்தை நாடுவதில் தமது கட்சிக்கு தயக் கம் ஏதுவும் இல்லை என்று கூறினார்.

தலைமை நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அதனை அரசாங் கம் மதிக்கா மல் இருந்தால் பொதுமக்கள் எப்படி சட் டத்தை மதிப்பார் கள் என்று கேள்வி எழுப் பிய ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசநாயக்கா நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய எரிபொருள் விலையைக் குறைக்க வேண்டும் என்று கூறினார். (அ)

## இந்தியா உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சிலதினங்களுக்கு முன்னர் அமெரிக்கா, பிரித்தானியா, ஜப் பான், இந் தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடு களின் தூதரக பாதுகாப்பு அதி காரிகள் வன்னி படை முகாம்களுக்குச் சென்று, அங்கு தாக் குதல்கள் தொடர்பில் ஆராய்து ஸ்ரீலங்கா இரா ணுவத்திற்கு நேரடியாக உதவி புரிவது அம்பலத்திற்கு வந்துள்ளது. இது மிகவும் கண் டிக்கத்தக்க விடயமாகும் சுதந்திரப்போராட் டத்திற்கு இன்று எதிராக ஸ்ரீலங்காப் படை நடத்த வரும் தமிழ் இன அழிப்புப் போருக்கு உலக நாடுகள் ஆதரவு வழங்கிவரு வதுடன் ஊக்கமும் அளித்தவருகின்றன.

ஆனால் எமது போராட்டத்திற்கு எந்த ஒரு நாடும் உதவவில்லை. புலர்பெயர்ந்து வாழ் கின்ற தமிழ் மக்களின் உதவியும் ஒத் துழைப் புமே பக்கபலமாக அமைந்துள்ளது. எனவே, நமது மக்களின் உதவியுட னேயே பேராட் டத்தை வெல்ல வேண்டும் என்றுள்ளது. (அ-சி)

## முதலாவது ஆண்டு ஆத்ம சாந்திப்பிரார்த்தனை

### அமரர் தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து சமய விவகார அமைச்சர், யாழ்.மாவட்ட மற்றும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)



அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யும் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடை பெறும்.

தொடர்ந்து ஆன்மீகப் பேருரையும், நினைவுப் பேருரைகளும் அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகர ணங்களும், முதியோர்களுக்கு உடுபுடை வைகளும் வழங்கப்படும்.

விசேட அன்னதான வைபவமும் இடம்பெறும்.

அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

வல்லிபுரம் புலோலி.

மடாதிபதி பெரியாழ்வார் ஆச்சிரமம்

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சோமசுந்தரம்

(முன்னாள் டிப்போ ரிங்கர்- C.T.B)



கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட பொன்னையா சோமசுந் தரம் நேற்று(20.12.2008) சனிக்கிழமை காலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் கோண்டாவில் கொட் டைக்காடு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கலைவாணி வீதி,
கோண்டாவில்.
தொ.பே.: 0776557183

### இளையதம்பி இராசலிங்கம்

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இ.இராசலிங்கம் நேற்று(20.12.2008) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினத் தின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, தவ மணி, வள்ளிநாயகி, இளையகுமார், இராச லட்சுமி, இந்திராணி, சண்முகானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தை ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

O/L முடிந்தது???......
பரீட்சை பெறுபேறுகள் கிடைப்பதற்குமுன் அரியவாய்ப்பை தவறவிடாது இன்றே CATWAS உடன் இணையுங்கள்!
Diploma in Ms Office
Diploma in DTP
Diploma in Hard Ware
கணனி யுகத்தில் தடம் பதித்திட சிறுவர்களுக்கான Kids Program வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளன.
ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
Multimedia மூலமான விளக்கங்கள்.
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.
இலகு முறையிலான கட்டணங்கள்.
ஒவ்வொரு பாடமுடிவிலும் பரீட்சைகள்.
உங்கள்பதிவுகளை 10.01.2009 வரை மேற்கொள்ளலாம்.
CATWAS.COM
Computer Academy
# 26, Somasundram Avenue,
Chundukuli, Jaffna.
Tel: 021 2223805
E-Mail : catwasomi@sltnet.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில்.......!
கூடிய வசதிகளுடன்......!
Certificate Courses
"A training institute registered with Tertiary & Vocational Education Commission"
1). 3Months Computer Courses
* Computer Hardware
* Macro media Flash MX
* Microsoft Office
* Printing Technology
* 3D Animation Using in Maya
* Programming Using Visual Basic
2). 3Months Electronic Course
* Covering G.C.E(A/L) Syllabus
(3 மாத இலத்திரனியல் கற்கை நெறி)
ஆரம்பம் : Jan 2009 முற்பகுதியில்
Further Details:
Director,
Jaffna College institute of Technology
Vaddukodddi, Sri Lanka.
T.P.: 0602213139,021 222 8275 Email:jcit@sltnet.lk

உங்களுடைய ஆக்கங்கள் ஒரே நாளில் தயாரிக்கப்பட்டவை அல்ல
அதனால் என்ன?
அவற்றை நாம் குறுகிய நாட்களில் கணினியில் வடிவமைத்து தருகின்றோம்
உங்கள் உயர்கல்வி ஆய்வு உதிரிகளை கணினி மூலம் ஆவணமாக்கி சிறந்தமுறையில் பைண்டிங் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
கணினி வடிவமைப்பு டிஜிற்றல் கொப்பி பிறிண்ட் கலர் லேசர் பிறிண்டிங் மற்றும் போட்டோ கொப்பி லமினேசன் ஸ்பைறல் பைண்டிங் வேலைகளுக்கு
அகரம் கணினி பதிப்பகம்
பிறவுண் வீதி (தொழில்நுட்ப கல்லூரி முன்பாக) யாழ்ப்பாணம்.

ஸ்ரீ தர்ஷனனின்

பிள்ளையார் கதை
அபிராமி அந்தாதி
பஞ்சபுராணம்
கேதாரகௌரிப் பாடல்
சிவபுராணம்
பாடல்கள் பெற்றுக்கொள்ள
75, அம்மன் வீதி, நல்லூர்,
(வீரமாகாளியம்மன் கோயில் முன்பாக)
021 222 2796,
060221 0077

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
2011 A/L தமிழ் மொழி மூல
கணித, உயிரியல் வகுப்புகள்
ஆரம்பம் : 28.12.2008 / ஞாயிறு : 7.00 A.M
வழமையான ஆசிரியர் குழாம்

Diploma in English
Spoken with Grammar
Phonetics Practices.
Computer Based Prac...
புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.12.2008 08.00AM
* Practice Ex...
* Spoken Practices
* Letter W...
* Listening
விபரங்களுக்கு நேரில்:
324, பலாலி வீதி, யாழ்...
MCS
Supported By UNDP/JRRP

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி–தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
Microsoft Engineering
கற்கைநெறிக்கு விசேட சலுகை.
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
2011 A/L ஆங்கில மொழி மூல
கணித, உயிரியல் வகுப்புகள்
ஆரம்பம் : 28.12.2008 / ஞாயிறு : 8.00 A.M
25.12.2008 மாலை 3.30 ற்கு ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் ஆசிரியர், பெற்றோர், மாணவர் சந்திப்பும் நடைபெறும்
விசேட ஆசிரியர் குழாம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org